# சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1998 ஆனி திங்கள் 15-ம் நாள் (29—6—67) வியாழக்கிழமை ரபி. அவ் 20 | புத்தகம் 20
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183 | இதழ் 49


சுதந்திரன்

## நஷ்ட ஈடு வேண்டும்

ஸ்ரீறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை அமுல்நடத்துவதற்கான மசோதா சட்டமாகி விட்டது. இதன்படி கட்டாய நாடுகடத்தல்கிடையாது. விரும்பினால் இந்தியாவுக்குச் செல்லலாம். விரும்பினால் இந்தியப்பிரசாவுரிமை கோரலாம். விரும்பினால் இலங்கைப் பிரசாவுரிமை கோரலாம். எல்லாம் விருப்பத்தைப் பொறுத்தவிஷயம். எதிலும் கட்டாயம் இல்லை. ஆனால் இந்தியப் பிரசாவுரிமையைப் பெற்றவர்கள், என்றாவதுஒருநாள்இந்தியாசெல்லவேண்டியவர்களே.

''நாடற்றவர்கள்'' என்போர் இந்தியக் குடியுரிமையைப் பெற்று விட்டால், அந்த விநாடியிலிருந்து இந்நாட்டுக்கு அன்னியர்களாகி விடுகின்றனர்—பிறநாடொன்றின் பிரசைகளாகி விடுகின்றனர். எனவே எந்தநிமிடத்திலும் இந்நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு அவர்கள் தயாராகவே இருத்தல் வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் இலட்சக்கணக்கில் இந்தியா திரும்புவார்களென்று கூறுகிறது இ. தொ. காங்கிரஸ். அவர்கள் ஒவ்வொருவரும் ரூ. 4000 எடுத்துச்செல்வதற்கான செலாவணி பற்றியும் பலத்த பேச்சு அடிபடுகிறது. இதுபற்றி பிரதமரும் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தோட்டத் தொழிலாளிக்குத் தனக்கென சொத்து எதுவும் கிடையாது அவனுக்குச்சொற்ப வேதனமே வழங்கப்படுகிறது. உடலோடு உயிரைப் பிணைப்பதற்கே அது போதாது.

உணவுக்கே போதாத ஊதியத்தைக் கொண்டு அவன் ஆயிரமாயிரமாகத் திரட்டி வைத்திருக்கிறான் என்று கூறுதல் அபத்தமாகும். வாழ்நாள் முழுதும் செந்நீரையும் கண்ணீரையும் கொட்டி உழைத்து, உழைத்து ஓடாய்ப்போன பஞ்சைப்பாரிகளான தொழிலாளரிடம் அரைக்காசுகூட கையில் இருக்காதே! ரூ. 4000க்கு செலாவணி கொடுப்பதுபற்றிபேசுவது அவர்களைக் கேலி செய்வதாகும்.

அவர்கள் வெறுங்கையுடன் இந்தியாவுக்குச் சென்று என்ன செய்வது? பாரதத்திலோ உணவுப்பஞ்சம் தலை விரித்தாடுகிறது. வங்காளத்திலே உணவுப் பொருள் கொள்ளை! பீகாரிலே பட்டினிச்சாவு. கேரளமெங்கும் பட்டினி ஓலம்! தமிழகத்திலே தி. மு. க. ஆட்சி ஏற்பட்டும் உணவுப் பிரச்சினை தீரவில்லை. அங்கு பர்மிய அகதிகள் பிச்சை எடுக்கின்றனர். புனர்வாழ்வு அளிப்பதாக இந்திய அரசாங்கம் செய்த பிரசாரம் வெறும் பேச்சளவிலேயே நின்று விட்டது.

இந்த நிலையில் தோட்டத்தொழிலாளர் கையில் காசின்றி, பிறர் கையை எதிர்பார்த்து இந்தியாவுக்குச் சென்றால், பர்மிய அகதிகளின் கதிதான் அவர்களையும் எதிர் நோக்கும்.

ஆகவே அவர்களுக்குப் போதிய நஷ்டஈடு, தொகையாக வழங்கப்படவேண்டும். நஷ்டஈடு வெறும் கண்துடைப்பாக இருந்துவிடக் கூடாது. போதிய நஷ்டஈடு கிடைக்குமென்ற உறுதி கிடைத்தாலன்றி அவர்கள் இந்தியப் பிரசாவுரிமை பெற விரும்புவார்களென்று கூறுவதற்கில்லை. எனவே நஷ்டஈடு, தொகையாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் உடனேசெய்யவேண்டும்.

# இலங்கை குடியுரிமை பெறுவதில் திடீர் ஆர்வம்

## மலையக மக்களின் மனமாற்றம்
## இ. இ. மசோதாவின் எதிரொலி

இலங்கை இந்திய மசோதா சட்டமாகியதையொட்டி மலையகத் தமிழ் மக்களிடையே ஒரு பரபரப்பு காணப்படுகிறதென்றும், அவர்களிடையே ஒருமன மாற்றம் ஏற்பட்டுள்ளதென்றும், இந்தியக் குடியுரிமை கோருவதைவிட இலங்கைக் குடியுரிமை கோருவதிலேயே அவர்கள் அதிக நாட்டம் கொண்டிருக்கிறார்களென்றும் மலைநாட்டில் பல பகுதிகளிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியாவுக்குத் திரும்புவதில் பயனில்லை என்ற பிரசாரம் தோட்டங்களில் பரவி வருவதாகவும், இதனால் தொழிலாளரிடையே மனமாற்றம் ஏற்பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல் மசோதா சட்டமாகியதும் மலைநாட்டில் தமிழர்களிடையே ஒருவித பரபரப்பு காணப்படுவதாக கூறப்படுகிறது.

இதனால்இலங்கைப் பிரஜாவுரிமை கோரி மனுச் செய்வதற்கு தங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பதாக அவர்கள் மகிழ்ச்சியடைவதாக மலைநாட்டில் பல பகுதிகளிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

இந்தியாவுக்குத் திரும்ப வேண்டுமென்று முன்பு அவர்களிடம் காணப்பட்ட ஆர்வம் இப்பொழுது படிப்படியாகக் குறைந்து வருகிறதென்றும், இதற்கான காரணம் இந்தியாவில் உணவுப் பஞ்சம் கடுமையாக இருக்கிறதென்று பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுவதும், இங்கிருந்து இந்தியாவுக்குச் செல்லுபவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க இந்தியாவில் எந்த ஏற்பாடும் இதுவரை செய்யாதிருப்பதுமேயாகும் என்று எமது நூரளை நிருபர் அறிவித்துள்ளார்.

ஆகவே இந்தியக் குடியுரிமை பெறுவதற்கு முன்பு எண்ணியிருந்தவர்களிடையே இப்பொழுது மனமாற்றம் ஏற்பட்டு வருவதாக, நூரளைப் பகுதி தோட்டத் தொழிலாளரிடம் விசாரித்ததிலிருந்து தெரிய வருதாக அவர்கூறுகிறார்.

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி ஏற்பட்டதும் அங்கு போக வேண்டுமென்ற ஓர் ஆவல் குறிப்பாக கம்பளை, நாவலப்பிட்டி அட்டன் பகுதிகளிலுள்ள தோட்ட வாலிபர்களிடம் திடீரென்று காணப்பட்டதாகவும், உணவுப் பிரச்சினை உட்பட தமிழ் நாட்டுப்

(9-ம் பக்கம் பார்க்க)

## போதன மொழி
### தினபதியின் தினப்புளுகு

பிள்ளைகளின் போதன மொழி தாய் மொழியா, அல்லது பெற்றோர் விரும்பும் மொழியா என்பது பற்றி அமைச்சரவை இன்னும் முடிவுக்கு வரவில்லையென்றும் போதன மொழியைப் பெற்றோரின் இஷ்டத்துக்கு விட அமைச்சரவை முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுவது 'முழுப்பொய்'என்றும் அமைச்சரவை வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

# ஆலயப் பிரவேசத்தை தடுத்தவர்களுக்கு தண்டனை
## சிகை அலங்கரிப்பு வழக்கும் வெற்றி

சிறுபான்மைத் தமிழர் ஒருவரைத் தாழ்த்தப்பட்டவர் என்ற காரணத்துக்காக கோயிலுக்குள் செல்ல விடாது பலாத்காரமாக தடுத்ததாக இருவர் மீது தொடரப்பட்ட வழக்கொன்றில், தடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இருவருக்கும்நீதிமன்றத்திலல்சென்றவாரம் தலாரூ100 அபராதம் அல்லது ஒரு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வழக்காளியின் சார்பில் கோப்பாய் எம். பி. வழக்கறிஞர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஆஜராகியிருந்தார். இதே போல சிகையலங்கார நிலையமொன்றில் முடிவெட்டமறுத்ததாகத் தொடரப்பட்ட வழக்கொன்றிலும் முடி வெட்டமறுத்தவருக்கு ரூபா100அபராதம் அல்லது 6மாத கடூழியச் சிறை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டங்களின்படி ஆலயத்துள் பிரவேசிப்பவரை தடுப்பவர் மீது நடவடிக்கையெடுக்க முடியுமா என்பதையும் அனுமதி மறுப்பவருக்கு தண்டனை கிடைக்க வழியிருக்கிறதா என்பதையும் கண்டறியும் பொருட்டு ஒரு பரீட்சார்த்த வழக்காக முதன் முதல் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது இந்த வழக்கில் வழக்காளியின், சார்பில் கோப்பாய்ப் பிரதிநிதியும், தமிழரசுக் கட்சியின் தீண்டாமை யொழிப்புக் குழுவின் உறுப்பினருமான வழக்கறிஞர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஆஜராகியிருந்தார்.

இவ் வழக்கு விசாரணையை பருத்தித்துறை நீதவான் திரு. கே. வினராஜா நடத்தினார். இவ் வழக்கில் முருகன் இலக்குமணன் என்பவரை செல்வச்சந்நிதி கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டவர் என்ற காரணத்துக்காகப் பிரவேசிக்க விடாமல் தடுத்ததாக தங்கவேல், சுப்பிரமணியம் ஆகிய இரண்டுபேர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இரு எதிரிகளையும் குற்றவாளிகளாக கண்ட நீதவான், தலா ரூபா 100 அபராதம், அல்லது ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

(9-ம் பக்கம் பார்க்க)



அண்மையில் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சேக்கிழார் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் போது பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசிக்கொண்டிருக்கிறார். மேடையில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை (தலைகுனிந்து இருப்பவர்) தமிழகத்தின் தருமபுர ஆதீனத்தின் இளவரசு தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் ஆகியோர்வீற்றிருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபுகளே இஸ்ரேலை வாழ வைப்பர்!

(ஒரு கருத்து)

இஸ்ரேலினுடைய விமானப் படையினுடைய திறத்தைக் கண்டு வியக்கும் எதிரிகள் அமெரிக்காவும், பிரிட்டனும் அவர்களுக்கு உதவி செய்திருக்க வேண்டும் என்று எண்ணியது மடைமைத்தனம். முதல் நாளிலேயே 374 விமானங்களை சுட்டு வீழ்த்தினர்கள். ரேடாருக்கு அகப்படாமல் கடல் வழியே சென்று தரையில் நின்ற விமானங்களை அழித்தனர். இதனுல் எகிப்தின் விமானப் படைகள் செயலற்றுவிட்டன. எகிப்து சுட்ட இஸ்ரேலிய விமானங்களோ மிகவும் சொற்பம். இதனுல் எகிப்து தரைப்படையுடனேயே இஸ்ரேலித் தாக்குதலைச் சமாளிக்க வேண்டியிருந்தது. இதனுல் சினையை இழக்க வேண்டி நேரிட்டது.

முக்கிய தாக்குதல் எகிப்தினிடமிருந்தே வந்தது. இஸ்ரேலும் எகிப்தையே தாக்கிற்று. இதனுல் எகிப்தை இஸ்ரேல் அழித்தது வியப்பில்லை. ஜோர்டான், முதல் நாட் போரிலேயே இஸ்ரேலியருடைய திறமையைக் கண்டு, போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டனர். சிரியா தாக்குதலில் பின்வாங்க நேரிட்டதால் டெல் அவிவை விமானத்தால் தாக்க முடியவில்லை. எகிப்தியருக்கு என்ன நடக்கின்றதென்றே தெரியவில்லை. பிழையான பிரசாரத்னுல் நாடெங்கும் நாசர் தூண்டிவிட்டதால் எகிப்தியரோ? தாமே வெல்வதாகக் கடைசி வரையும் நம்பினர். சூயெசின் கிழக்குக் கரையில் வந்த பிறகே இஸ்ரேலியரின் வெற்றியை எகிப்தியருக்கு அறிவிக்கப்பட்டது.

### சுட்டு வீழ்த்தப்படாதது ஏன்?

அமெரிக்கா 6-வது கடற்படையை அனுப்பியது பிழையா? ரசியா தானே முதலில் தன் படையை டார்டெனல்சுக்கூடாக அனுப்ப முனைந்தது. இது துருக்கியினுல் வெளியிடப்பட்ட இரகசியம். 6-வது கடற்படை அங்கிருக்காவிட்டால், ரசியப் படை அரபுப் படைக்கு உதவியிருக்குமே? அமெரிக்காவும் பிரிட்டனும் விமானங்களை உதவியிருந்தால், அதுவும் இஸ்ரேலிய விமானங்களை 3792 ஆக உயர்த்தியிருந்தால், எகிப்திலோ மற்ற நாடுகளிலோ ஏன் அவ் விமானங்களில் ஒன்று கூடச் சுட்டுவீழ்த்தப் படவில்லை?

### பொய் வதந்தி

மற்றும், நாசர் ஜோர்டான் மன்னருடன் இவ் வதந்தியைப் பரப்புவோம் என்று ஒப்புதல் கேட்ட ஒலியை டெல் அவிவில் மறு ஒலிபரப்புச் செய்தார்கள். இக்குரல் நாசரினுடையதே என்று பிரபல ஒலியியல் அறிஞர்கள் ஒத்துக்கொள்கின்றனர். மற்றும் பிரிட்டனின் படைகள் இஸ்ரேலுக்கு எவ்வளவோ தொலையில் நின்றன. மால்டாவும், ஏடெனும் தான் இஸ்ரேலுக்கு மிக அருகில் உள்ள பிரிட்டிஷ் தளங்கள்! அமெரிக்கா உதவியிருந்தால், அதனருகே நின்ற ரசியப்படைகள் பூப்பறிக்கவா போயிருக்கும்? பொய் வதந்தி இது.

அக்கபா வளைகுடாவை மறித்தது நாசர் எதிர்பார்க்க முடியாத அளவுக்குக்கொண்டு போய்விட்டது. நாசர் இஸ்ரேலியர்கள் பாலஸ்தீன் அகதிகளைத் திரும்பப் பெற்ருல் அக்கபாவை உபயோகிக்கலாம் என்று நிபந்தனை போட நினைத்தார். அகதிகள் இஸ்ரேலுள் வந்தால் அரபு நாடுகளின் ஒற்றர்களாகப் பணியாற்றுவது நிச்சயம். யூதப் படைகளா மசிபவர்? விளைவு இதுதான்.

### இஸ்ரேல் செய்தது

துருக்கி டார்டெனல்சுக்கூடாக ரசியாவைப் போக விடாது தடுத்தால் ரசியா என்ன செய்யும்? அதைத் தான் இஸ்ரேல் செய்தது. இஸ்ரேல் வாழ்வதற்கு, எய்லட் ஒரு குருதி நாடியாகும். இனியும் இஸ்ரேலை அழிக்க, 'யெகாட்' நடத்துவது முடியாத காரியம்.

இஸ்ரேல் தோற்றிருந்தால் யூதர்களினுடைய முடிவே இதுதான்- கி. மு. 3000 த்திலிருந்து வரலாறு தன்னையே திருப்பிக் காட்டுகின்றது- எனலாம். ஆனுல் யூத இனம் வாழ்வதற்குப் போரிடுகின்றது. அது வாழட்டும்.

போருக்குப் பின் என்ன நிலை? முன்பும் இப்படித் தானே-ஜெர்மனி யூதரை அழித்தது. ஆனுல் யூத இனம் வாழ்வதற்கு மேற்கு ஜேர்மனி இன்று அராபியர்களை எத்தனையோ தொல்லைக் கிடையில் எதிர்க்கின்றது. அராபியர்களும் இப்படியே இஸ்ரேலை வாழ வைக்க கைகொடுப்பார்கள் வருங்காலத்தில்!

### ரசியாவுக்கு வெற்றி

மேற்கு நாடுகளை எகிப்தின் பொய்ப் பிரசாரத்தால் பிழையாக உணர்ந்து கொண்ட அரபுநாடுகள் தவறை விரைவில் உணர்ந்துவிடும். ரசியாவுக்கு இது மாபெரும் வெற்றி.

இஸ்ரேல் ஒரே ஒரு முறை தான் பிழை செய்தது. 1948ஐ நினைவு வைத்திருந்த பென்குரியன் இஸ்ரேலை விஸ்தரிக்க நைலிலிருந்து யூப்பிரதீசு வரை பரந்த யூத சாம்ராஜ்யத்தை கண்டு களிக்க-மோசே தயானை 1956 இல் சினைக்குள் அனுப்பியது மாபெரும் பிழை. புகைந்து கொண்டிருந்த தீயைக்கிளர்ந்தெழச் செய்தது அது. அதன் விளைவுதான் இன்று நாசர் புகழேணியின் உச்சிக்கு ஏற்றப்பட்டு, இரு நாட்களுள் அதல பாதாளத்துள் வீழ்த்தப்பட்டது!

இஸ்ரேலின் உருவாக்கம் வரலாற்றில் நடந்து விட்ட மாற்ற முடியாத ஒரு தவறு- இனி அதைப் பொறுப்பது தான் ஒரே செயல்.

**துன்னலை விக்கிரம பாஸ்கரன்**

### ஒரு பத்திரிகை [illegible]

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 40 தினசரிப் பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன. அவற்றின் தினசரி விற்பனை 62 இலட்சம் பிரதிகளாகும். வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள் சுமார் 70 இலட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன.

சராசரி ஒவ்வொரு குடும்பமும் ஒரு தினசரியும் இரு சஞ்சிகைகளும் விலைக்கு வாங்குகிறது. பல்வேறு மதங்களைச் சேர்ந்த 31 பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இங்கு வெளியிடப்படுகின்றன.

# விஞ்ஞான் ஆசிரியர்-விசுவராசன்

(4)

விஞ்ஞான ஆசிரியர் விசுவராசனைச் சிறப்பாக விஞ்ஞானத்துறையில் ஈடுபட்டிருப்போரும் பொதுவாக ஏனையோரும் நன்கு அறிவர். அவர் பெற்றது பி. எஸ். ஸி. பட்டமாயினும் அவர் அறிவு பட்டத்துக்கு அப்பாற்பட்டது. அவர் ஒரு விஞ்ஞான மேதை.

அவருடைய விஞ்ஞானக் கட்டுரைகள் இலங்கை வார இதழ்களிலும் வெளிநாடுகளின் பிரபல ஆங்கில இதழ்களிலும் வெளிவந்திருக்கின்றன. இன்றும் வந்துகொண்டிருக்கின்றன.

விஞ்ஞானத்துறையில் ஒப்பில்லா அறிவும் விஞ்ஞான உலகில் அளப்பரும் புகழும் பெற்றிருந்த அவர் உலக விவகாரங்களைப் பொறுத்த வரை ஒரு குழந்தைக்குச் சமம் ஆவார். தாம் ஈடுபட்ட துறையில் மேதையாக இருக்கும் பலர் உலக விவகாரங்களில் குழந்தைகளாக இருக்கிருர்கள். இப்படிப்பட்ட குழந்தை உள்ளம் படைத்த இவரிடம் உள்ள ஒரு குறை மனைவிக்குப் பயந்து நடப்பது. அது அவருக்கு ஒரு குறையாகத் தெரியாத காரணத்தால் இன்னும் பயந்து நடந்துகொண்டே இருக்கிருர்.

விஞ்ஞான ஆசிரியர் விசுவராசன் பிறவியில் ஏழை அரசாங்க உதவியினுலும் அயரா முயற்சியினுலும் படித்துப்பட்டம் பெற்ருர். அடக்கமும் பணிவும் அவருடன் கூடப் பிறந்தவை.

அவருடைய மனைவி லீலா செல்வக் குடும்பத்தில் பிறந்தவள். நீதிபதியின் ஒரே மகள். மற்றவர்களைத் தண்டிப்பதில் பெருமை அடைபவள். அகங்காரமும் வாயாடித் தனமும் அவளுடன் பிறந்தவை. நீதிபதி இறந்தபின் செல்வ நிலை சிறிது குறைந்த காரணத்தால் விஞ்ஞான ஆசிரியர் விசுவராசனுக்கு மனைவி ஆனுள். நீதிபதி உயிருடன் இருந்திருந்தால் இரண்டாயிரத்துக்குக் குறைந்த சம்பளம் வாங்கும் ஒருவருக்கு அவள் மனைவியாகும் நிலை ஏற்பட்டிராது.

அவளால் விசுவராசனின் விஞ்ஞான அறிவைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மேதைகளுக்கு எப்போதுமே அவர்களது அறிவைப் புரிந்து கொள்ளும் மனைவி கிடைப்பதில்லை. மேதைகளும் மனைவி புரிந்துகொள்ள வேண்டும் என்ருே பாராட்ட வேண்டும் என்ருே எதிர்பார்ப்பதில்லை. அது ஞாயமும் கூட. வெளியுலகில் புகழ் உள்ளவர்கள் மனைவி மதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. வெளியுலகில் மதிப்பு இல்லாதவர்கள் தான் 'அற் வீஸ்ற்' மனைவியாவது மதிக்க மாட்டாளா? என்று ஏங்குவார்கள். மதிக்கவில்லை என்ருல் சண்டையும் செய்வார்கள் விஞ்ஞான மேதையை விஞ்ஞானம் தெரிந்தவர் பாராட்டும் போதே பாராட்டுக்குப் பெறுமதி உண்டு. தமிழ் அறிஞரைத் தமிழ் அறிந்தவர் பாராட்டும் போதே பாராட்டுக்குப் பெறுமதி உண்டு. இசை வல்லுநரை இசை தெரிந்தவர் பாராட்டும் போதே பாராட்டுப் பெறுமதி உடையதாகும். அந்த அந்தத் துறையில் அறிவு இல்லாதவர்கள் பாராட்டினுலும் ஒன்றுதான், பாராட்டாவிட்டாலும் ஒன்றுதான்.


விசுவராசனின் மனைவி லீலாவுக்கு விசுவராசனின் விஞ்ஞான அறிவு எத்தகையது என்பது தெரியாதே அல்லாமல் அவருடைய சம்பளம் எவ்வளவு என்பது தெரியும். செல்வக் குடும்பத்தில் இருந்த ஒருத்தி நீதிபதியின் ஒரே புதல்வி தானுற்று ஐம்பது ரூபா சம்பளம் வாங்கும் விசுவராசனை மதிப்பாளா? இந்தச் சம்பளத்தில் வீட்டு வாடகை உடை உணவு போகக் கொழும்பில் ஒரு வேலைக் காரனையும் வைத்திருக்க முடியுமா?

தேநீர் தயாரிக்கக் கூடத் தெரியாத அளவுக்குச் செல்லமாக லீலாவை வளர்த்தார் அவருடைய தந்தை நீதிபதி. அதனுல்இப்போது அவளுக்குக் காலையில் எழுந்ததும் தேநீர் தயாரித்துக் கொடுப்பது விசுவராசனின் வேலை. மூன்று நேரமும் உணவுக் கடையிலிருந்து உணவு கொண்டுவந்து கொடுப்பதும் அவருடைய வேலை. (அவருடைய தலைவிதி என்றும் சொல்லலாம்.) மனைவி நல்ல ஆடம்பர உடை உடுத்து உடை நலுங்காமல் இருக்க, தாம் தேநீர் தயாரிப்பதோ உணவுக் கடைக்குச் சென்று உணவு கொண்டு வருவதோ அவருக்கு மானக் குறைவாகத் தெரியவில்லை. தெரியாத காரணத்தால் அத்திருப் பணிகளை இன்றும் அவர் தொடர்ந்து செய்து வருகின்ருர்.

கணவனைக் கொண்டு குற்றேவல் செய்விப்பதை தனது திறமையாக நினைத்தாள் லீலா. தன்னுடைய தோழிகளைச் சந்திக்கு போதெல்லாம், தான் நித்திரையாக இருக்கும் போதே தன் கணவன் எழுந்து தேநீர் தயாரித்துக் கொடுப்பது—பின்னர் கடைக்குச் சென்று உணவு வாங்கி வருவது— இவைகளைச் சொல்லி விசுவராசன் தன்னை அதிகம் மதிக்கிருர் என்றும் கூறுவாள். தன்னுடைய குறைபாட்டை- தன்னுடைய திறமையாக அவள் கருதியமையால்-அவள் நினைக்கும் திறமையை அதாவது குறைபாட்டை மேலும் வளர்த்தாள்.

லீலா எதையும் குறைப்பதையே நாகரிகம் என்று நினைப்பவள். அதிக கூந்தல் இருப்பது நாகரிகம் இல்லை என்று ஆங்கிலப் பெண்களைப்போலக் கூந்தலைக் குறைத்துக் கொண்டாள். பழைய காலத்துப் பெண்மணிகளைப் போல உடையணிவது நாகரிகம் இல்லையென்று உடையையும் குறைத்துவிட்டாள். உடல் பெருத்தால் அழகு குறைந்து விடும் என்று உணவையும் குறைத்தாள். அதுபோல விசுவராசனின் பெயரையும் 'ராச்' என்று குறைத்துச்

(14-ம் பக்கம் பார்க்க)



## கவிதைப் பூங்கா

### புது முறைக் கவி அரங்கு—(2)

கவிஞர்களே!

இங்கு விளக்கப்படும் நிகழ்ச்சியைக் கொண்டு ஒரு கவிதை இயற்றி அனுப்புங்கள். கவிதை வெண்பாவாகவோ, விருத்தமாகவோ, வேறு எவ்வகையாகவோ இருக்கலாம். 25-7-67 க்கு முன்னர் கவிதை அனுப்பப்படல் வேண்டும்.

நிகழ்ச்சி

பிறமொழியினர் ஒருவர் தமிழ் மொழியை விரும்பிக் கற்கிருர். தமிழின் இலக்கண இலக்கியங்களைக் கற்றுச் சுவைத்துத் தெளிவுபெறுகிருர். தமிழ் இன்பத்தில் ஈடுபட்ட அவர் தமிழைப் பாராட்டி ஒரு பாட்டுப் பாடுகிருர். அவர் பாடியதாகக் கற்பனை செய்து ஒரே ஒரு கவிதைமட்டும்இயற்றி அனுப்புங்கள். கவிதைகளிற் சிறந்தவை 5-8-67-ந் திகதி சுதந்திரனில் வெளிவரும். மிக மிகச் சிறந்த கவிதைக்கு ஒரு பரிசும் உண்டு.

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

புது முறைக் கவிதை
'சுதந்திரன்'
த. பெ. எண் 1183
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி. டி. கணேஷன்,
கொழும்பு-3.

கே: அரசாங்கம் குதிரைப்பந்தயக் கடைகளைச் சட்டபூர்வமாக்கி லைசன்சு வழங்கப்போகிறதாமே! அதைச் செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே போலிசார் இந்தக் கடைகள் மீது படையெடுத்தார்கள் என்று கூறுகிறார்களே?

ப: அப்படியா? செய்தி கிடைக்காமல் பொய்யும் புளுகும் வெளியிட்டுக்கொண்டிருக்கும் பத்திரிகைகளுக்கு இது ஒரு நல்ல செய்தி!

ஃ

அப்துல்காதர்,
மருதமுனை.

கே: கல்வியில் முன்னேறுவதெப்படி?

ப: அது தத்தம் திறமையைப் பொறுத்த விஷயம்.

ஃ

எம். எம். அபூபக்கர்,
மன்னார்.

கே: கவலையில்லாத மனிதன் யார்?

ப: காதலிலோ, கல்யாணத்திலோ சிக்கிக் கொள்ளாதவன்.

கே: காதல் எங்கிருந்து பிறக்கிறது?

ப: உடலின் வெளிப்பகுதியிலிருந்து.

கே: பெண்களின் அழகிற்கு சில ஆண்கள் அடிமைப்படுகிறார்களே?

ப: அது முதலில். பின்னர் அதே பெண்கள் ஆண்களுக்கு அடிமையாகி விடுகிறார்கள்.

ஃ

எஸ். எம். சுந்தரலிங்கம்,
விராலிப்பத்தனை.

கே: இந்தியா அணுகுண்டு தயாரிக்காது என்று இந்தியப் பிரதமர் கூறியுள்ளாரே ஏன்?

ப: இந்தியாவில் இன்று பல கோடி மக்கள் பட்டினியால் வாடுகின்றனர் அவர்களின் பசிக்கு அணுகுண்டைக் கொடுப்பதில் பயனில்லை என்று பிரதமர் எண்ணியிருக்கலாம். அவசியமானால் ஆறு மாதங்களில் அணுகுண்டை இந்தியா தயாரிக்க முடியும் என்று இதே பிரதமர் முன்பு கூறியிருந்தார். அணுகுண்டு தயாரிப்பவர்கள் தயாரிப்பதாகப் பறைசாற்றிக் கொண்டா தயாரிப்பார்கள்?

ஃ

ஆ. தமிழரசி,
கரவெட்டி.

கே: திரு. பொ. தற்பொழுது என்ன செய்கின்றார்?

ப: அடுத்தபடியாக எதை எதிர்க்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறாராம்.

ஃ

தமிழ்மாறன்,
அக்கரைப்பற்று.

கே: நான் திருமணம் செய்யப் போகும் பெண்ணிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். என்னமாதிரியான கேள்விகள் கேட்கலாம்?

ப: எந்தமாதிரியான கேள்விகளை நீங்கள் கேட்டாலும் பதில் கிடைக்காது. ஏனெனில் கேள்விகேட்கும் உரிமை பெண்ணுக்குத்தான் உண்டு. பதில் சொல்ல வேண்டியது தான் ஆணின் உரிமை.

ஃ

நாகராஜன்,
தாளங்குடா.

கே: இக்காலக் குமரிப் பெண்களுக்கும் அக்காலக் குமரிப் பெண்களுக்கும் வித்தியாசம் என்ன?

ப: மனோநிலையிற்தான் வித்தியாசம். ஆண்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு அன்றையக் குமரிகள் தங்களின் எடுப்பான அங்கங்களை கூடியளவு மறைத்துக்கொண்டனர். இன்றையக் குமரிகளோ அதே நோக்கத்துக்காக அங்கங்களை கூடியளவு மறைக்காமல் விடுகின்றனர்.

கே: கிளாஸ் நைலோன் 'கண்ணகி'களையே தினம் தாங்கி வெளிவந்துகொண்டும் படுக்கையறை செய்திகளைப் பிரசுரிக்கும் தரம் கெட்ட ஒரு தமிழ் மாலைத் தினசரி பத்திரிகையைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: தரம் கெட்டதென்ற உங்களின் கூற்று சரியென்பது இப்பத்திரிகையை வாங்கும் வாலிபர்கள் மறைத்து மறைத்து வாசிப்பதிலிருந்து தெரிகிறது.

ஃ

மகேஸ்வரி,
கொழும்பு.

கே: மாவட்டசபையை திரு. பொ. ஆதரித்து, பின்னர் எம். பி. பதவியை துறந்ததும், பொ. கட்சியின் மற்றைய எம். பி.கள் என்ன செய்வர்?

ப: அவர்களும் பதவிகளைத் தூக்கி வங்காளக் குடாவில் எறிந்துவிட்டு, தங்கள் தலைவருடன் கைகோத்துக் கொண்டு வயலில் இறங்கி கமம் செய்யத் தொடங்கிவிடுவர்.

கே: இந்து என்றால் தமிழ். இந்து பல்கலைக்கழகம் என்றால் தமிழ் பல்கலைக்கழகத்தையே குறிக்கும் என்றார் திரு. ஜீ. ஜீ. இது எவ்வளவுக்கு பொருந்தும்?

ப: பொருந்தும் பிரச்சினை அல்ல இங்கே இருப்பது? தமிழ் பல்கலைக்கழகத்தை ஆதரிப்பதற்காக அவர் அத்திவாரம் அமைக்கிறார் என்பது உங்களுக்கு விளங்கவில்லையா?

ஃ

ஆ. செல்வராஜ்,
தலவாக்கொல்லை.

கே: திரு. பொ. மலைநாட்டில் ஒரு தொழிற்சங்கம் அமைக்கப் போவதாக ஒரு செய்தி தாண்டவமாடிக்கொண்டு இருக்கிறதே. அப்படி அமைத்தால் என்ன?

ப: அந்தச் சங்கமும் தாண்டவமாடும் ததிங்கிணதோமென்று.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: குயுக்தியாரே, சமீபத்தில் நடந்த திடுக்கிடும் செய்தி ஏதாவது இருந்தால் கூறுங்களேன்?

ப: சீனக்காரன் போட்ட ஹைஹு—குண்டில் அம்புலி சுக்கு நூறாக உடைந்து சிதறி விட்டது. இப்பொழுது சந்திரனாகக் காட்சியளிப்பது உடைந்து சிதறிய துண்டிலொன்றுதான்.

ஃ

என். செல்வம் லோரன்ஸ்,
நோர்வூட்.

கே: மலைநாட்டில் சிங்கள தொழிலாளர்களைக் குடியேற்றினால்......?

ப: பயப்படாதீர்! 5,25,000 பேர் இந்தியாவுக்குக் கப்பலேறினால்தான் அப்படிச் செய்ய முடியும்.

ஃ

மா. குலேந்திரன்,
இரத்துமலானை.

கே: அரசியல் பேசும் ஆசிரியரைத்தண்டிக்கும் கல்விமந்திரி மது அருந்தி மாணவருடன் தகாத முறையில் நடந்துகொள்ளும் ஆசிரியரை தண்டிக்காது இருப்பது முறையா?

ப: மதுவிலும் அரசியலில் வெறி அதிகம் என்பது அமைச்சர் கண்ட முடிவு.

> திருவாவர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> 194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
> கொழும்பு-12

சுதந்திரவீரன்,
ஏழாலை மேற்கு.

கே: அடுத்ததேர்தலில் தமிழ் பேசும் மக்களுக்குத் தாங்கள் என்ன செய்ததாக தமிழ் காங்கிரசார் கூறுவார்கள்?

ப: தமிழரசுக் கட்சியின் திட்டங்களை ஒன்றுகூட விடாமல் எதிர்த்தது தாங்கள் தான் என்று கூறுவார்கள்.

ஃ

அ. இரத்தினசிங்கம்,
பிரம்படி.

கே: இக்காலத்து கன்னிப் பெண்கள் சிலர் ஆங்கில மாதர்களைப்போல உயரமான கவுண்களை முதுகுப்புறமும் நெஞ்சுப் புறமும் தெரியத் தக்கதாக வெட்டுக்களைப் போட்டு அணிந்துகொண்டு தெருக்களில் நடமாடுகிறார்களே?

ப: கொஞ்சம் பொறுங்கள்! அவர்கள் விரைவில் 'டொம்லெஸ்' உடைக்கு வந்துவிடுவார்கள், அப்பொழுது பாருங்கள் வேடிக்கையை!

ஃ

வி. சகாதேவன்,
கண்டி.

கே: நாகரிக உடை அணியும் தற்காலப் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவர்கள் உடையா அணிகிறார்கள்? மரவுரி அல்லவா அணிகிறார்கள்!

ஃ

எஸ். எம். ஆர்.,
திருமலை.

கே; 'அபிவிருத்தி திட்டம்' என்று அடிக்கடி தினசரிப் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்களே, அது என்ன திட்டம்?

ப: இதில் ஒன்றும் புதுமை கிடையாது. எல்லாம் பழைய திட்டம்தான். பழைய திட்டத்தைக் குறைந்த நேரத்தில் அதிகச் செலவில் செய்தால், அதற்கு 'அபிவிருத்தித் திட்டம்' என்ற புதிய பெயரைச் சூட்டிவிடுகிறார்கள்.

ஃ

ராஜன்,
பதுளை.

கே: நான் என் அத்தை மகளைக் காதலித்து வந்தேன். இப்பொழுது என் மனம் வேறோர் இடத்தில் லயித்துவிட்டது. ஆனால் என் காதலியை மறக்க முடியவில்லை, என்ன செய்யலாம்?

ப: உடனடியாக காதலியை திருமணம் செய்துகொள்ளுங்கள். பின்னர் காதலியை மட்டுமின்றி லயிப்பையும் மறந்து விடுவீர்.

ஃ

திருநாவுக்கரசு,
கொழும்பு-6.

கே: பக்கத்துவீட்டுப் பெண் ஒருத்தி என்னைக் காணும்போதெல்லாம் சிரிக்கிறாள். நான் என்ன செய்ய வேண்டும்

ப: நீங்களும் சிரியுங்கள். ஆனால் அதற்கு முன்பு அவளுடைய சிரிப்பை ரசித்து, அந்தச் சிரிப்புக்குப் பின்னால் பதுங்கிக் கிடக்கும் எண்ணத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஃ

டி. ஆர். எஸ். சூசை,
கொழும்பு-10.

கே: அதிக அறிவாளிகள் ஆண்களா? பெண்களா?

ப: பெண்கள் தான்! அறிவாளிகளான ஆண்களை ஆண்டு அனுபவிக்கும் அறிவு அவர்களிடம்தான் இருக்கிறது.



தேவை!
உயர்ந்த உள்ளம்

உயர்ந்தரக துணிகள் மீண்டும் இறக்குமதி செய்யப்படும்.

— செய்தி

— உயர்ந்த உள்ளங்களையும் இறக்குமதி செய்தால் இங்குள்ள சில அரசியல் வாதிகளுக்கு பயனளிக்கு மென்கிறார் ஓர் இறக்குமதியாளர்.

இது பிச்சை இல்லையா?

பிச்சை பணிசை உண்ணும் நிலைமைமாற வேண்டும்.

— கல்வி மந்திரி

— அரசாங்கம் கொடுக்கும் பிச்சையரிசியை மட்டும் உண்ணலாம் என்கிறாரோ!

ஆவியும் டாக்டரும்

அரசாங்க டாக்டர்கள் தாமதமாக வேலை செய்யத்தீர்மானித்துள்ளனர்.

— செய்தி

— இதற்கு முன் எப்பொழுது சுறு சுறுப்பாக வேலை செய்திருக்கிறார்கள் அரசாங்க டாக்டர்கள் என்று கேட்கிறது அரசாங்க ஆஸ்பத்திரியொன்றின் அசட்டையால் இறந்து போன ஒரு நோயாளியின் ஆவி.

பகற்கனவு

மார்ட்டின் கமிஷன் அமுல் நடத்தப்படமாட்டாதென ஜீ. ஜீ. நம்பிக்கை.

— செய்தித்தலைப்பு.

— காணுவதை யாவது இராக்கனவாகக் காணக் கூடாதா? பகற்கனவுதான் காண வேண்டுமா?

ஏட்டுச் சுரைக்காயா?

விவசாயிகளுக்கு புதிய கடன் வசதிகள் வழங்கப்படும்.

— செய்தி

— வெறும் ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்பது விவசாயிகளுக்கு நன்கு தெரியும்.

போதனையும் சாதனையும்

ஓர் இனத்தின் பெருமை அதன் தாய் மொழி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது.

— கல்வி மந்திரி

— அதனால் தான் தாய் மொழி மூலம் கல்வி போதிப்பதை எதிர்க்கிறாரோ கல்வியமைச்சர்?






பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி: தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தூதுவராகத் தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவாரா?

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராக ஒரு தமிழர் நியமிக்கப்பட வேண்டும் என்ற நீண்ட நாட் கோரிக்கைக்குத் தமிழக முதலமைச்சர் தெரிவித்துள்ள ஆதரவு, இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் புதிய நம்பிக்கையை யூட்டியுள்ளது. தமிழக முதலமைச்சரின் கோரிக்கைக்கு டெல்லி செவிசாய்க்கும் என்றும், விரைவில் தமிழர் ஒருவர் இந்தியத் தூதுவராக இங்கு பொறுப் பேற்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை வாழ் இந்தியர்களில் பெரும் பாலானவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், அவர்களின் நலன்களை கவனிக்க தமிழர் ஒருவரை இலங்கையில் இந்தியத் தூதுவராக நியமிக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழித் தமிழர்கள் கோரி வந்திருக்கிறார்கள். இந்திய வம்சாவழித் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்ட பல மன்றங்களும் கழகங்களும் இந்தக் கோரிக்கையை டெல்லி அரசிடம் சமர்ப்பித்திருந்தன.

எனினும் டெல்லி அரசு இந்தப் பிரச்சினையில் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை. மீண்டும் மீண்டும் தமிழரல்லாத தூதுவர்களையே இலங்கைக்கு தொடர்ந்து அனுப்பி வந்துள்ளது.

தமிழரல்லாத தூதுவர்களுக்கு. தமிழ் மக்களாகிய இந்தியர்களின் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றலோ, அவாவோ இருக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. இலங்கை இந்தியர்களின் நலன்களில் அக்கறை காட்டாதது ஒரு புறமிருக்க, தமிழ் நாட்டுத் தலைவர்களையே சரிவரத் தெரியாதவர்களை இலங்கைத் தூதுவரக அதிகாரிகளாக இந்திய அரசு அனுப்பி வைத்தது. இதனால் காமராசர் யார் என்பதே தெரியாதவர்கள் பலர் இந்திய தூதுவரகத்தில் பணிபுரிந்து வரும் நிலைமை ஏற்பட்டது.

தி. மு. க. ஆட்சி பீடமேறியதும் இலங்கை தூதுவர் தமிழராயிருக்க வேண்டும் என்ற கோரிக்கை புது வடிவம் பெற்றுள்ளது. இந்தக் கோரிக்கையை ஆட்சிக்கு வர முன்பிருந்தே தி. மு. க. ஆதரித்து வந்திருக்கிறது.

அண்மையில் சென்னை சட்ட மன்றத்தில் உரையாற்றுகையில், இலங்கையில் நியமிக்கப்படும் அடுத்த தூதுவர் ஒரு தமிழராக இருக்க வேண்டும் என்று தமிழக அரசாங்கம் டெல்லியிடம் வற்புறுத்தியிருப்பதாக கூறியிருந்தார்.


அறிஞர் அண்ணாவின் இந்த அறிவிப்பு இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் மத்தியில் — குறிப்பாக இந்திய வம்சவழித் தமிழர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை இந்திய ஒப்பந்தம் அமுல்நடத்தப்படும் பொழுது இந்தியாவுக்கு குடிபெயரவிருக்கும் இந்திய வம்சாவழித் தமிழர்


# ராணி

அழகிகளைத் தெரிவு செய்து அழகிய பரிசொன்றைப் பெறுங்கள்.


## 1 ஆம் பரிசு

சிங்கர் தையல் மெஷின் (கபினெற் மொடல்) அல்லது ரூ. 1000/- ரொக்கம்.




## 2 ஆம் பரிசு

ஒரு குருண்டிக் பாட்டரி ரேடியோ அல்லது ரூ. 525/- ரொக்கம்.




## 3 ஆம் பரிசு

ஒரு ஹம்பர் சைக்கிள் அல்லது ரூ. 300/- ரொக்கம்.




## 4 ஆம் பரிசு

டயமன் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் சமையல் பாத்திரங்கள் கொண்ட பொட்டலம் அல்லது ரூ. 185/- ரொக்கம்.



முதலாவது பரிசு முதலாவதாகக் கிடைக்கப்பெறும் துப்பரவான, சரியான விடைக்கு வழங்கப்படும். இவ்வாறே 2ஆம், 3ஆம், 4ஆம் பரிசுகள் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் நான்காவதாகவும் கிடைக்கப்பெறும் துப்புரவான சரியான விடைகளுக்கு வழங்கப்படும்.



மேலேயுள்ள படத்தில் இலங்கையின் பண்டைய அரசிகளில் ஒருவரான பத்மாவதி குளித்துக் கொண்டிருக்கிறார். அவரைச் சூழ அவருடைய சேடிமாரும் மற்றும் பல அழகிகளும் காணப்படுகின்றனர். இவர்களுடைய முகங்கள் மறைந்திருக்கின்றன.

நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய காரியம் மிகவும் இலகுவானது. படத்தில் எத்தனை முகங்கள் உண்டு என்பதை எண்ணிப் பார்த்து, உங்கள் பதிலைக் கீழேயுள்ள பத்திரத்தில் எழுதி அந்தப் பத்திரத்தை ராணி சந்தன சோப் உறையொன்றுடன் த. பெ. 1119, கொழும்பு என்னும் விலாசத்துக்கு அனுப்ப வேண்டியதே.

மேலேயுள்ள படத்தில்....... ராணி அழகிய முகங்கள் காணப்படுகின்றன.

பெயர்: ..............................

வயது ..............................

விலாசம் ..............................

ஒப்பம்: ..............................

விதிகள்

1. இந்தப் போட்டியில் சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட் மலர் அன்ட் பிப்ஸ் (இலங்கை) லிமிட்டெட், கிறான்ட் அட்வேர்ட்டைஸிங் (இலங்கை) லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றத் தகுதியற்றவர்களாவர்.
2. இந்தப் போட்டி சம்மந்தமாக எத்தகைய கடிதப் போக்குவரத்தும் நடைபெறமாட்டாது.
3. நீதிபதிகளின் தீர்ப்பே இறுதி முடிவாக இருக்கும்.

சோப்புகளில் ராணி ராணி சந்தன சோப்

சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட், கந்தானை.

GRANT-37


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலே நடந்த இடத்தைப் பார்வையிட ஜூரி விருப்பம்

## 'போப்துரையிடம் நீலநிறக் கைக்குட்டை இருக்கவில்லே'

—சாட்சி

உயர் நீதிமன்றத்தில் போப்துரை கொலே வழக்கு விசாரணையின் போது துரை தாக்கப்பட்ட போது அணிந்திருந்ததாகக் கூறப்பட்ட கோட்டை (மேலங்கியை) சாட்சிக்குக் காட்டபட்ட பொழுது, அந்த அங்கியின் இடது பக்க மேல் அங்கியிலிருந்து ஒரு வெள்ளேக் கைக்குட்டையை வெளியே இழுத்தார். அதிலும் இரத்தம் படிந்திருந்தது. இத்துடன் இந்த வழக்கில் சிவப்பு, நீலம், வெள்ளே ஆகிய நிறங்களில் மூன்று கைக்குட்டைகள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

ஜூரர்கள் சம்பவம் நடந்த இடத்நுக்கு விஜயம் செய்யவிரும்புவதாக ஜூரர்களின் போர்மன் கோர்ட்டாரிடம் தெரிவித்தார்.

1941 டிசம்பர் 5ந் திகதி—

கொழும்பு உயர் நீதி மன்றத்தில் நீதியரசர் சூட்ஸ் அவர்கள் நீதி ஆசனத்தில் அமர்ந்ததும் போப்துரை கொலே வழக்கு விசாரணை ஆரம்பமாயிற்று.

போப்துரையின் குக் அப்பு செபஸ்தியன் பெர்னுன்டெஸ் தொடர்ந்து வாக்கு மூலம் அளித்தார்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. கிரொஸெட் தம்பையா அவரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது சாட்சி கூறியதாவது:—

'அன்றிரவு துரை பங்களாவில் சாப்பிட மாட்டார் என்பது அன்று காலேயில் எனக்குத் தெரியும். அது மாலே 4 மணிக்குத்தான் என் மகனுக்குத் தெரியும். என் மகன் பிலிப்பிரனுந்துதான் பங்களாவில் இரண்டாவது வேலேக்காரன்—துரைக்கு எடுபிடி வேலே களேச் செய்பவன்.

### தானே காரை ஓட்டிச் சென்ருர்

துரை அன்றிரவு 7 மணிக்கு சாதாரண உடையணிந்து தானே காரை ஓட்டிக் கொண்டு வெளியே சென்ருர்.

எனது குடும்பம் வசிக்கும் லயின் வரிசையிலுள்ள அறைகளில்தான 3வது 4வது எதிரிகளும் வசிக்கின்றனர்.

அன்று (மே 9ந் திகதி) இரவு சுமார் 11 மணிக்கு தேயிலேத் தொழிற்சாலேயின் காவற்காரர் காசிம் எனக்கு டெலிபோன் செய்து துரையின் கார் வருவதாகக் கூறிஞர்.

பங்களாவுக்கும் தொழிற்சாலேக்குமிடையே டெலிபோன் தொடர்பு உண்டு. 5 அல்லது 10 நிமிடங்களில் தொழிற்சாலேயிலிருந்து பங்களாவுக்குக் கார் வந்துவிட முடியும். எனது மகனும், பங்களா காவற்காரனும் கார் மடுவத்தைத் திறந்து வைத்தார்கள்.

### துரைக்கு அபாயம் என்ருர்

கார் வராததால் நான் காசிமுக்கு டெலிபோன் செய்து கார் வரவில்லே என்று கூறினேன். தான் போய்ப் பார்ப்பதாக காசிம் கூறிஞர். 2 அல்லது 3 நிமிடங்களுக்குப் பின்னர் காசிம் ஓடி வந்து துரைக்கு அபாயம் என்று கூறிஞர்.

ஓடிப் போய் பார்க்கும் படி பங்களா காவற்காரனுக்கு கூறினேன். பின்னர் நானும் போனேன். அந்த இடத்தில் லுடுவைக், உதவி கிளார்க், தச்சுத் தொழிலாளி, தோட்டச் சலவைத் தொழிலாளி ஆகியோர் இருந்தனர் துரை கீழே விழுந்து கிடந்தார். இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. நிலவொளி இருந்தது.

நான் துரையைப் பிடித்துக் கொண்டு ஒரு நாற்காலி கொண்டு வரும்படிகூறினேன். பக்கத்திலுள்ள தோட்டத் துரைமாருக்குத் தெரிவிக்கும்படி நான் உதவிக் கிளார்க்கிடம் கூறினேன்.

### படுக்கையில் வைத்தோம்

பின்னர் துரை ஒரு நாற்காலியில் வைக்கப்பட்டு பங்களாவுக்குக் கொண்டுவரப்பட்டார். அப்பொழுது அவர் உயிருடன் இருந்தார். ஆனுல் அவரால் பேச முடியவில்லே. நாக்குத் துண்டிக்கப் பட்டிருந்தது. நானும், எனது மகனும், தச்சுத் தொழிலாளியும், சலவைத் தொழிலாளியும் சேர்ந்து துரையைத் தூக்கி பங்களாவில் ஓர் அறையில் படுக்கையில் வைத்தோம்.

காசிமும் எங்களுடன் பங்களாவுக்கு வந்தார். சாண்ட் துரை வந்த பிறகுதான் போப்துரையின் உடைகளைக் களேந்தோம்.

### ஜூரர்களிடம் கைக்குட்டை

(சாட்சிக்கு துரை அப்பொழுது உடுத்தியிருந்த கால் சட்டையையும் மேலங்கியையும் (கோட்) காட்டிய பொழுது அவர் அவற்றை அடையாளம் கண்டு கொண்டார். அவற்றில் இரத்தக் கறைகள் காணப்பட்டன. கோட் (மேலங்கி) பைகளேப் பார்க்கும்படி முடிக்குரிய வழக்கறிஞர் சாட்சிக்கு கூறிஞர். கோட் இடது பக்க மேல்பையிலிருந்து ஒரு வெள்ளேக் கைக்குட்டையைச்சாட்சி வெளியே இழுத்தார். அதிலும் இரத்தம் படிந்திருந்தது. கைகுட்டை ஜூரர்களிடம் கொடுககப்பட்டது. நீலநிறக் கைக்குட்டை சாட்சிக்குக் காட்டப்பட்ட போது இது மாதிரி ஒரு கைக்குட்டையை தனது எஜமானர் வைத்திருந்ததாக அவர் கூறிஞர்.)

இது மாதிரியான ஒரு கைக்குட்டையை அவர் கழுத்தில் கட்டிக் கொண்டிப்பதை தான் பார்த்திருப்பதாகவும் இதனே அநேகமாக ஒரு 'மப்ளராக' அவர் பாவித்ததாகவும் சம்பவம் நடந்த தினத்தில் இதனே அவர் கோட் பையில் வைத்திருந்ததாகவும் சாட்சி கூறிஞர்.

பின்னர் எதிரிகளின் வழக்கறிஞர் திரு. ஆர். எல். பெரேரா கே. ஸி. சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

அவரது கேள்விகளுக்குச் சாட்சி பதில் அளித்த போது தெரிவித்ததாவது:-

'இந்த நீலநிறக் கைக்குட்டை பட்டுக் கைக்குட்டையா என்பதை என்ஞல் கூறமுடியாது. இது இரத்தத்தில் தோய்ந்துள்ளது. அது முன்பு வெள்ளேப் புள்ளிகளுள்ள நீலநிறக் கைக்குட்டையாக இருந்தது. குறிப்பாக இரவு நேரங்களில் துரை அதனே 'மப்ளரைப்' போல கழுத்தில் கட்டிக் கொள்வார்.

### சலவை அடையாளமில்லே

இன்று எனக்குக் காட்டப்பட்ட வெள்ளே நிறக் கைக்குட்டை இதற்கு முன்பு எனக்குக் காட்டப்படவில்லே. எனது எஜமானரின் உடைகளுக்குத் தனியான ஒரு சலவைக்குறி உண்டு. அது என்ன குறி என்பது இப்பொழுது என்ஞல் கூறமுடியாது. இந்தக் கைக்குட்டையில் எந்த சலவை அடையாளமும் கிடையாது.

என்னுடைய லயின் அறையில் ஒரு கிராமப்போன் இருக்கிறது. துரை பங்களாவில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த கிராமபோனே இயக்குவது உண்டு. இதன் சத்தம் பங்களாவுக்குக் கேட்காது. கிராமபோனே இயக்கிஞல் துரையின் அமைதி கெட்டு விடும் என்று 3வது எதிரி கூறவில்லே.




### ஒற்றைக் கண்ணனுக்கும்.....

அன்று துரை பங்களாவிலிருந்து போகும் போது காரின் பெரிய லேட் எரிந்து கொண்டிருந்தது. தோட்டப் பாதை வளேவானது. அதில் பல வளேவுகள் உண்டு. இதில் கார் செல்லும் போது அது ஒரு சமயத்தில் வடக்கு நோக்கி ஓடும், மற்றொரு சமயத்தில் தெற்கு நோக்கி ஓடும். அதனுல் தோட்டத்தின் எல்லா திசைகளிலும் கார் லேட் வெளிச்சம் பாயும். அப்பொழுது துரை வெளியே போகிருர் என்பது ஒற்றைக் கண் குருடனுக்கு கூட தெரியும். துரை திரும்பி வரும் போதும், கார் வெளிச்சம் இம் மாதிரி எல்லாப் பக்கங்களிலும் விழும்.

3-வது எதிரியிடம் ஒரு துப்பாக்கி இருட்பது எனக்குத் தெரியும்.

இந்த வழக்கு சம்பந்தமாக மூன்று வாரங்கள் விளக்க மறியலில் இருந்த குப்புசாமியை எனக்குத் தெரியும். அவர் இப்பொழுது இவ்வழக்கில் ஒரு சாட்சியாக இருக்கிருர்.

### டிசம்பர் 8ந் திகதி

பிலிப் பெர்னுன்டெஸ் (17) அடுத்து வாக்கு மூலம் அளித்தார்.

'நான் கொல்லம் என்னும் இடத்தைச் சேர்ந்த ஒரு மலேயாளி. நான் துரையின் 2 வது வேலேக்காரனுக இருந்தேன். சம்பவம் நடந்த தினத்தில் துரை இரவு பங்களாவில் சாப்பட மாட்டார் என்று அறிந்தேன். நான் அன்றிரவு 7.30 மணிக்கு வீட்டுக்குச் சென்றேன். அப்பொழுது எனது தாயார் வீட்டில் இருந்தார்.

நான் கிராமபோனே முடுக்கி விட்டு எனது சகோதர சகோதரிகளுடன் சங்கீதத்தை ரசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது சுமார் 8 மணிககு 3 வது எதிரி எங்கள் வீட்டுக்கு வந்தார்.

### துரைபற்றி விசாரித்தார்

துரை எங்கே போயிருக்கிருர் என்று அவர் என்னேக் கேட்டார். வெளியே இரவுச் சாப்பாட்டுக்குச் சென்றிருக்கிருர் என்று நான் பதிலளித்தேன். துரை எப்பொழுது திரும்பி வருவாரென்று அவர் கேட்டார். எனக்குத் தெரியாது என்று கூறினேன். அத்துடன் அவர் அங்கிருந்து போய்விட்டார்.

இதற்கு முன்பு அவர் இம் மாதிரி விசாரித்ததில்லே. அவர் வழக்கமாக எங்கள் வீட்டுக்கு வருவதுமில்லே.

அன்றிரவு சுமார் 8 மணிக்கு சாப்பிட்டுவிட்டு 8.30 மணிக்குப் பங்களாவுக்குச் சென்றேன்.

துரை 'மப்ளர்' வைத்திருந்தாரா என்று என்னுல் கூற இயலாது. இரு முனேகளும் மடித்துத் தைக்கப்பட்டசுமார் ஒருயார் நீளமும், 7 அங்குலம் அகலமுமுள்ள வெள்ளேப் புள்ளிகளுள்ள ஒரு கறுப்புப் பட்டுத்துணி அவர் வைத்திருந்தார்.

### இது துரையின் மப்ளர் அல்ல

(கோர்ட்டில் காட்டப்பட்ட துணியைச் சுட்டிக் காட்டி) இது எனது எஜமானருடைய மப்ளர் அல்ல. இதைக் காட்டிலும் அது அடர்ந்த கறுப்பு நிறமாகும். அது அலமாரியில் வைக்கப்பட்டிருந்தது. துரை கேட்கும் பொழுது அதனே நான் வெளியே எடுப்பேன் அவரே அதனே வழக்கமாக எடுக்கமாட்டார். அவர் வெளியே போகும்போது நான் தான் உடைகளே எடுத்துக் கொடுப்பேன்.

அன்று துரை வெளியே சென்றபொழுது மப்ளரைக் கொண்டு போனுரா என்பது என்னுல் சொல்ல முடியாது. 'டை' (கழுத்துப்பட்டை) கட்டியிருக்கும்போது மப்ளரை அவர் அணிவதில்லே.

மாலேயில் அவர் வெளியே போகும்போது, 'டை' கட்டாமல் போகமாட்டார். இது தான் அன்று அவர் அணிந்திருந்த 'டை'.

**எதிரிகள்**

**(1) வீராசாமி**

**(2) வேலாயுதன்**

**(3) ஐயன் பெருமாள்**

**(4) ரெங்கசாமி**

**(5) முனியாண்டி**

**(6) மாரிமுத்து வேலாயுதன்**

### பெண்மணி வந்தார்

அன்றிரவு எனது எஜமானரைப் பங்களாவுக்குத் தூக்கிக் கொண்டு வந்தபொழுது அவர் இந்த மப்ளரை அணிந்திருக்கவில்லே. அவர் இறந்து இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு நான் அவரது உடைகளே வெளியே எடுத்து உடைப் பெட்டிகளில் அடுக்கியபோது இந்த மப்ளரைக் கண்டேன். சுமார் ஒரு வாரத்துக்குப் பின்னர் ஒரு பெண் வந்து அவற்றில் சில உடைகளே எடுத்துச் சென்ருர். அவர் 'மப்ளரை' எடுத்துச் சென்ருரா என்பது எனக்குத் தெரியாது. மப்ளர் இப்பொழுது எங்கே இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியாது.

4 வது எதிரியின் வழக்கறிஞர் திரு. டேவிட் சாட்சியைக் குறுக்கு விசாரணே செய்த போது அவர் கூறியதாவது:-

நான் இப்பொழுது ரம்பொடை மய்மாலா தோட்டத்தில் வேலே செய்கிறேன்; நான் கடந்த ஞாயிற்றுக்கிழமைக்கு முந்திய ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு வந்தேன். நான் எனது தாய் தந்தையுடன் கொழும்பில் புதிய சோனகத் தெரு 119ம் எண் மலேயாளிகளின் விடுதியொன்றில் தங்கியிருக்கிறேன். இந்த இடத்தைப் போலிசார் எங்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கவில்லே எந்தப் போலிசாரும் அங்குவந்து என்னேச் சந்திக்கவில்லே.

### போலிசார் போதனேயா?

கேள்வி:- போப் துரை இரண்டு மப்ளர் வைத்திருந்ததாக உங்களுடைய தகப்பனுர் கூறிஞர். அது உண்மையா?

பதில்:- நான் அவரிடம் ஒரு மப்ளரைத்தான் பார்த்திருக்கிறேன். துரை வெளியே போகும்போது அவர் மப்ளர் அணிந்திருக்கவில்லே. அவருடைய கோட்டுப்பையில் ஒரு வெள்ளேக் கைக்குட்டை இருந்தது. அவர் உடை அணியும் அறையில்தான் அல்மாரிஇருக்கிறது. அவருக்குத் தேவையானதை அதிலிருந்து எடுத்துக்கொள்ளலாம்.

கேள்வி:- நீலநிறக் கைக்குட்டை போப்துரையுடையதல்ல என்று கூறும்படி போலிசார் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிருர்கள் என்று நான் கூறுகிறேன்.

பதில்:- நான் அதனே மறுக்கிறேன்.

(14:ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கோரிக்கை மீது அறிஞர் அண்ணா நடவடிக்கை

## "எத்த" திரித்த கயிறு

## சிங்கள இதழ்களில்...

'இலங்கையில் இந்தியத் தூதராக ஒரு தமிழரை நியமனம் செய்ய விருக்கின்றனர்.

தமிழரசுக் கட்சியின் வேண்டுகோளின் மீது தமிழர் ஒருவரை இலங்கையில் இந்தியத் தூதராக நியமிக்கும்படி சென்னை முதன் மந்திரியும், தி. மு. க. தலைவருமான திரு. சி. என். அண்ணாதுரை மத்திய அரசாங்கத்துக்கு யோசனை கூறியுள்ளார்.

இலங்கையில் அடுத்த இந்தியத் தூதுவர். தமிழராக இருக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு தான் யோசனை கூறியிருப்பதாகத் திரு. அண்ணாதுரை சென்னை சட்டசபையில் இவ்வாரம் தெரிவித்தார்.'

— 'எத்த' (24-6-67)

### "கல்வி மந்திரி மறுப்பு"

கல்வி வெள்ளை அறிக்கை பற்றி விவாதிப்பதற்காக மந்திரிசபைக் கூட்டமொன்று நடத்த வேண்டுமென்ற அரசாங்க அதிபரின் யோசனையை கல்வி அமைச்சர் திரு. இரியகொல்ல நிராகரித்து விட்டாரென்று தெரிகிறது.

பொது, தொழில் நுட்பக் கல்வி வெள்ளை அறிக்கையை மந்திரிசபையின் அடுத்த கூட்டத்தில் விவாதிக்கவேண்டுமென்றயோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்த திரு. இரியகொல்ல தமிழரசுக் கட்சிக்கு அடிபணியத் தான் தயாரில்லை என்று கூறியதாகஅறியப்படுகிறது. பிரதமர் திரும்பி வரும் வரை வெள்ளை அறிக்கை பற்றி அமைச்சரவை அளவில் எதுவித விவாதமும் நடத்தக் கூடாது என்று கல்வி அமைச்சர் ராஜாங்க அமைச்சரிடம் கூறியுள்ளாராம். இதனல் ஒரு நெருக்கடி தோன்றி யிருப்பதாகத் தெரிகிறது.

— எத்த (19-6-67)




### மாவட்ட சபை

'தமிழரசு வாதிகளின் பலமான வற்புறுத்தலின் மீது அடுத்த பாராளுமன்றக் கூட்டத் தொடரின் போது மாவட்டசபை மசோதா சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகிறது.

இந்தக் கூட்டத் தொடரின் போது அந்த மசோதாவைச் சமர்ப்பிப்பதற்கு அவகாசம் கிடைக்கவில்லை என்று பிரதமர் கூறிதுய தெரிந்ததே

தமிழரசு வாதிகளுக்கு அடிபணிந்து, நாட்டை இரு கூருக்கி, ஒரு பகுதியை அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய அளவுக்குப் பிரதமர் பணிந்து போகக் காரணம், அரசாங்கத்தை நடத்துவதற்கு அவர்களின உதவி தேவைப்படுவதே.

பிரதமருக்குத் தமது பிரதமர் பதவியையும், ஏழு கட்சிக் கூட்டாட்சியையும் பாதுகாத்துக் கொள்வதற்குத் தமிழரசுவாதிகளினதும் இந்திய தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளினதும் ஆதரவு அவசியமாகும்.

பிரதமர் பதவியில் தொடர்ந்திருப்பதற்கு ஆசைப்படுவதால், அவர் நாட்டையும் இனத்தையும் மொழியையும் தமிழரசு வாதிகளுக்கும் இந்தியர்களுக்கும் காட்டிக் கொடுக்கிருர் என்பது இப்பொழுது தெளிவாகிறது'

—சிங்களே (22- 6- 1967

### அமீர் பற்றி 'எத்த' செய்தி

அட்டோர்னி - ஜெனரல் திரு. அமீர் வெளிநாடு சென்றுள்ளார். அவரது வெளிநாட்டுப் பிரயாணத்தின் பின்னணியில், அவரை அந்தப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு, திரு. வோல்டர் ஜயவர்தனவை அப்பதவியில் அமர்த்தும் திட்டம் இருப்பதாகக் கூறப்படுவதாசவும், உடல் நலன் பற்றிய காரணங்களை முன்னிட்டு பதவியிலிருந்து நீங்குமாறு திரு அமீருக்கு பிரதமர் யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறதென்றும் 'போதா எத்த' (22-6-67) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

## மலைநாட்டுச் சிங்களவர்களுக்கு காணியுமில்லை: வர்த்தகமுமில்லை

மலைநாட்டுச் சிங்களவர்கள் குறிப்பாக ஏழைச் சிங்களவர்கள் இன்று காணியில்லாக் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

மலைநாட்டில் பல பகுதிகளில் ஏழைச் சிங்களவர்கள் தத்தமக்குச் சொந்தமான சிறிய துண்டுக் காணிகளையும் விற்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டிருப்பதால், அவற்றை விற்றுவிட்டு ஊரையும் விட்டு வேறு பிரதேசங்களுக்குச் சென்றுவிடுகின்றனர்.

இந்தக் காணித் துண்டுகளை பெரும்பாலும் விலைக்கு வாங்குபவர்கள் பசையுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர்களும், கங்காணிகளுமே

. மலை நாட்டில் பெரிய தோட்டங்களையும் பணக்கார இந்தியர்கள் விலைக்கு வாங்கி விடுகின்றனர்' இவ்வாறு சிங்களே (வாரந்த ஏடு) 22- 6- 67ல் எழுதியுள்ளது.

இக் கட்டுரையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

''இம்மாதிரி மலைநாட்டுக் காணிப்பிரச்சினை கடுமையாகியுள்ள சந்தர்ப்பத்தில், தோட்ட முதலாளிகளின் அனுமதியுடன் தோட்டங்களில் காலூன்றக் கூடிய தரிசு நிலங்களையும் இந்தியர்களே கைப்பற்றிக் கொண்டால், மலைநாட்டு சிங்களவர்கள் எங்கே போக முடியும்...? மலையகத்தில் எஞ்சியுள்ள சிங்களவர்களும் ஊர்ப்பிரதேசங்களைக் கைவிட்டுப் போகவேண்டியதுதான?

அது மட்டுமல்ல—தினசரி இலங்கையுள் பிரவேசிக்கும் கள்ளக்குடியேற்றக் காரர்களால் வேலைப்பிரச்சினையும் காணிப்பிரச்சினையும் கடுமையாகியுள்ளன.

குறிப்பாக, கிழக்குக் கரையில் இறங்கும் கள்ளக் குடியேற்ற காரர்கள் நேராகச் செல்வது அரசாங்கக் காடுகளுக்குத்தான்.

அவர்கள் அந்தக் காடுகளை வெட்டி, குடிசைகள் அமைத்துக் கொண்டு, விவசாயம் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர்.

இவ்வாறு நாளடைவில் அவர்கள் காணிகள் சொந்தமாயுள்ள இலங்கையராக மாறி விடுகின்றனர்.

தெற்கே கதிர்காமம் வரை ''கள்ளத் தோணி ஆக்கிரமிப்பு'' நடைபெறுகிறது.

இம்மாதிரி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தால் சிங்களவர்களுக்கு ஓர் அங்குலம் நிலமாவது எஞ்சியிருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, மலைநாட்டு வியாபாரத்திலும் நெருக்கடி தோன்றியுள்ளது. சமீப காலத்தில் மலை நாட்டு வர்த்தகமும் துரிதமாக இந்தியர்களின் கைக்கு மாறிக் கொண்டிருக்கிறது. தோட்டப்பாதைகளின் ஓரங்களிலும் இந்தியர்கள் கடைகள் திறக்க ஆரம்பித்து விட்டதால், மலைநாட்டு வர்த்தகம் முற்றுக இந்தியர்களின் கைக்குப் போவது தவிர்க்க முடியாததாகிவிடும். அப்பொழுது சிங்கள வியாபாரிகள் மலை நாட்டிலிருந்து வாபஸாக வேண்டியதுதான்''.

### அதிருப்தி

'இந்த அரசாங்கத்தின் கீழ் சிங்கள ஆங்கில மொழி பெயர்ப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கும் கூட அவர்களின் தமிழ் மொழி தேர்ச்சி பற்றி கேள்விகள் கேட்கப்படுவதால் அபேட்சகர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.'

மொழி பெயர்ப்புச் சேவைக்கு ஊழியர்களைத் தெரிவு செய்வதற்காக கொழும்பில் நடந்த பரீட்சையில் 78 பேர் தோற்றினர். 23 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.'

— போதா எத்த (22-6-67)

### இ.போ.ச.வுக்கு ஒரு கமிஷனும்

'இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தினசரி ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காக இ. போ. சபையும், அமைச்சர் திரு. சுகததாசவும் இதுவரை எடுத்த நடவடிக்கைகள் பயனளிக்கவில்லை. ஆகவே இது பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஒரு கமிஷன் நியமனம் செய்வதற்கு அமைச்சர் திரு. சுகததாசா முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.'

— எத்த (25-6-67)

### அருளொளி நிலையக் கூட்டம்

கொழும்பு அருளொளி நிலையத்தின் ஒரு பிரார்த்தனைக் கூட்டம் 22-6-67 நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. ஜோதி வழிபாடுடனும் சிவபுராண பாராயணத்துடனும்தொடங்கிய கூட்டத்திற்கு கார்த்திகேசு சுவாமிகள் தலைமைதாங்கினர்கள். திரு. குப்புசாமி 'இறைவழிபாடு' என்ற தலைப்பில் உரையாற்றினர்.

பின்னர் திருமதி சத்திய லக்ஷ்மி சிவலிங்கம் தோத்திரப் பாடல்களை பண்ணமைய பாடினர்.

## ஆட்சி மொழிச் சட்டத் திருத்தம்

### அண்ணா அதிருப்தி

மாநிலங்களின் கருத்தறியும் பொருட்டு டெல்லி அரசால் அனுப்பட்டிருக்கும் ஆட்சிமொழித் திருத்த மசோதா தமிழக மக்கள் அனைவரையும் திருப்திப்படுத்தும் முறையில் அமையவில்லை. ஒரு சிறு பகுதி மக்களைத் தான் திருப்திப் படுத்த அது உதவும்' என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பாரதப் பிரதமர் இந்திராகாந்தியிடம் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார் என்று அறியப்படுகிறது.

சமீபத்தில் டெல்லிக்கு சென்றிருந்த அண்ணா திருமதி இந்திராவைச் சந்தித்து தமிழகத்துடன் சம்பந்தப்பட்ட பல் வேறு பிரச்கினைகளைப் பற்றி விவாதித்தார். அப்போது ஆட்சி மொழித் திருத்த மசோதா பற்றி மேற்கண்ட கருத்தை அண்ணா வெளியிட்டதாகத் தெரிய வருகிறது. அரசியல் சட்டத்தை திருத்துவது என்றுதான் இந்தி பேசாத மக்களுக்கு நம்பிக்கையான பாதுகாப்பைத் தர முடியும் என்றும் அண்ணா கூறியதாகத் தெரியவருகிறது.

திருத்த மசோதாவின் நோக்கம் இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரையில் ஆங்கிலம் நீடிக்கும் என்பதாகையால், மசோதாவின் பல பகுதிகளிலும் இந்திமொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தும் அவசிய மற்ற முறையில் 'இந்தி' என்ற சொல்லைக் குறிப்பிட்டும் வாசகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அண்ணா இந்தியப் பிரதமரிடம் சுட்டிக் காட்டி, இப்படியான காரணங்களால் தமிழக மக்கள் முழுவரையும் இம் மசோதா திருப்திப் படுத்தாது என்றும் கூறியிருக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு கல்வி இலாகா கை விரிப்பு

கல்வித் திணைக்களமும் கல்வி அமைச்சும் தமிழ் மக்களுடைய கல்விப் பிரச்சினைகளை அனுதாபத்துடன் தீர்க்கமுயலுவதில்லை—என்பதை பொதுவாக எல்லாத் தமிழ் மக்களும் சிறப்பாக கல்வித் துறையில் ஈடுபட்டவர்களும் நன்கறிவர். வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளினதும் கல்லூரிகளினதும் தரத்தைக் குறைப்பதற்கும் ஏனைய மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளை ஒடுக்கிச் சிதைத்து மூடுவிழா நடத்தவும் முயற்சிகள் பல கைக்கொள்ளப்படுகின்றன.

முன்னைய அரசாங்கத்தின் கையாட்களே இப்பொழுதும் கல்வித்துறையைக் கட்டுப்படுத்தித் தமிழர்களைப் புறக்கணிக்கிறார்களெனத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல் எழுப்பியுளர்.

பட்டதாரிகளுட்பட விசேட பயிற்சி பெற்ற தமிழர்களுக்கு கல்வித் திணைக்களத்தில் வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு எவ்வித முயற்சியையும் கல்வி அமைச்சு தானக எண்ணி மேற்கொள்வதில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் தனித்தும் சேர்ந்தும் இடித்துக் கேட்கும் பொழுதெல்லாம் இடங்களில்லையெனவும், பணமில்லையெனவும் திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது.

கல்வி அமைச்சினது போக்கில் வெறுப்புக் கொண்ட தமிழரசு எம். பிகள் தமிழ் மக்களின் கல்வி அலுவல்கள பற்றிப் பிரதமர் முன்னிலையில் கல்வி அமைச்சரையும் கல்வி அமைச்சு உத்தியோகத்தர்களையும் சந்தித்து மூன்று முறை பேசியிருக்கின்றார்கள்.

இந்தப் பேச்சுக்களினாலும் குறிப்பிடத் தக்க பலன் எதுவும் கிடைக்கவில்லை. தமிழ் மக்களின் கல்வி புறக்கணிக்கப் படுகின்றது எனும் விடயம் பற்றி அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலும் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் திரு. கா பொ. இரத்தினம் எடுத்துரைத்திருக்கின்றார்.

அரசாங்கப் பாராளுமன்றக் குழு ஏற்றுக் கொண்ட கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரின் பிரேரணைகளைக் கூடக் கல்வி அமைச்சு நடைமுறைப் படுத்தாமல் சாட்டுப் போக்குச் சொல்லி கொண்டிருக்கின்றது.

கல்லூரிகளில் கற்பிக்கும் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் வித்துவான்களுக்கும் சிங்களப் பண்டிதர்களுக்குக் கொடுப்பது போல் பட்டதாரிகள் சம்பளம் கொடுக்க வேண்டுமெனவும், புலவர், வித்துவான் பண்டிதர் பட்டம் பெற்று வேலையின்றியிருப்பவர்களை ஆசிரியர்களாகப் பாடசாலைகளில் நியமிக்க வேண்டுமெனவும் கிளிநொச்சி எம். பி. 5-5-65இல் கல்வி அமைச்சர் திரு. இரிய கொல்லையுடன் பேச்சு வார்த்தை நடத்தியபின் 7-5-65 ல் விரிவான தொரு வேடுண்கோளைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அமைச்சருக்கு அனுப்பினர்.

இதன் பின்னர் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்றக் குழுவினர் அமைச்சரை இரு முறை சந்தித்த பொழுது இவ் விடயங்களையும்விரைவில்கவனிக்குமாறு அமைச்சரை வற்புறுத்தினர்.

1965-ம் ஆண்டில் நடைபெற்ற கல்வி அமைச்சரின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிலும் இந்தவிடயத்தை திரு. இரத்தினம் வற்புறுத்தி வந்தார். இந்த வற்புறுத்தலின் காரணமாக இதனைக் கவனிக்குமாறும் வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறும் நிரந்தரச் செயலாளர் பணிக்கப்பட்டார்.

நிரந்தரச் செயலாளர் அவர்கள் இவ் விடயத்தை விரைவில் கவனிக்காததால் திரு. இரத்தினம் 28-10 65ல் இவ் விடயத்தை விரைவில் முடிவு செய்யுமாறு அவருக்கு எழுதினர். இதற்கு 6-12-65ல் நிரந்தரச் செயலாளர் இது பற்றி விரைவில் மறு மொழி அனுப்புவதாக எழுதியிருந்தார்.

மீண்டும் 11-3-66ல் திரு. இரத்தினம் நிரந்தரச் செயலாளருக்கு இவ் விடயத்தை நினைவூட்டியதன் பலனக 15-3-66ல் நிரந்தரச் செயலாளர் திரு. இரத்தினத்துக்கு பல காரணங்களைக் காட்டிப் பண்டிதர் வித்துவான்களுக்குப் பட்டதாரிகளுக்குரிய சம்பளம் கொடுக்கமுடியாதெனவும் அவர்களைப் பாடசாலைகளுக்கு நியமிக்க முடியாதெனவும் எழுதியிருந்தார்.

இந்த விடயத்தை இதனுடன் நிறுத்திவிடாமல் தமிழரசு எம். பி. கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். 7-3-67ல் நடைபெற்ற கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி.என். நவரத்தினம் வித்துவான், புலவர், பண்டிதர் இவர்களுடைய சம்பளம் பற்றிய விடயங்களை ஆராய்வதற்கு, ஒரு பிரேரணையை அனுப்பினர். அன்று அப்பிரேரணையை உடுப்பிட்டி எம். பியும் கிளிநொச்சி எம். பியும் ஆதரித்து இவ் விடயத்தை மீண்டும் கல்வி அமைச்சர் கவனிக்க வேண்டுமென வற்புறுத்தினர். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களின் தொகையை அறிவிக்குமாறு அமைச்சர், உதவிச் செயலாளர் திரு. கமகேயைக் கேட்டிருக்கின்றார். இப்பொழுதுள்ள நிலைமையை இந் நிகழ்ச்சிகள் நன்கு புலப்படுத்துகின்றன.

கல்வி அமைச்சரின் கொள்கையும், கல்வி அமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் கருத்தும் போக்கும் இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவ்வகையிலும் சாதகமாக அமையவில்லையென்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

# தமிழ் பொலீசார் உடன் வேண்டும்.

## யாழ். மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் ஊழியர்களில் அனேகமானோர் தமிழ் தெரியாத சிங்கள ஊழியர்களாக இருப்பதனால், தமிழ் பொது மக்கள் மிகுந்த கஷ்டமடைகிறார்கள். பொலீஸ் நிலையங்களில் தமிழில் புகார்களைப் பதிவு செய்யவும் தமிழில் விசாரணைகளை நடத்தவும் சிங்கள பொலீஸ் அதிகாரிகளால் இயலாதிருப்பதால் உடனடியாக தமிழ் தெரிந்த பொலீஸார் நியமிக்கப்பட வேண்டும் என்று தமிழரசு எம். பிக்களும், தமிழ் பொது மக்களும் அரசாங்கத்திடம் கோரியுள்ளனர். கடந்த வாரம் இந்தப் பிரச்சினையைப் பாராளுமன்றத்தில் கிளிநொச்சி எம், பி. பண்டிதர் இரத்தினம் கிளப்பியிருந்தார். யாழ் அரசாங்க அதிபரும், வடபகுதி பொலீஸ் சுப்ரீன்டென்ட் திரு.ஆர்.சுந்தரலிங்கமும் 25 தமிழ் பொலீசாரை வட பகுதியில் நியமிக்கும்படி பொலிஸ் மா அதிகாரியைக் கேட்டிருக்கிறார்என்று அறியப்படுகிறது.

பொலீஸ் நிலையங்களில் தமிழில் கொடுக்கப்படும் வாக்கு மூலங்கள் தமிழிற் பதியப்பட வேண்டுமென்று பொலீஸ் மா அதிகாரி கட்டளையிட்டிருந்தாலும் நடைமுறையில் பொலீஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலீசார் இல்லாததனால் அது சாத்தியமற்றதாகி விடுகிறது. இதனால், தமிழ் மட்டுமே தெரிந்த சாதாரண பொது மக்கள் மிகவும் கஷ்டமடைகிறார்கள். புகார்களைச் சரியான முறையில் பதிவு செய்யத் தவறியதால், பல வழக்குகள் கூட தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பொலீஸ் நிலையங்களிலும் தமிழ் தெரிந்த பொலீஸ் அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்றும் அப்பொழுதுதான் பொது மக்களின் கஷ்டம் தீருமென்றும் பொலீஸ் மா அதிகாரியிடம் யாழ் பொலீஸ் சுப்பிரீன்டென்ட் கூறியுள்ளதாக அறியப்படுகிறது.

இது சம்பந்தமாக கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கிளிநொச்சி எம். பி. தொடுத்திருந்த கேள்வியொன்றுக்குத் தற்காலிகப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பதிலளிக்கையில், எந்த மொழியில் புகார் செய்யப்படுகிறதோ அந்த மொழியிலேயே பதிவு செய்யும்படி எல்லா பொலீஸ் நிலையங்களுக்கும் கட்டளை பிறப்பித்துள்ளதாகவும், யாழ்ப்பாணத்திலும் புகார்கள் தமிழிற்பதிவு செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவென்றும், சில வேளைகளில் தமிழ் தெரியாத அதிகாரிகள் கடமை பார்க்கும் போது மட்டும் கஷ்டம் ஏற்படுகிறதென்றும் கூறியிருந்தார்.

இதுபற்றிஒருதமிழரசுஎம்.பி. ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கருத்து தெரிவிக்கையில் 'யாழ் மாவட்டத்திலுள்ள சகல பொலீஸ் நிலையங்களிலும் தமிழ் தெரிந்தவர்களை நியமித்தால், இந்தக் கஷ்டம் நீங்கி விடுமென்றும், உடனடியாக தமிழ் தெரிந்தவர்களை நியமிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும் கூறினர்.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்புக்குழு [illegible] தெரிகிறது.

## புதிய அலுவலாளர்கள்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் யாழ். வண்—வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நல்லூரர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. என். ஆர். பாலசிங்கம் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. த. ச. சண்முகதாசன், வடபிரதேசக் கிளைகளின் கூட்டுச் சபைக் காரியதரிசி திரு. வ. மகாலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

புதுவருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டோரின் விபரம் பின்வருமாறு:-

திரு. சி. பொன்னையா காரியதரிசி, திரு. ஐ. ஆ. இராமசாமி தலைவர், திரு. சு. சிவசிதம்பரம் தனாதிகாரி, திரு இ. தாமோதரம்பிள்ளை, திரு. க. சுப்பிரமணியம் உபதலைவர், திரு. வே. பரமநாதன், திரு. அ. சுப்பிரமணியம் உப காரியதரிசிகள், திரு. க. சுப்பிரமணியம் உபதனாதிகாரி.

வேறு எண்மர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. நா. மாரிமுத்து, திரு. மா. ஆனந்தர் கணக்குப் பரிசோதகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## தமிழரசுப் பிரமுகர் போட்டியின்றித் தெரிவு

உரும்பராயின் புதிய பட்டினசபைக்கான தேர்தலில், உரும்பராய் தமிழரசுக் கட்சி கிளைத்தலைவர் திரு. நடேசலிங்கம் ஜே.பி. போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு. நடேசலிங்கம் தமிழரசுக்கட்சியின் தீவிரதொண்டர் என்பதுடன், பொதுநலவாதியென்பதும் குறிப்பிடத்தக்கது.

போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட ஏனைய இருவர்களான ஐந்தாம் வட்டார உறுப்பினர் திரு. க. பத்மராசாவும், எட்டாம் வட்டார உறுப்பினர் திரு. ச. செல்வரத்தினமும் தமிழரசு ஆதரவாளர்களே.

---

## கொழும்பு இலக்கிய வட்டம் புதிய தலைவர்

கொழும்பு இலங்கிய வட்டத்தின் புதிய தலைவராக ஹாபிஸ் எம். கே. செய்யிது அகம்மது அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். வட்டத்தின் நடப்பு ஆண்டுத் தலைவரான மஹாகவி அவர்கள் மன்னாருக்கு இடமாற்றம்பெற்றுச் சென்றதை யொட்டியே இத் தேர்வு நடைபெற்றுள்ளது.

புதிய தலைவர் ஹாபிஸ் செய்யிது அகம்மது அவர்கள் அகில இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கத் தலைவருமாவர். இவர் பல வரலாற்றுக் கட்டுரைகளை எழுதியுள்ளதுடன் 'காயல்பட்டணம்' 'முஸ்லிம்களின் தமிழ்ப்பண்பு' ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டுள்ளார். உலகவரலாற்று ஆராய்ச்சியாளர் சங்கமான 'ஏசியாட்டிக் ரோயல் சங்கத்'திலும் இவர் ஓர் உறுப்பினராவர்.

## இ. போ. ச. விடம் கோரிக்கை

உரும்பராய் பட்டினத்திலிருந்து தூர இடத்து பஸ் சேவைகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமென்று யாழ். பிரதேச இ. போ. ச. முகாமையாளரை உரும்பராய் தமிழரசுக்கட்சிகிளைத் தலைவர் திரு. நடேசலிங்கம் ஜே. பி. கோரியுள்ளார்.

அவர் இ. போ. ச. முகாமையாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:-

'எதிர் வரும் ஜுலை முதல் வாரத்தில் இருந்து பட்டின சபையாக மாற விருக்கும் உரும்பராயிலிருந்து தான் கீரிமலை, பலாலி பஸ்பாதையில் கூடுதலான பிரயாணிகள் பிரயாணம் செய்கிறார்கள்.

'ஏற்கனவே உரும்பராய்ச்சந்தியிலிருந்து ஏற்பாடு செய்திருக்கும் விசேட வண்டிகள் கோண்டாவில் சந்திக்கு வருமுன்பே பிரயாணிகளால் நிரப்பப்படுகின்றன.

'பாடசாலைமாணவர், உத்தியோகத்தர், வர்த்தகஊழியர், வைத்தியசாலைக்குப்போவோர் எனப் பலதரப்பட்டவர்களும் உரும்பிராயிலிருந்து மிகுதியாகப் பிரயாணம் செய்கின்றனர். பட்டினசபையாக மாறியதும் பிரயாணிகள் தொகை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கலாம். இவர்களது தொகையுடன் இ. போ. ச. ஊழியர் தொகையும் சேர்ந்து கொள்ளவிருக்கிறது.

'ஆகவே, பலாலி வீதியில் பேற்கொண்டு அதிக பஸ்வண்டிகளைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

'மேலும், இ. போ. ச. மத்திய ஊர்திச்சாலை உரும்பராய் எல்லையில் அன்னுங்கைச் சந்திக்கு மாற்றப்பட்டிருப்பதால் தூர இடத்து பஸ் வண்டிகள் அங்குதான் நிறுத்தப்படுமென அறிய வருகிறேன். யாழ். பஸ் நிலையத்தில்இருந்து சேவையை நடத்தும் இந்த பஸ்வண்டிகள் பஸ் நிலையத்திற்கும், மத்திய ஊர்திச்சாலைக்கும் போய்வருகிற வேளைகளில் உரும்பராய்ச் சந்திக்கும், சந்தியிலிருந்து பிரயாணிகளை ஏற்றி இறக்குவதால் இ. போ. ச. கூடுதல் வருமானத்தைப்பெறக் கூடுமென்பதோடு, பிரயாணிகளுக்கும் கூடிய சேவை கிடைக்குமென்றும் எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்ட தமிழினம் வீழ்ச்சியடை

ஆ. தேவராசன்

ஈழத்திருநாட்டில் தனியான ஒரு தமிழ் அரசு இருந்தது என்பதை ஊகித்துக் கொள்ள முடிந்த போதிலும் அந்த வரலாற்றைக் கோவைப்படுத்தி தொடராகச் சொல்ல எவரும் இதுவரை சரியாக முயற்சி செய்யவில்லை. இந்த நாட்டிலே தமிழ் அரசே இருக்கவில்லை — இருந்த அரசும் 9ம் நூற்றுண்டில் சிலர் தென்னகத்திலிருந்து படையெடுத்து அபகரித்ததன் விளைவாக ஏற்பட்ட 'குட்டி அரசு' என்று கதையைத் திரித்துப் பூசி மெழுகி தற்கால விஞ்ஞான ஆராய்ச்சி முடிவு என்ற போலிப் பெயருடன் சிலர் தந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு முற்பட்ட கல்வெட்டுகள் சாசனங்களைச் சரிவர யாரும் ஆராயவில்லை. எல்லாளன் கூட தென்னகத்திலிருந்து அபகரித்த அரசன் — அதன் பின்னர் வியாபாரம் செய்தவர்கள் அபகரித்தார்கள் என்றெல்லாம் வரலாற்றின் பெயரால் புனையப்பட்டு வரையப்பட்டு வருகிறது. முன்னைய சாசனங்கள் கல்வெட்டுகள் நடுநிலைமையில் ஆராயப்பட வேண்டும்.

## ஒன்பதாம் நூற்றுண்டில்

எது எப்படி இருந்த போதிலும் கலிங்க நாட்டு அரசன் மாகன் இலங்கைமீது படையெடுத்து வெற்றி கொண்டு வடக்கிலும் ஒரு அரசை நிறுவினுன் என்று கொள்ளப்பட்டுள்ளது. கி. பி. 9-ம் நூற்றுண்டிலிருந்து இந்த அரசு நிறுவப்பட்டதாக வரலாற்றுசிரியர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாண அரசு முதலில் சிங்கை நகர் என்ற பெயருடன் வல்லிபுரக் கோவிலடியில் தலை நகரைக் கொண்டுஇயங்கி வந்தது என்றும், பின்பு இத்தலைநகரம் கந்தரோடைக்கு மாற்றப்பட்டது என்றும் முதலியார் இராசநாயகம் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் கூறுகின்றார். கி. பி 9-ம் நூற்றுண்டிலிருந்து உக்கிர சிங்கன் என்ற அரசன் ஆண்டு வந்தான் என்றும் கூறுவர்.

## அரசர்கள் பெயர்ப்பட்டியல்

இதன் பின்னர் நல்லூரிலிருந்து கி. பி. 12-ம் நூற்றுண்டு துவக்கம் ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்டு வந்தனர் என்றும் கூறப்படுகிறது. இந்த ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரை பற்றிய பட்டியல் ஒன்றையும் முதலியார் இராசநாயகம் தந்துள்ளார்.

| இயற்பெயர் | அரசபெயர் | ஆண்டு |
|---|---|---|
| குலசேகரன் | பரராசசேகரன் | 1246 |
| குலோத்துங்கன் | செகராசசேகரன் | 1256 |
| விக்கிரமன் | பரராசசேகரன் | 1279 |
| வீரோதயன் | செகராசசேகரன் | 1302 |
| மார்த்தாண்டன் | பரராசசேகரன் | 1325 |
| குணபூஷணன் | செகராசசேகரன் | 1348 |
| விரோதயன் | பரராசசேகரன் | 1371 |
| ஜயவீரன் | செகராசசேகரன் | 1380 |
| குணவீரன் | பரராசசேகரன் | 1410 |
| கனகசூரியன் | செகராசசேகரன் | 1440 |
| செண்பகப்பெருமாள் (சபுமால் குமாரய) | புவநேயவாகு (புவனேகபாகு) | 1450 |

## தமிழ்ச் சங்கம்

இந்த ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒருவனை செகராசசேகரன் கல்வியிலும் கலையிலும் மிகுந்த ஈடுபாடு உடையவனுக மிளிர்ந்தான். இவனது காலத்தில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழ் மொழியையும், தமிழ் சார்ந்த அனைத்தையும் மிக்க ஆர்வத்துடன் வளர்த்து வந்தான். சங்கப் புலவர்கள் கூடித் தமிழாய்ந்தனர். இவர்களுள் தல்லார் சிறந்த புலவனுக செகராசசேகரனை என்ற மன்னன் விளங்கினுன்.

## எழுதிய நூல்கள்

இவனது நூல்கள் இரண்டு இருந்தன. சோதிடம் பற்றிய 'செகராசசேகரமும்', வைத்தியம் பற்றிய 'செகராசசேகரமும்' இந்த நூல்களாகும். வைத்திய நூலில் ஒரு பகுதியாக இருந்த சர்ப்பசாத்திரம் மிகப் புகழ் பெற்றது. சிங்கள அரசர்கள் புலவர்கள், வைத்தியர்களால் பாராட்டப்பட்டது. பல சிங்கள வைத்திய நூல்கள் உருவாக செகராசசேகரம் பயன்பட்டது. இவன் 'சரஸ்வதி மகாலயம்' என்ஞெரு பெரிய நூலகத்தையும் நிறுவி வைத்திருந்தான். ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக் காலத்தில் இது ஒரு போற்றக் கூடிய பேருக அமைந்தது.

## நல்லூர் கந்தசாமி கோவில் கட்டப்பட்டது

கி. பி. 15-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் ஆரும் பராக்கிரமபாகு கோட்டை அரசை ஆண்டு வந்தான். அப்போது அவன் வளர்ப்புக் குழந்தையாகச் செண்பகப் பெருமாள் என்ற தமிழ் இளைஞனை வளர்த்து வந்தான். கனகசூரியன் (செகராசசேகரன்) யாழ்ப்பாணத்தில் ஆண்டு வந்த காலத்தில் செண்பகப் பெருமான் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்து கனகசூரியனைக் கலைத்துவிட்டு புவநேயவாகு என்ற பெயருடன் யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தான். அப்போது அவன் நல்லூர்க் கந்தசாமி கோவிலையும், நல்லூர் இராசதானியையும் கட்டி எழுப்பினுன். இன்றும் நல்லூர்க் கோவில் கட்டியத்தில் 'ஸ்ரீசங்கபோதி புவனேகவாகு' என்ற பெயர் வருவதை அவதானிக்க முடிகிறது. இவன் இங்கு பதினேழு ஆண்டுகள் ஆண்டுவந்தான்.

## 6வது புவனேயவாகு

கோட்டையிலிருந்த ஆரும் பராக்கிரமவாகு இறந்ததைத் தொடர்ந்து அங்கு பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. பராக்கிரமவாகுவின் (மகளின் பிள்ளைகள்) பேரர்கள் — ஜய வாகு— வீரபராக்கிரமன் ஆகியோர் அரியாசனம் ஏற முயற்சி செய்தனர். இச் செய்தி கேட்ட புவநேயவாகு (செண்பகப் பெருமாள்) ஓடோடிக் கோட்டை சென்று ஜயவாகுவையும், வீரபராக்கிரமனையும் கொன்றுவிட்டு ஆறுவது புவநேயவாகு என்ற பெயருடன் கோட்டை அரசைக் கைப்பற்றி ஆண்டு வந்தான்.

## செகராச சேகரனும் பரராச சேகரனும்

இக்காலத்தில் செண்பகப் பெருமாளால் (ஆறுவது புவநேயவாகு) துரத்தப்பட்ட ஆரியச் சக்கரவர்த்திகளுள் ஒருவனுன கனகசூரியன் (செகராசசேகரன்) கலிங்கத்து உதவி பெற்று மீண்டும் தமிழ் அரசை மீட்கப் படையோடு வந்தான். வந்த போது செண்பகப் பெருமாள் கோட்டை அரசுக்குச் சென்றுவிட்டான். ஆனுல் விஜயபாகு என்ற ஒருவன் தமிழ் அரசை அபகரிக்கத் திட்டமிட்ட சதியை அறிந்து அவனைத் தோற்கடித்தான். கனகசூரியன் செகராச சேகரன் என்ற பெயரில் தமிழரசின் மன்னனுக விளங்கினுன். (1467)

யாழ்ப்பாண அரசு 21-6-1658 இல் ஒல்லாந்தர் கைக்கு மாறியது. 1621இல் ஏற்கனவே சங்கிலி மன்னனிடமிருந்து பறிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசு பிரித்தானியர் ஆட்சியில்தான் கண்டி, ரோகணை, அரசுகளுடன் இணைக்கப்பட்டு ஒரே ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. யாழ்ப்பாண அரசின வரலாற்றில் சில சம்பவங்களை நினைவு கூர்கிறது இக் கட்டுரை.

செகராசசேகரன் (கனகசூரியன்) ஆட்சிக்குப் பின் பரராசசேகரன் ஆண்டு வந்தான் (1478). பரராசசேகரனைக் கொன்று ஆட்சியைப் பறித்து 1519 ல் சங்கிலியன், செகராசசேகரன் என்ற பெயருடன் ஆட்சிக்கு வந்தான். பரராசசேகரனின் வாரிசு இந்தியாவுக்கு ஓடினுன்.

## போர்த்துக்கீசருடன் ஒப்பந்தம்

இந்தியாவுக்குச் சென்ற செகராசசேகரனின் வாரிசு போர்த்துக்கீசரின் உதவியை நாடினுன். 1543ல் மாட்டின் அப்போன்சோ தசூசா என்ற தளபதியின் படையோடு யாழ்ப்பாணம் வந்தான். சங்கிலி போர்த்துக்கீச மன்னரின் ஆட்சியை ஏற்று ஒரு குறுநில மன்னனுகத் திறை கொடுத்து வாழ இசைந்தபடியால் சங்கிலியைத் தொடர்ந்து அரசு செய்ய அனுமதித்தனர். 1544 ல் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி, சங்கிலி ஒரு குறிப்பிட்ட மதத்தினரைத் தன் வாளுக்கு இரையாக்கினுன்.

## சிங்கள அரசர்களுக்கு படையுதவி

மக்கள் போர்த்துக்கீசரிடம் முறையிட்டனர். இதற்கிடையில் கோட்டையிலிருந்த செண்பகப் பெருமாள் (புவநேயவாகு) தமிழ் அரசு தனக்குரியது என்று போர்த்துக்கீசரிடம் உரிமைகோரினுன். ஏற்கனவே, போர்த்துக்கீசர் உதவியை, அவனும் தன் ஆட்சியைப் பலப்படுத்தவேண்டி, நாடியிருந்தான். போர்த்துக்கல் மன்னன் தக்க விசாரணையின்றி — தக்க காரணமின்றி — பதவி நீக்கம் செய்ய விரும்பவில்லை. சங்கிலியன் தொடர்ந்து ஆண்டான். சிங்கள அரசர்களுக்கும் இராணுவ உதவி செய்திருக்கிருன்.

## நல்லூர் தோற்றது

இருந்தாலும் சங்கிலியன் ...

1560ல் டொன் கொன்ஸ்டைன் தபிரகன்சா என்ற தளபதியின் தலைமையில் ஒரு சேனை சங்கிலியனுடன் போர் முரசம் கொட்டிக் கொண்டு வந்தது.

இந்தப்படை வருகின்றது என்பதை அறிந்த சங்கிலியன் ஊர்காவற்றுறையில் இவர்களை எதிர்பார்த்து ஆயத்தமாக நின்றுன். சங்கிலியன் ஊர்காவற்றுறையில்நிற்கிறுன் என்பதை அறிந்த போர்த்துக்கீசத் தளபதி நல்லூருக்கூடாகப் படைகளைச் செலுத்தினுன்.

நல்லூர் மக்கள் எதிர்த்துத் தாக்கினர். ஆனுல் போர்த்துக்கீசரின் புதிய ஆயுதங்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் நல்லூர் மக்கள் தோற்றனர். சங்கிலியன் அங்குவந்து போர் ஓய்ந்த வேளையில் இரவோடு இரவாகத் தன் அரண்மனைக்குத் தீ மூட்டி விட்டு ஓடி ஒழிந்து விட்டான்.

## சங்கிலி மீண்டும் அரசு பெற்றுன்

தளபதி பிரகன்சா நல்லூரைத் தாண்டிக் கோப்பாயில் தன் அரண்மனையை அமைத்தான். சங்கிலியனைப் பிடிக்கச் சொல்லி பகிரங்க பிரகடனம் செய்யப்பட்டது.

இத்தறுவாயில் தன் பலவீனத்தை உணர்ந்த சங்கிலி பிரகன்சாவுக்குத் தூது அனுப்பினுன். பிரகன்சாவின் தலைமையை ஏற்பதாக வற்புறுத்தி வந்தான். பிரகன்சா முதலில் மறுத்து விட்டான். சங்கிலியன் மகனை பணயமாகக் கொடுத்து தன் நல்லெண்ணத்தை நிலை நாட்ட முன்வந்தான் சங்கிலி, சங்கிலியின் மகளைப் பணயமாகப் பெற்றுக் கொண்டு சங்கிலியனை மீண்டும் அரசாள விட்டான் தளபதி பிரகன்சா.

## போர்த்துக்கிசரின் மதவெறி

போர்த்துக்கீசர் மிருகத்தனமாக இந்துக் கோவில்களை இடித்துப் பொடிப்பொடியாக்கினர். பெரிய இந்துக்கோவில்களைக் கிறித்தவ கோவில்களாக மாற்றினர். இந்து நிறுவனங்களைத் தாக்கினர். இந்துக்களை இம்சித்தனர்; வெறியாட்டம் கட்டு மீறியது. மக்கள் கொதித்தனர். மக்கள் போர்த்துக்கீசரை எதிர்த்துப் போர் புரிந்தனர்.

பிரகன்சாவின் படை சிறிதாக இருந்தது. தமிழ் மக்கள் கொந்தளிப்பைக் கண்டு அஞ்சினுன் பிரகன்சா.

## மன்னுரில் கோட்டை

சங்கிலியனும் இதுதான் சமயமென்று தன் படைகளையும் போர்த்துக்கிசர் மீது ஏவி விட்டான். பிரகன்சா ஓட்டம் பிடிக்க ஆயத்தமானுன். அவனுடன் இருந்த தன் மகனுக்காக ஏங்கினுன் சங்கிலி. அவனிடம் தூதனுப்பிக் கெஞ்சினுன் தன் பிள்ளையைத் தரும்படி. மக்கள் மீது பழியைப் போட்டுவிட்டு மன்ருடினுன்! பிரகன்சா அசையவில்லை— அவன் கப்பல் ஆழி அலைமீது அசைந்தது. மன்னுரை வந்தடைந்தான். மன்னுரில் ஒரு கோட்டை கட்டிக் கொண்டு மேலும் தாக்குதல்களுக்குத் தயாரானுன் பிரகன்சா.

## சங்கிலி ஓட்டம்

சங்கிலி மக்கள் மீது கொடுங்கோன்மை காண்பித்தான். மக்கள் உள்ளம் கசந்தது. மக்கள்கிளர்ச்சி புரட்சியாக மாறியது. மன்னன் சங்கிலி ஓட்டம் பிடித்தான். சங்கிலியன் மகனை புவிராச பண்டாரத்தை அரசனுக்கினர். பலவீனமடைந்த தமிழரசைக் காசி நயினர் என்பவன் அபகரித்தான். மக்கள் மன்னுரிலிருந்த போர்த்துக்கிசர் உதவியுடன் இன்னெருவனை அரியாசனத்தில் ஏற்றினர்கள்.

## காசி நயினர் கொலை

காசி நயினர் சிறைப்படுத்தப்பட்டான். சிறையிலிருந்து தப்பிய காசி நயினர் மீண்டும் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினுன். மன்னுரிலிருந்த போர்த்துக்கிசர் தளபதி மீண்டும் அவனைப் பிடித்துக்கொலை செய்தான். இதன்பின் பெரிய பிள்ளை என்ற ஒருவனை செகராசசேகரன் என்ற அரச பெயருடன் அரியாசனம் ஏற்றினர். இவனைத்தொடர்ந்து புவிராச பண்டாரம் (அல்லது பரராசசேகரன்) அரியாசனம் ஏறினுன்.

## போர்த்துக்கீசர் ஆட்சியை அழிக்க முயற்சி

பரராசசேகரன் போர்த்துக்கீசர் ஆட்சியை அழித்து விட முயற்சி செய்தான். இந்தியாவிலிருந்து ஒரு படையை. வரவழைத்தான் தன் உதிவிக்கு.

இந்தியப் படைகள் வருவதாக எண்ணிக் கொண்டு போர்த்துக்கிசர் மீது போர் தொடுத்தான். படைகள் வருவதை அறிந்த போர்த்துக்கிசர்கள் கடலிலேயே இந்தியப் படைகளை விரட்டியடித்து விட்டனர். தளபதி அந்திரே த போர்ராடோ த மென்டொன்சா பெரிய ஒரு படையுடன் கொழும்புத்துறையில் வந்திறங்கினுன். அரசனை மத மாற்றம் செய்ய வந்தான். பலமிழந்த பரராசசேகரன் தோற்றுன். பராசசேகரன் படைகளைக் கலைத்து விட்டு அரச பீடம் நோக்கிப்புறப்பட்டான். வழியில் பண்டசாலைகளைக் கைப்பற்றினுன்.

## நல்லூரை நோக்கிப் படை

அடுத்த நாள் நல்லூரை நோக்கிச் சென்றது படை, நல்லூர் மக்கள் வழமைபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைந்ததேன்?

எதிர்த்துத் தாக்கினர். ஆனல் ஆயுதபலம் மிக்க போர்த்துக்கீசர் வென்றனர். பெரிய பிள்ளையின் சிறிய மகன் ஒருவனைக் கொல்ல முயன்றபோது அந்தப் பரிதாபம் சகிக்காத சிமாவோ பின்ஹறாவோ என்ற போர்வீரன் தடுத்து காப்பாற்றிஞன்.

புவிராச பண்டாரம் (பரராசசேகரன்) யாழ்ப்பாணத்தை விட்டு ஓடப்பார்த்தான். ஆனல் பேர்ராடோ அவனைக் கைது செய்து கழுத்தை வெட்டி எறிந்தான். அரசவையில் இருந்த அனைவரும் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்,

### நல்லூர் உடன்படிக்கை

இதன் பின்னர் பேர்ராடோ ஒரு அறிவித்தல் வெளியிட்டு நல்லூர்ப் பிரமுகர்கள் அனைவரையும் ஒரு பேச்சுவார்த்தைக்கு அழைத்து, போர்த்துக்கலின் மேலரசுரிமையை ஏற்கச் செய்து, கைச்சாத்திட்டு, நல்லூர் உடன்படிக்கை என்று பிரகடனப்படுத்திஞன். சிமாவோ பின்ஹறாவோ என்ற வீரனல் காப்பாற்றப் பட்ட (பெரியபிள்ளையின் மகன்) எதிர்மனசிங்கன் பரராசசேகரன் என்ற பெயருடன் 1591ல் அரியணை ஏற்றப்பட்டான்.

போர்த்துக்கீசர்கள் வெறியாட்டம் ஆடினர் - மக்கள் துன்புற்றனர். ஆனல் பரராசசேகரன் இறுதிவரை நன்றியுள்ளவனக இருந்தான். இந்துக்களுக்கு எதிரான கொடுமைகளும், மதமாற்றமும் தொடர்ந்து நடந்தன. ஆனல் அரசன் ஒன்றும் பேசவில்லை. அரசனே மதமாற்றம் செய்யப் பட்டிருப்பான் பெருமகன் சங்கிலி குமாரன் தடுத்து நிறுத்தாவிட்டால்.

### மக்கள் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டது

இந்த நிலை யாழ்ப்பாணத்தில் இருந்த பிரமுகர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவர்கள் இன்னெரு இளவரசனை அரியணை ஏற்ற முயற்சி செய்தனர். தஞ்சாவூர் நாயக்கர் குடும்பத்தின் உதவியுடனும் கண்டி மன்னன் விமலதர்மசூரியன் உதவியுடனும் இந்த முயற்சி நடந்தது. நன்றியுடன் நடந்த பரராசசேகரன் கூட சந்தேகத்துக்கிடமாகி விட்டான். ஆனல் மக்கள் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டு விட்டது.

### சங்கிலிக்கு எதிர்ப்பு

பரராசசேகரன் இறக்கும் போது அவனுக்கு ஒரு சிறு குழந்தைதான் இருந்தது. எனவே அவனது தம்பியாரை அரசகேசரி 1615ல் அரியணை ஏற்றப்பட்டான். அப்போது சங்கிலியன் பரம்பரையில் வந்த சங்கிலி குமாரன் அரசகேசரியை கொன்று வீழ்த்தி விட்டு 1617ல் அரியணை ஏறிஞன், இவன்தான் பரராசசேகரனின் மதமாற்றத்தைத் தடுத்தவன். பரம்பரை உரிமையாளர்களைக் கொன்றது போல் தமக்கும் ஆபத்து ஏற்படலாம் என்று பயந்து தமிழ் மக்கள் சங்கிலிக்கு எதிராகத் திரண்டனர். சங்கிலி போர்த்துக்கீசர் உதவியை நாடிஞன். கரையர் தலைமையில் எதிர்ப்புப் படை சங்கிலியைத் தாக்கியது போர்த்துக்கீசர் மக்கள் கிளர்ச்சியை அடக்கி சங்கிலியை மீண்டும் அரசனுக்கினர்கள்.

### ஊர்காவற்றுறைக்கு போர்த்துக்கீசர் படை

ஆனல் சங்கிலி, கிளர்ச்சி செய்த மக்களுடன் சேர்ந்து போர்த்துக்கீசர் அதிகாரத்தை அழிக்க முயற்சி செய்தான். ஒல்லாந்தருடன் சதிசெய்வதாகவும் சக்கிலி சந்தேகிக்கப்பட்டான் உடனே கொன்ஸ்டன்டைன் த சா என்ற போர்த்துக்கீச அதிகாரி, பிலிப் த ஒலிவெய்ரா என்ற தளபதியுடன் ஒரு படையை ஊர்காவற்றுறைக்கு அனுப்பினன். பூ நகரிக்கு ஊடாக.

ஒலிவெய்ரா தன் சொந்தச் சேனையுடனும் மன்னர்ப்பகுதிச் சேனையுடனும் சேர்ந்து தாக்கினர்கள், வன்னர் பண்ணையில் மக்கள் கிளர்ச்சி எழுந்தது. கரையர் தலைமையில் மக்கள் படை எழுச்சி பெற்றது.

### தமிழர்படை தோல்வி; சங்கிலிக்கு தூக்கு

ஆனல் ஆயுத பலம்வாய்ந்த போர்த்துக்கீசர் தாக்குதலைச் சகிக்கமுடியாமல் தமிழர்படை தோற்றது. போரில் தோல்வி கண்ட சங்கிலி—தன் குடும்பத்துடன் இந்தியாசெல்ல முயற்சி செய்தான். ஆனல் தமிழர் மானம் காக்கப் போரிட்ட வேந்தன் போர்த்துக்கீச விரரிடம் சிக்கிக் கொண்டான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கைதியாக அனுப்பப்பட்ட சங்கிலி, இறுதியில் கோவைக்கு அனுப்பப்பட்டான். கோவையில் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான்.

### தமிழ் அரசு கொந்தளித்தது

அரசனைக் கைதியாகப் பிடித்தாலும் தமிழ் வீரர்கள் ஓய்ந்திருக்கவில்லை. தமிழ் அரசு கொந்தளித்தது. மும்முறை புரட்சி நடந்தது. மூன்றாவது முறை போர்த்துக்கீச படைகள் முற்று கையிடப்பட்டு வீழ்ச்சியடையும் தறுவாயில் இருந்த போது, வெளியிலிருந்து வந்த படைக்குத் தமிழ் வீரர்கள் தோற்றனர். அத்துடன் தமிழ் அரசு முற்றுமுழுதாகப் போர்த்துக்கல் வசமாக மாறியது.

### பிரித்தானியர் ஆட்சியில் தனித்தன்மை இழந்தது

ஒலிவெய்ரா தமிழ் அரசின் ஆள்பதியாக நியமிக்கப்பட்டான். போர்த்துக்கீசர் கையில் இருந்த தமிழரசு 21-6-1658ல் ஒல்லாந்தர் கைக்கு மாறியது. 15-2-1796ல் பிரித்தானியர் கைக்கு மாறியது. பிரித்தானியர் ஆட்சியில்தான் தமிழரசு தன் தனித்தன்மையை இழந்து இலங்கை அரசின் ஒரே ஆட்சிக்குட்பட்டது.

1543 வரை தனியரசாக இருந்த தமிழரசு அப்போது திறை கொடுத்து வாழத் தொடங்கியது 1570ல் அரசர்களைக் கைப் பொம்மையாகப் போர்த்துக்கீசர் பாவித்த பொழுதிலும் மக்கள் கிளர்ச்சி ஓயவில்லை 1621 வரையில். ஈழத்து தமிழர் சுதந்திர வரலாற்றில் இது ஒரு சிறு கண்ணேட்டம்.

இந்த வரலாறுகூட மீள ஆராயப்பட்டு நடந்த சில உண்மைகள் வெளிப்படுத்தப் படவேண்டும். அதேபோல் உக்கிர சிங்கன் ஆட்சிக்கு முற்பட்ட தமிழரசின் நிலை நிகழ்ச்சிக் கோவையுடன் தெளிவு படுத்தப்படவேண்டும். நாம் இந்த நாட்டின் வந்தேறு குடிகளல்ல—சொந்தக்காரர்கள்.

# விசுவமடுக்குளத் திட்டம்:

# படித்த வாலிபர்களே! உடன் மனுச் செய்க

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள படித்த இளைஞர்களே! இதோ உங்களுக்கு ஒரு வாய்ப்பு. விசுவ மடுத்திட்டத்தின் கீழ் மேட்டு நிலக்காணிகள் உங்களுக்கு வழங்கப்பட விருக்கின்றன. இதற்கான விபரங்களை கீழே படியுங்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிளிநொச்சி, கோப்பாய்தொகுதிகளைத் தவிர்ந்த ஏனைய தொகுதிகளிலுள்ள படித்து வேலையற்றிருக்கும் விவாகமாகாத இலங்கைப் பிரஜைகளாகிய இளைஞர்களிடமிருந்து விசுவமடுக் குளத்திட்டத்தின் கீழ் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கு காணி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும். விசுவமடுக்குளம் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் 12ம் கட்டையில் உண்டு.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடியேற்ற வாசிக்கும் 3 ஏக்கர் காணி வழங்கப்படும். இதில் 1 ஏக்கர் வீடுகட்டி நிரந்தர பயிர்கள் நாட்ட உபயோகிக்கப்படவேண்டும். ஏனைய இரண்டு ஏக்கரில் தோட்டப் பயிர்கள் செய்யப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் நெற் பயிர் செய்யக் கூடாது. விவசாயப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற மாணவர்கட்கு தெரிவில் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடியேற்ற வாசிக்கும் அரசாங்க உதவிகள் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் பத்திரத்தில் வரையப்பட்டு 10-7-67ந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அரசாங்க அதிபர் கச்சேரி யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

தபால் உறையின் இடது மூலையில் "விசுவமடுக்குளத்தில்—வேலையற்ற இளைஞருக்கான காணி விண்ணப்பம் என வரையப்பட வேண்டும்.

**காணி விண்ணப்பம்,**

அ. விண்ணப்பக்காரரின் முழுப் பெயர்.

ஆ. வயது.

இ. தற்போதைய தபால்விலாசம்.

ஈ. பிறந்த இடம்,

உ. விண்ணப்பக்காரரின் தகப்பனரின் பெயரும் அவரின் தொழிலும்.

ஊ. விண்ணப்பக்காரர் விவாகம் செய்தவரா?

எ. விண்ணப்பக்காரரின் (அ) சொந்தக்கிராமம்.

(ஆ) கிராம சேவையாளரின் பிரிவும் இலக்கமும்.

(இ) காரியாதிகாரியின் பிரிவு.

(ஈ) பாராளுமன்றத் தொகுதி.

ஏ. மேட்டு நிலப் பயிர்ச் செய்கையின் அனுபவம்.

ஐ. [illegible] சித்தி பெற்ற திறமையும் அனுபவம்.

ஒ. சொந்தமாயுள்ள மேட்டுக் காணியினதும் நெற்காணியினதும் விபரம்.

மேற்படி திட்டத்துக்கான காணிக்கச்சேரி கீழ்க்குறிக்கப் பட்ட ஒவ்வொரு காரியாதிகாரியின் பிரிவிலும் குறிப்பிடப்பட்ட திகதியில், காலை 9-00 மணிக்கு நடைபெறும். விண்ணப்பக்காரர் காணிக் கச்சேரிக்கு நேர்முகமாகவே தமது அரிசிப் பங்கீட்டுப் புத்தகம், பிறப்பத்தாட்சிப் பத்திரம், தராதரப் பத்திரம் என்பவற்றுடன் சமுகம் அளித்தல் வேண்டும்.

காணிக்கச்சேரிகள் பின் வரும் இடங்களில் உள்ள காரியாதிகாரி அலுவலகத்தில் பின் வரும் திகதிகளில் நடைபெறும்.

| | |
|---|---|
| பருத்தித்துறை- | 1-8-67 |
| தெல்லிப்பழை- | 2-8-67 |
| சாவகச்சேரி- | 6-8-67 |
| சங்கானை- | 8-8-67 |
| ஊர்காவற்றுறை } நெடுந்தீவு } | 10-8-67 |

நெடுந்தீவுக்குரிய காணிக்கச்சேரி ஊர்காவற்றுறை காரியாதிகாரி கந்தோரில் நடைபெறும்.

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகளைத் தீர்க்க தகமிழ அரசுக்கு குறைந்தபட்சம் இன்னும் 10 ஆண்டுகளாவது செல்லும் என்று இப்பொழுது தெரிவதாலும் இலங்கை அகதிகளைத் தரிசு நிலங்களில் விவசாயம் செய்வதற்குப் பயன்படுத்தும் யோசனை இருப்பதாகத் தெரிவித்திருப்பதாலும் இந்த வாலிபர்கள் பெரும்பாலும் தங்களின் எண்ணத்தைக் கைவிட்டு வருவதாகவும் அட்டன் செய்திகள் கூறுகின்றன.

இவர்கள் இலங்கைப் பிரசைகளாவதில்தான் அக்கறை காட்டுகின்றார்களேயன்றி இந்தியப் பிரசைகளாவதில் அவர்களுக்கு ஆர்வமில்லை என்றும் கூறப்படுகிறது.

எனவே அடுத்த சில ஆண்டுகளில் ஒரு சிலரே இந்தியக் குடியுரிமை பெறுவதற்கு முன்வரக் கூடுமென்று மலையகத்தில் பரவலாகப் பேசப்படுகிறது.

—

## போதனு மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி வெள்ளையறிக்கையில் போதனு மொழியைத் தெர்வு செய்யும் உரிமையைப் பெற்றோரிடம் விட கல்வியமைச்சர் கூறியுள்ள ஆலோசனையை தமிழரசுக் கட்சி கடுமையாக எதிர்த்து வருவதும், தாய் மொழியே போதனு மொழியாக வேண்டும் என்றும் கோரி வருவது தெரிந்ததே.

இது பற்றி இம்மாதம் 25ந் திகதிய தினபதி ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. போதனு மொழிப் பிரச்சினையில் பெற்றோர் இஷ்டத்துக்கு விட மந்திரிசபை முடிவு செய்திருப்பதாகவும், இந்த நிலையில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறுமா என்றும் கேட்டிருந்தது.

இது மற்றி அமைச்சரவை வட்டாரத்தில் விசாரித்த போது மேற்படி தினபதி செய்தி வழமைப் போலப் புழுகுச் செய்தியென்று அறிய முடிந்தது.

## ஆலயப்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### சிகையலங்காரம் பற்றிய வழக்கு

சமூகக் குறைபாடு ஒழிப்புச் சட்டம் 2வது பி. பிரிவின் கீழ் சுன்னுகம் பொலீசார் சிகை அலங்காரத் தொழிலாளர் ஒருவருக்கு எதிராக மல்லாகம் மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கிலும், நீதவான் எதிரியை குற்றவாளியாகக் கண்டு அவருக்கு ரூபா 100 அபராதம் விதித்தார். மாவிட்டபுரத்தைச் சேர்ந்த முருகேசு முத்துலிங்கம், தெல்லிப் பழையிலுள்ள தமது சலூனில் தெல்லிப்பளையைச் சேர்ந்த செபமாலை பங்கிராஸ் என்பவருக்கு முடி வெட்ட மறுத்ததாக குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.


மில்க்வைற் நீலசோப் பார் சோப்




பட்டு, பருத்தி, நைலோன், ரெறலின் ஆகிய எல்லாவிதத் துணிவகைகளையும், அலுமினியப் பாத்திரங்களையும், கிளாஸ் வகைகளையும் ஆச்சரியப்படத்தக்க முறையில் சுத்தம் செய்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ நீதி

"மேகவர்ணன்"

கல்லுப்பிள்ளையார் சிரித்துக் கொண்டிருந்தார். சிரித்துக் கொண்டேஇருந்தார். யுகயுகாந்திரமாக சிரித்துக் கொண்டே இருக்கிறார். எத்தனை ஆயிரம் ஆண்டுகளானாலும் மாறுபடாத ஒரே உணர்ச்சியை உடையவர் அவர்.

ஆனால் அவரைச் சூழ உள்ள மனிதர்களுக்குத்தான் எத்தனை ஆயிரம் உணர்ச்சிக் கும்பல்கள். விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், அழுகை, சிரிப்பு; அப்பப்பா, உணர்ச்சிகளுக்குத்தான் ஒரு முடிவு இருக்கிறதா?

'பிள்ளையாரே, எப்படியாவது இவருக்கு உன்மேல நம்பிக்கை பிறக்க வேண்டும். அதுக்கு நீதான் அருள்புரிய வேண்டும்' எனக் கல்லுப் பிள்ளையாரைக் கேட்டுக் கொண்டாள் சுகிதாம்மாள்.

இதனைப் பிள்ளையாரிடம் அவள் கேட்காத நாளே இல்லை. சுந்தரின் கைப்பிடித்து, அவர் பின்னாலே இந்த வீட்டுக்கு வந்து, 'இந்தா இந்தா' என்று பத்து வருஷங்களாகி விட்டன. இல்லறத்தின் இன்பமான நாட்களை நினைவுறுத்தும் கண்ணனும் பிறந்து ஏழு வருஷங்களாகி விட்டன.

இந்தப் பத்துவருஷங்களில் தினமும் காலை ஐந்தரைமணிக்கெல்லாம் எழுந்து விடுவாள் சுகிதாம்மாள். பின் குளித்து குங்குமம் இட்டு பக்கத்து பிள்ளையார் கோவிலுக்கு காலைப்பூசை பார்க்கவருவதும் வழக்கமாகிவிட்டது. எது தவறினாலும் பூசைமட்டும் தவறுவதில்லை. கேட்கும் வரத்தையும் மறப்பதில்லை. 'இறைவா, எப்படியாவது இவருக்கு உன் மேலே நம்பிக்கை உண்டாகப் பண்ணிவிடு' என்பதுதான் வழமையான கோரிக்கை.

ஆனால் இப்பொழுதோ வேண்டுகோள் மாறிவிட்டிருந்தது. 'கடவுளே, தான்கெட்ட கேடு போதாதென்று தன் குழந்தையையுமா இப்படி வளர்க்கவேணும். 'கடவுளும் இல்லை கத்தரிக்காயும் இல்லை' என்று படித்துப் படித்துக்காட்டுகிறாரே அந்தப் பாலனுக்கு' என்று மாறிவிட்டிருந்தது.

அன்றும் அப்படித்தான் வழமைபோல குளித்து, குங்குமம் இட்டு ஆறுமணிப் பூசைக்கு அவசர அவசரமாக மலர்த்தட்டுடன் கிளம்பிக் கொண்டிருந்தாள் சுகிதாம்மாள். என்றும் போல, அன்றும், 'என்னங்க, ஆறுமணிப் பூசைக்கு நீங்க வரேல்லையா?' என்று கேட்டு வைத்தாள்.

சுந்தரும் வழமை போல, 'மனுஷன் வேலைக்கு வேலை வயிறு நிறையச் சாப்பிட முடியல்ல, கோயிலும் குளமும் தான் இப்போ குறைச்சல்' என்று கூறிவிட்டார்.

அதைப்பற்றி சுகிதாம்மாளுக்கு அவ்வளவு கவலை இல்லை. ஏனென்றால் அதே பதிலைக்கேட்டுக்கேட்டு காதே புளித்துப்போயிருந்தது அவளுக்கு. ஆனால் அத்துடன் சேர்ந்துவந்த புதுமையான பதில்தான் வேதனையைக் கொடுத்தது.

'நீங்க வராவிட்டால் பாதகமில்லை, கண்ணனையாவது கூட்டிக் கொண்டு போகிறேன்' என்றபடியே மலர்த்தட்டுடன் கண்ணனை நோக்கினாள் சுகிதாம்மாள். கண்ணன் என்னவோ மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

'ஏன்டா கண்ணு, அம்மா கோவிலுக்குப் போகிறேன் வாறியா?' என்றாள்.

'போம்மா, என்னால முடியாது. இன்னைக்கு கோவிலுக்கு வந்தா, அப்புறம் நாளைக்கு உள்ள சோதனையில விநாயகருடைய வண்டியைத்தான் படம்போட்டுட்டு வரணும்' என்றான்.

மகன் ஏதோ பெரிய 'ஹாஸ்'யத்தை வெடித்து விட்டது போல சுந்தர் பெரிதாக 'ஹா ஹா' என்று சிரித்துக் கொண்டார். தகப்பனுடன் மகனும் சேர்ந்து கொண்டான்.

சுகிதாம்மாளுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. 'தான் குட்டிச் சுவராப் போவது போதாது குழந்தையையும் எதுக்காக சேர்த்துக்கணும்' என்று மறைமுகமாக கணவனைத் தாக்கினாள்.

சுந்தருக்கும் கோபம் வந்துவிட்டது 'இந்தா பார் சுகிதா, நீ விநாயகரை நினைத்து தவங்கிடக்கிறதைப் பற்றி எவருக்கும் கவலையில்லை. ஆனால் அதுக்காக மற்றவங்களையும் எதுக்காக அதுக்குள்ளே இழுத்துப் போடணும் படிக்கும் பிள்ளையை நீ தான் குளப்புகிறாய். அப்புறம் படிக்கவில்லையே பாஸ் பண்ணவில்லையே என்று அவன்மேல குறை கூறக்கூடாது' என 'வள்' ளென்று விழுந்தார்.

சுகிதாம்மாள் மறுபேச்சுப் பேசவில்லை. 'விடுவிடெ'ன கோவிலுக்கு தன்னந்தனியாகக் கிளம்பிவிட்டாள்.

(2)

வாயுவேகத்தில் தலைதெறிக்க ஓடிவந்த பக்கத்துவீட்டு ரவிப் பையன், வாசற்படியிலே இடறியும் விழுந்துவிட்டான். அதோடு நிற்காமல் 'சுகிதாம்மா சுகிதாம்மா' என்று கூப்பாடும் போட்டுக் கொண்டிருந்தான். அடுக்களையிலே ஏதோ நறுக்கிக் கொண்டிருந்த சுகிதாம்மாள் ரவியினுடைய அவலக் குரலைக் கேட்டு விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தாள். பின் கட்டிலே ஏதோ வேலையாக இருந்த சுந்தரும் எல்லாவற்றையும் அப்படியப்படியே போட்டுவிட்டு என்னவோ ஏதோ வென ஓடிவந்தார்.

'என்ன ரவி, என்ன நடந்திட்டுது இப்போ' என துரிதப் படுத்தினாள் சுகிதாம்மாள்.

ரவியின் நிலையைப்பார்த்து ஏதோ அவசரம்என இருவரும் ஊகித்துக்கொண்டனர்.

'வந்து...வந்து...விநாயகர் கோவிலுக்குப் பக்கத்திலே உள்ள மலையில இருந்து மண் விழுந்து கண்ணன் புதைந்து விட்டான்.'

'என்ன? மண் சரிவா?... ...ஐயையோ என் குழந்தை, என் கண்ணன்' என அலறிப் புடைத்துக்கொண்டு ஓடினாள் சுகிதாம்மாள். அவளைத் தொடர்ந்து ஓடினார் சுந்தர்.

பல வருஷங்களுக்குப் பிறகு இப்போதுதான் விநாயகர் கோவிலுக்குப் போகும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது சுந்தருக்கு.

அங்கே அவர்கள் கண்ட காட்சி. அப்பப்பா, இரத்தமே உறைந்து விட்டது போலிருந்தது இருவருக்கும். விநாயகர் கோவிலுக்குப் பக்கத்திலே உயர்ந்து வளர்ந்திருந்த மலையின் ஒரு பாகம் அப்படி சரிந்து விழுந்துவிட்டிருந்தது.

அதிர்ஷ்டவசமாக கண்ணனுடைய முழு உடலும் புதைபடவில்லை. இடுப்புவரைதான் புதைபட்டிருந்தது. கோவிலுக்கு சரி நேரே பிரக்ஞை அற்றுக் கிடந்தான் கண்ணன்.

'கண்ணனும் நானும் கிட்டிப்புல் விளையாடிண்டு இருந்தோமுங்க. மண் விழறத்துக்கு கொஞ்சம் முன்னாடிதான் இப்பால வந்திட்டனுங்க நான். பாவும் கண்ணன் மட்டும் அகப்பட்டுக் கொண்டானுங்க' என்று பச்சாத்தாபப் பட்டுக் கொண்டான் ரவி.

'அட கடவுளே, என் குஞ்சக் குத்தானா இந்த நிலை வரவேணும்' என்று புலம்பியவாறே செய்வதறியாது அப்படியே உட்கார்ந்துவிட்டாள் சுகிதாம்மாள்.

ஒருசில வினாடிகள் பிரமித்து நின்ற சுந்தர் 'மள மள'வென மண்ணை அகற்றத் தொடங்கிவிட்டார். இதற்கிடையில் ஒரு கூட்டமே கூடிவிட்டது. அவசர அவசரமாக வாடகைக்குக் கார் ஒன்றை அமைத்துக் கொண்டு குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். வழி நெடுக விநாயகனையே வேண்டிக் கொண்டாள் சுகிதாம்மாள். கேட்பதெல்லாம் கொடுப்பவன் கணநாதன்என்பது அவள் கருத்து.

ஆனால் சுந்தரின் மனோநிலை அப்படி இருக்கவில்லை. ஏதோ ஒரு பௌதீக மாற்றத்தினால் மண் சரிவு ஏற்பட்டது; துர் அதிர்ஷ்ட சமாக கண்ணனும் அகப்பட்டுக் கொண்டான் என்று தனக்குத்தானே விளக்கம் கூறிக் கொண்டார் அவர்.

(3)

ஆஸ்பத்திரியிலே ஒரு நிலை கொள்ளாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார் சுந்தர். ஒரு மூலையிலே இருந்து 'பொல பொல' வென கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் சுகிதாம்மாள்.

வலதுகால் முறிந்து காயம் ஏற்பட்டிருந்தபடியால் இரத்தமெல்லாம் ஓடி பலயீனமடைந்திருந்தான் கண்ணன்.

'எதற்கும் முதலில் இரத்தம் ஏத்தனும். அம்புறம்தான் பரிசீலனை செய்யலாம்' என்று கூறிவிட்டார் டாக்டர்.

இரத்தத்துக்காக சுந்தரும், சுகிதாம்மாளும் பட்ட பாடே போதுமென்றாகிவிட்டது. அவர்களிருவருடைய இரத்தக் குறூப்பும் வேறுபட்டிருந்தது. கண்ணனுடைய குறூப் இரத்தம் ஆஸ்பத்திரியிலும் 'ஸ்டாக்' இல்லை. இரத்தத்துக்காக எங்கெல்லாமோ முயற்சி செய்து முடிவிலே தோல்வி அடைந்து களைத்து இருக்கும்போது தான் தெய்வாதீனமாக விநாயகர் கோவில் குருக்கள் வந்து எதிர்ப்பட்டார். பரிசோதித்துப் பார்த்ததில் குழந்தையின் இரத்தக் குறூப்பும் குருக்களின் குறூப்பும் ஒன்றாகவே இருந்தது.

விநாயகர் இரங்கியதுபோல குருக்கள் இரங்கியதால் கண்ணனின் உடலிலே ஒரு 'பைன்ட்' இரத்தம் ஏற்றப் பட்டது.

சுந்தரினால் இதற்கு என்ன கூறுவதென்றே புரியவில்லை. 'யார் குத்தியும் அரிசியாகட்டும்' என்ற மனோநிலையில் இருந்துவிட்டார். 'விநாயகா, நீயே கண்ணனை மண்ணுக்குள் அகப்படுத்திவிட்டு நீயே பரிகாரத்தையும் கொடுக்கிறாயா எனக் கேட்டுக் கொண்டாள் சுகிதாம்மாள்.

விநாயகா, தவங்கிடந்து பெற்ற செல்வம் எம் கண்ணன். அவனில்லாமல் ஒரு நிமிஷம் கூட எங்களால் உயிர் வாழ முடியாது. எங்கள் வாழ்வின் ஒரே ஒரு பற்றுக் கோடு அவன் தான். அவனை மட்டும் எங்களிடமிருந்து பிரித்துவிடாதே. அவனுடைய பிரிவை எங்களால் என்றுமே தாங்க முடியாது' என்று மானசிகமாக விநாயகரை வேண்டிக் கொண்டாள் சுகிதாம்மாள்.

சுந்தருக்குத் தான் எக்கச்சக்கமாகப் போய்விட்டது. பெரிய டாக்டருக்கு முன்னும் பின்னுமாக திரிந்து கொண்டிருந்தார், 'டாக்டர் சார், எப்படியாவது என் பையனை நீங்கதான் காப்பாற்ற வேணும். பையனில்லாமல் ஒரு நிமிஷம் கூட வாழமாட்டோம். நீங்க தான் எங்களைக் காப்பற்ற வேணும்' எனக் காலில் விழாத குறையாக, கண்ணீர் விடாத குறையாக கேட்டுக் கொண்டிருந்தார்.

பாவம் டாக்டர் என்ன செய்ய முடியும், மிஸ்டர் சுந்தர். நம்மாலே என்ன செய்ய முடியும் எல்லாம் விதிப்படியே நடந்து தீரும். உங்க இஷ்ட தெய்வத்திடம் எல்லாத்தையும் பாரம் கொடுத்திடுங்க' என்று கூறிவிட்டார்,

மனிதனுக்கு ஞானம் பிறப்பதுக்கு சுருக்கமானவழி ஆஸ்பத்திரியிலே போய் ஒரு கிழமை தங்கிவிடுவதுதான். சுந்தரும் சுகிதாம்மாளும் மட்டுமென்ன விதி விலக்கா. ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, ஒரு மாதமாக அங்கே கிடந்து உழன்றுவிட்டார்கள். அந்த ஒரு மாதத்துக்குள் அவர்கள் அடைந்த அனுபவங்கள்தான் எத்தனை எத்தனை. சுந்தருக்கு ஒருவித அனுபவம். சுகிதாமமாளுக்கு வேறொருவித அனுபவம்.

'அப்பா அப்பா, விநாயகர் என்னைக் கூப்பிடுறார் அப்பா. பானை போன்ற பிரமாண்டமான வயிற்றோட, துதிக்கையில போதகம் ஒன்றினை வைத்துக் கொண்டு 'உனக்குத் தானடா கண்ணு வைத்திருக்கிறேன் ஓடிவா' என்று கூப்பிடுறார் அப்பா' என்று பிதற்றிய கண்ணன் பின் அமைதியாகக் கிடந்தான். அப்புறம் ஒரே அமைதி. மீளாத அமைதி.

'ஓ' வெனக் கதறி அழுதாள் சுகிதாம்மாள் 'கண்ணு கண்ணு' என தலையைப் பிய்த்துக்கொண்டார் சுந்தர்.

உலகம் சுழன்று கொண்டே இருந்தது இரவு பகல் மாறி மாறி வந்து கொண்டே இருந்தது. அத்துடன் கண்ணனின் உயிரும் போயே போய் விட்டது. விநாயகரும் அதைத் தடுக்கவில்லை. டாக்டராலும் அதைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை.

(4)

கண்ணன் போய் கிழமையும் ஒன்றாகிவிட்டது. சுந்தருக்கும் சுகிதாம்மாளுக்கும் ஊனும் இல்லை உறக்கமும் இல்லை. கண்ணன் இல்லாத வீடு களையிழந்து, ஒளியிழந்து, கடவுள் இல்லாத கோவில் போல வெறிச்சென்றிருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை. 'என்ன சுகிதா இன்று வெள்ளிக்கிழமையல்லவா விநாயகர் கோவிலுக்குப் போகவில்லையா?' என்றார் சுந்தர்.

'கோவிலும் குளமும்தான் இப்போ குறைச்சல். பத்து வருஷமாக பகல் இரவென்று பாராமல் கல்லுப்பிள்ளையாரை வலம்வந்து வணங்கிக் கொண்டிருந்தேனே.முடிவிலே என்னத்தைக் கண்டேன். என் குஞ்சனைக்கூட யமனிடமிருந்து மீட்டுத்தரவில்லையே அந்த விநாயகர்.'

சுந்தர் மெதுவாகச் சிரித்துக் கொண்டார். 'சுகிதா, எங்க இஷ்டப்படி எல்லாத்தையும் நிறைவேற்றுவதென்றால் இறைவனால் உலகையே ஆள முடியாது.'

சுகிதாம்மாள் பிரமித்துப் போனாள். கண்களைக் கசக்கிக் கொண்டு கணவனையே உற்றுப் பார்த்தாள். தனது கணவன் சுந்தர்தானா பேசுவது. அவளால் நம்பவே முடியவில்லை. 'கடவுளாவது கத்தரிக்காயாவது' என்று காலந் தள்ளிக் கொண்டிருந்த கணவனா இப்படி கடவுளைப் பற்றிப் பேசுவது.

'சுகிதா, என்னைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கா?'

சுகிதாம்மாவாள் ஒருவார்த்தைகூடப்பேச முடியவில்லை. அப்படியே கல்லாகச் சமைந்து விட்டாள்.

(14-ம் பக்கம் பார்க்க)

எமது சிறுகதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொசிஜின்-ஜோன்சன் சந்திப்பு

# உலக அமைதிக்கு வழி வகுக்குமா?

உலகின் இரு பெரும் வல்லரசுகளின் தலைவர்களான கோசிஜினும், ஜோன்சனும் சென்ற வாரம் ஒருவரை யொருவர் சந்தித்து உலகப் பிரச்சினைகளை பற்றி கருத்துப் பரிமாறல் செய்து கொண்டுள்ளார்கள். இந்தச் சந்திப்பு உலக யுத்தம் ஒன்று ஏற்படுவதைத் தவிர்க்கும் என்பதுடன் மேற்குஆசியா, தென் கிழக்கு ஆசியா ஆகிய இடங்களில் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கும் சமாதானத் தீர்வு காண வழிவகுக்கும் என்றும் உலக ராஜதந்திரிகள் கருதுகிறார்கள்.

1961ம் ஆண்டு கென்னடி—குருசேவ் சந்திப்பின் பின்னர் இரு வல்லரசுத் தலைவர்களுக்குமிடையில் ஏற்பட்ட முதல் சந்திப்பு இது.

உலக அமைதிக்கு சவால் விட்டுக்கொண்டிருக்கும் பல பிரச்சினைகளையிட்டு இரு பெருந் தலைவர்களும் பேசியிருக்கிறார்கள். வியட்நாம், மத்திய கிழக்கு, இவற்றுடன் அணு ஆயுத உற்பத்தித் தடை ஒப்பந்தம் ஒன்றை சர்வதேச அடிப்படையில் உருவாக்குவதுபற்றியும் விவாதித்திருக்கிறார்கள்.

### புதுமை கிடையாது

முதல் நாள் சந்திப்பில் 'இஸ்ரேல் மத்திய கிழக்கில் உள்ள ஒரு நாடு' என்பதை இரு தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது. இதில் ஒன்றும் புதுமை கிடையாது. இவ்விரு வல்லரசுகளும் என்று இஸ்ரேலை அங்கீகரித்தனவோ, அன்றே இஸ்ரேல் ஒரு நாடு என்பதை ஏற்றுக் கொண்டுவிட்டன. ஒரு நாடு என்பதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் எப்படி அதனை அங்கீகரிக்க முடியும்? சரியாகவோ, தவறாகவோ இஸ்ரேல் என்றொரு நாடு மத்திய கிழக்கில் இருபதாண்டுகளுக்கு முன்னர் உருவாகிவிட்டது. இஸ்ரேல் நாட்டை முதன் முதலாக ஒரு நாடாக அங்கீகரித்தவை சோவியத் யூனியனும் அமெரிக்காவும்தான்.

### அரபுகளுக்கு சிந்தனைமாற்றம் ஏற்படுமா?

மத்திய கிழக்கில் இஸ்ரேலை ஒரு நாடாக ஒப்புக்கொள்வது பற்றி அரபு நாடுகளின் தலைவர்களும் சிந்திக்க வேண்டிய பிரச்சினைதான் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. ஆனால் இன்றுள்ள நிலைமையில் அரபு நாடுகள் இஸ்ரேலை அங்கீகரிக்குமென்று தோன்றவில்லை.

சிந்தனை மாற்றங்கள் அரபுத் தலைவர்களுக்கு உண்டாகாது என்று நிச்சயமாகக் கூறுவது சாத்தியமில்லை.

### மத்திய தரைக்கடலில் கொந்தளிப்பு

இஸ்ரேல்—அரபு தகராறில் அமெரிக்காவும் ரஷியாவும் சமாதானப் பேச்சுக்களில் இறங்கியிருக்கும் அதே சமயம் மத்தியதரைக் கடல் இன்னும் கொந்தளித்துக்கொண்டுதான் இருக்கிறது.

சோவியத் யுத்தக்கப்பல்கள் மத்தியதரைக் கடலிலேயே நிலைகுத்தியுள்ளன. அமெரிக்காவின் 6வது கப்பற்படையும் நின்ற இடத்திலேயே நிற்கிறது. ஆக, மத்தியதரைக்கடல் இன்று யுத்தபீதி நிறைந்த ஒன்றாகவே காட்சியளிக்கிறது.

### டி கால் போட்ட 'குண்டு'

மத்திய கிழக்கு தகராற்றில் யுத்தம் ஆரம்பமானதற்கு இஸ்ரேலையே காரணம் காட்டி பிரஞ்சு அதிபர் டி கால் இவ்வாரம் குற்றஞ்சுமத்தியுள்ளது பலருக்கு ஆச்சரியத்தை விளைவித்திருக்கும். அமெரிக்கா, பிரிட்டன் சார்பாகவே பிரான்சும் இருக்கும் என்று பொதுவாக கருதப்பட்டு வந்தது. ஆனால் பிரிட்டனின் கருத்துக்கு மாறாக இஸ்ரேலையே குற்றஞ்சாட்டியிருக்கிறார் டி கால். இந்த மனமாற்றம் டி காலுக்கு எப்படி ஏற்பட்டது?

டி கால் இந்த அறிவிப்பை விடுப்பதற்கு முன்னர், டிகாலை சோவியத் பிரதமர் கோசிஜின் பாரிசில் சந்தித்துப் பேசியுள்ளார். ஆகவே கொசிஜினின் செல்வாக்கே, பிரஞ்சு ஜனாதிபதியின் உள்ளத்தை மாற்றியிருக்கலாமென்று கூறப்படுகிறது.

அதே நேரத்தில், இஸ்ரேலுக்கு வாழும் உரிமையளிக்கப்படவேண்டும்' என்றும்

## இஸ்ரேல்-அரபு தகராற்றில் பிரிட்டன்கொள்கைமாற்றம்?

டி கால் கூறியிருக்கிறார். இந்த இரண்டாவது அம்சம், இப்பொழுது ரஷ்ய, அமெரிக்க வல்லரசுகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

### பிரிட்டன் கொள்கை என்ன?

இஸ்ரேல்—அரபுதகராற்றில் பிரிட்டனின் கொள்கையென்ன என்பது இப்போது பிரச்சினைக்கிடமான ஒன்றாகி விட்டது. பிடித்த இடங்களை இஸ்ரேல் விடவேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டன் ஆதரிக்காது என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால் ஐ. நா. சபையில் உரையாற்றிய பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஜோர்ஜ் பிரவுன், பழைய ஜெருசலேம் நகரை இஸ்ரேல் தனதாக்கிக் கொண்டால், உலக நாடுகளிலிருந்து இஸ்ரேல் துண்டிக்கப்பட்டு விடுவதுடன், அவற்றின் ஆதரவை'யும் இழந்துவிடும் என்று கூறியுள்ளார். இது ஏனைய நாடுகளுக்கு பெருத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜோர்ஜ் பிரவுன் பிரிட்டிஷ் பிரதமரின் நெருங்கிய நண்பர். ஆகவே ஜோர்ஜ் பிரவுனின் கருத்து வில்சனின் கருத்துத் தானா? அப்படியானால் இஸ்ரேல்—அரபு பிரச்சினையில் பிரிட்டன் மனம் மாறி விட்டதா?

### எண்ணெயே காரணம்

பிரிட்டன் மனம் மாறியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் மீண்டும் அரபு நாடுகளின் ஆதரவு பிரிட்டனுக்கு தேவையென்பதை பிரிட்டன் உணர்ந்திருக்கலாமல்லவா? அரபு மண்ணில் ஊறும் எண்ணெய்தான் எல்லாவற்றிற்கும் காரணம்.

மத்திய கிழக்குப் பிரச்சினையில் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷியா ஆகிய நான்கு நாடுகளும் ஒரு விஷயத்தில் இணக்கம் கண்டிருப்பதாகவே கூறலாம். அதாவது இஸ்ரேலுக்கு 'வாழும் உரிமையை' அளிப்பது. இந்த உரிமையை அங்கீகரித்தால், அடுத்த நடவடிக்கை, பிடிக்கப்பட்ட அரபுப் பிராந்தியங்களை விட்டு இஸ்ரேல் படைகளை வாபஸ் பெறச் செய்வதே. இதிலும், இந்நான்கு வல்லரசுகளும் ஒன்றுபடுமா என்பதே இன்றுள்ள பிரச்சினை.

மத்திய கிழக்குப் பிரச்சினையில் சமாதானத்தீர்வு காண்பதற்காகஐ.நா.சபைகூடியஅதே நேரத்தில் சீனா தனது ஜலவாயு குண்டை வெடித்துள்ளது. அரபுமக்கள் சோவியத்திடம் காட்டும் அனுபவத்தை தன்பால் திருப்பவே சீனா இந்த நேரத்தில் அந்தக் குண்டை வெடித்திருக்கலாம். ஆனால் சீன ஜல வாயுக்குண்டு, சோவியத்துக்கும் ஐக்கிய அரபுக்குடியரசுக்கும் மிக நெருக்கமான பிணைப்பையே ஏற்படுத்தியிருக்கிறது. சோவியத் ஜனாதிபதி கெய்ரோவுக்கு நேரில் விஜயம் செய்து நாசருடன் அளவளாவியதுடன், சோவியத் ஆயுதங்களை இனமாக அளிக்கவும் உடன்பாடு செய்திருக்கிறார். சமாதான முயற்சியில், ரஷியா இறங்கியுள்ள அதே வேளையில், போருக்கு வேண்டிய உதவிகளையும் அரபு நாடுகளுக்கு அளித்து வருகிறது.

### சீன ஜல குண்டு: அமெரிக்கர் பீதி

சீனஜலவாயுகுண்டு அமெரிக்காவிலும், பீதியைக் கிளப்பியுள்ளது.அமெரிக்க மக்கள்சீனாவில் ஜலவாயுக் குண்டு வெடிக்கப்பட்ட பின்னர் சீனா அமெரிக்காவை விரைவில் அழித்து விட முயலலாம் என்று அச்சப்பட ஆரம்பித்துள்ளார்களாம்.

சீனா விரைவில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் குண்டுகளை செய்து விடலாமென்றும் அதை உபயோகித்து, அமெரிக்காவை அழித்து விடமுயலலாமென்ற அச்சம் பரவலாக எழுந்துள்ளது. இந்த அச்சம் ஜோன்சன் அரசாங்கத்தின் மீது வெறுப்பாகவும் பரிணமித்து வருகிறது. சீனக் குண்டிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கான பாது காப்பு ஏற்பாடுகளை செய்ய ஜோன்சன் ஆட்சி தவறி விட்டதென்று பலத்த கண்டனம் எழுந்துள்ளது.

### இந்தியா அணுகுண்டு தயாரிக்குமா?

சீனாவின் ஜலகுண்டு இந்தியாவிலும் பெருத்த வாதப் பிரதிவாதங்களை கிளப்பியிருக்கிறது. இந்தியாவும், அணுவாயுதங்களைத் தயாரிக்க வேண்டுமென்று டில்லிப் பாராளுமன்றத்தில் வற்புறுத்தப்பட்டது. இந்த யோசனையைத் திருமதி இந்திரா நிராகரித்து விட்டார்.

அணுவாயுதங்கள் போன்ற பாதுகாப்புக் கருவிகளை ஒரு நாடு தயாரிக்கும் போது அதைப் பகிரங்கமாக கூறிக் கொண்டு செய்வது கிடையாது. இந்த உண்மையை திருமதி இந்திரா காந்தியும் இந்திய அரசாங்கத்தினரும் நன்குணர்ந்துள்ளனர்.

—எஸ். ஆர். எம்

## சீன ஜலவாயு குண்டால் ஏற்பட்டுள்ள எதிரொலி

## தமிழக மெங்கும் தி.மு.க. ஆர்ப்பாட்டம்

### ஜுலை 23ல் நடைபெறும்

சேலம் உருக்காலைத் திட்டத்தையும், தூத்துக்குடி ஆழ் கடல் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தையும் உடன் மேற்கொள்ளும்படி இந்திய மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தும் பொருட்டு தமிழகம் முழுவதிலும் பரவலாக ஜுலை 23ந் திகதி ஆர்ப்பாட்டம் நடத்த தி. மு. க. திட்டம் திட்டியுள்ளது.

இத் தகவலை சேத்தப்பட்டியில் நடைபெற்ற பொதுக் கூட்டமென்றில் பேசிய பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது பற்றி முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை சட்ட மன்றத்தில் பேசுகையில், கண்டனம், கிளர்ச்சி, பதவி துறப்பு போன்ற முறைகளை உள்ளடக்கிய செயல் திட்டம் ஒன்று எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ஜுலை 23ந் திகதிய ஆர்ப்பாட்டம் பற்றி அறிஞர் அண்ணாவின் அறிக்கை வெளியிடப்பட்டதும், ஆர்ப்பாட்டத்துக்கான ஒழுங்குகள் செய்யப்படவிருப்பதாக தி. மு. க. தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

### வள்ளுவர் விழா

இன்று (29-6-67) பி. ப. 6-30 மணிக்கு மட்டுவில் சரசுவதி வித்தியாலய மண்டபத்தில் வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் வள்ளுவர் விழா நடைபெறும்.

சாவகச்சேரி, கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் திருவாளர்கள் [illegible] ளம்பலம், ஏ. இளஞ்செழியன் [illegible] இருக்கிறார்கள்.

இதோ ஒரு
தலைசிறந்த வாய்ப்பு!

சுதந்திரன்

★ நியாயமான கட்டணத்தில்...

★ குறித்த நேரத்தில்...

★ கவர்ச்சியான அமைப்பில்...

★ திறமையான வேலைப் பாட்டுடன்...

★ சகல அச்சுவேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுப்போம்.

அச்சகம்

சுதந்திரன் அச்சகத்துக்கு நீங்களும் ஒரு சந்தர்ப்பத்தை ஏன் கொடுக்கக் கூடாது?

20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் அச்சகம்.

194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்மினி லண்டனில் பெற்ற அனுபவம்

கும்பகோணம் ராமஸ்வாமி ஐயர் ஹோட்டல் என்று ஒரு ஹோட்டல் லண்டனில் இருக்கிறது. அதை நடத்துபவர் கும்பகோணம் ராமஸ்வாமி ஐயர். அங்கு இட்லி தோசை எல்லாம் கிடைக்கிறது. ஏன்? அவியல் கூட கிடைக்கிறது. அங்கு வெள்ளைக்காரர்கள் கூட வந்து 'டிபன்' சாப்பிடுகிறார்கள். அது மட்டுமல்ல, வீராசாமி ரெஸ்டாரன்ட்' என்று கூட ஒரு ஹோட்டல் அங்கு இருக்கிறது அதன் நிர்வாகி ஒரு வெள்ளைக்காரர்தான். ஆனால் அங்கு உழைத்த வீராசாமி என்பவர் நினைவாக தம் ஹோட்டலுக்கே அப் பெயரைச் சூட்டி விட்டிருக்கிறார் அந்த வெள்ளைக்காரர். லண்டனில் நம் நாட்டுக் காய்கறிகள் கூட தாராளமாகக் கிடைக்கின்றன. வெண்டைக்காய் கறிவேப்பிலை, சேப்பங் கிழங்கு, சேனைக்கிழங்கு எல்லாம் அங்கு ஏராளமாக விற்பனையாகின்றன.

லண்டனில் நான் மகிழ்ச்சியோடு அனுபவித்த ஒன்று—தெருக்களில்ப்ரீயாகநடந்தது. மற்றொன்று 'டவுன்பஸ்'களில் தாராளமாகப் பயணம்செய்து கொண்டிருந்தது!'



# பாரதியைக் கண்டு விஜயராணி பயந்தார்

புதுக்கோட்டையிலிருந்து புறப்பட்டு வந்தால் கலைஞராகத்தான் வரவேண்டும் என்பது நியதிபோல இருக்கிறது. மறக்க முடியுமா மூலம் திரைக்கு வந்திருக்கும் விஜயராணியும், பி. யு. சின்னப்பா, ஜெமினி கணேசன், ஏ.வி.எம். ராஜன் வழியில் வந்தவர் (ஒரே ஊரிலிருந்து வந்ததால்).



அண்மையில் ''சோ'' வின் நாடகத்தில் நடிப்பதற்காக பம்பாய் சென்ற விஜயராணி வரும் பொழுது விமான மூலம் வந்தார். பெங்களூர் வந்ததும் அதற்கு மேல் விமானம் சென்னையை நோக்கிச் செல்லாது என்று விமான அதிகாரி பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார். காரணம்?

புயல் வீசிக் கொண்டிருந்ததால் சென்னைக்கு எப்படிப் போவது என்று திணறிக் கொண்டிருந்தார். மறுநாள் விமானம் புறப்படும் என்று அறிவித்தார்கள். சரி என்று கூறிவிட்டுப் பெங்களூரில் தன் தோழி வீட்டிற்கு சென்று மறுநாள் விமான நிலயத்திற்கு 12-30க்கு வந்தார். விமானத்திற்கு பதில் அடிச்சுவடைத்தான் பார்க்க நேர்ந்தது விஜயராணியால். காரணம்? விமானம் சரியாக 12 மணிக்குச் சென்னைக்கு புறப்பட்டு விட்டது.

சரி ரயிலில் போகலாம் என்று முடிவு செய்து ரயில் நிலயத்துக்கு வந்தார். ''பிருந்தாவனம்'' எக்ஸ்பிரஸில் முதல் வகுப்பு டிக்கெட் கிடைக்கவில்லை. அவசரமாக போகவேண்டும் என்று முடிவு செய்ததால் மூன்றும் வகுப்புக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு, பயந்து பயந்து பெட்டியில் ஏறினார். ஏன் பயம்? தன்னையாராவது அடையாளம் கண்டு கொண்டால்...

ஒரு வழியாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஏறி அமர்ந்து கொண்டார். வண்டி புறப்பட முப்பது நிமிஷம் இருந்தது. வெளியே ஜன்னல் வழியாக யார் யார் போகிறார்கள் என்று உற்றுப் பார்த்த விஜயராணிக்கு தூக்கிவாரிப் போட்டது.

ஆமாம், விஜயராணியை கலங்க வைத்தது அப்படி என்ன?

அப்பொழுது அதே வண்டியில் சென்னைக்குவருவதற்காக முதல் வகுப்பு பெட்டியை நோக்கிப் பாரதி போய்க் கொண்டிருந்ததுதான். தன்னை பாரதி கண்டு விட்டால்...

ஏன்மூன்றும்வகுப்பில் பிரயாணம் செய்கிறீர்கள்?... என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது என்றுதெரியாமல் பயந்து தலையை உள்ளே இழுத்துக் கொண்டார். திரையில் தோன்றும் விஜயராணி.

**அடுத்த இதழில்**

**''பட்டணத்தில் பூதம்''**

**சினிமாப் போட்டி**

# திரைவாணன் பதில்கள்

பொ. தேவலிங்கம்
மட்டக்களப்பு

கே: சென்ற ஆண்டு (1966) தமிழகத்தில் திரையிடப்பட்ட அன்பேவா, பெற்றால்தான் பிள்ளையா, குமரிப்பெண். முகராசி, சரஸ்வதிசபதம், ராமு போன்ற படங்களில் அதிக வசூலைத் தந்த முதல் மூன்று படங்களையும் வரிசைப்படி கூறவும்?

ப: சரசுவதி சபதம், அன்பே வா, முகராசி

ஃ

சு. மனோகரன்,
இறத் தோட்டை

கே: எம். ஜி. ஆர். திரையுலகிலிருந்து விலகி அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு அதன் மூலம் புது நடிகர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமெனக் கூறப்படுவதை தாங்கள் ஆதரிக்கிறீர்களா?

ப: ஆதரிக்க மாட்டேன். எம். ஜி. ஆர். திரையுலகிலிருந்து கொண்டே புதியநடிகர்களைக் கைதூக்கி விட்டுக் கொண்டிருக்கும் போது அவர் அதிலிருந்து ஏன் விலகவேண்டும்?

ஃ

சிவாஜி ராஜன்
கொட்டடி

கே: சிம்மக்குரலோன் சிவாஜி கணேசன் நடித்து தென்னகமெங்கும் வெற்றியுடன் ஓடிக் கொண்டிருக்கும். 'பேசும் தெய்வம்' பற்றி தாங்கள் கூறுவதென்ன?

ப: வழமைபோல பெண்களைக் கவரும் சில அம்சங்களைப் புகுத்தி பேசுந்தெய்வத்தை வெற்றிப்படமாக்கி விட்டார் கோபாலகிருஷ்ணன்.

கே: நடிகர் திலகம் தற்போது எத்தனை படங்களில் நடித்துவருகிறார்?

ப: சுமார் 1 டஜன் படங்களில்.

ஃ

கே. எஸ். இலிங்கம்,
தெல்லிப்பழை

கே: தென்னகத் திரைவானிலே ஆகச்சிறந்த நடிகர் யார்?

ப: முன்பு சின்னப்பா. இப்பொழுது சிவாஜி. எதிர் காலத்தில் யாரோ?

ஃ

மா. குலேந்திரன்,
இரத்மலானை.

கே: மக்கள் திலகத்தை வரவேற்கவோ வழியனுப்பவோ வந்த சனத்திரளிலும் 1/20 பங்குகூட நடிகர் திலகத்துக்கு வரவில்லையே, காரணம் ஏனோ?

ப: சிவாஜி கணேசன் ஒரு மக்கள் திலகமாக இல்லாதது தான்!

ஃ

வீ. கருணாநிதி,
தலவாகொல்லை.

கே: மக்கள் திலகம் எம். ஜி. ஆர். பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: அவர் ஒரு 'மக்கள் திலகம்' என்பதே

ஃ

பி. எஸ். மார்க்கண்டு,
களுதாவளை.

கே: இப்போதுவரும் புதுமுக நடிகர்கள் அனைவரும் எம். ஜி. ஆரின் நடிப்பை காப்பி அடிக்கிறார்கள். ஆனால் அவர்களால் நடிகர் திலகத்தின் நடிப்பை காப்பி அடிக்க முடியவில்லையே என்ன காரணம்?

ப: அதுதான் நடிகர் திலகத்தின் நடிப்பிலுள்ள தனிச் சிறப்பு.

ஃ

மு. த. சி. நியாயா,
மினுவன்கொட.

கே: எம்.ஜி.ஆர். சுகமடைந்த பின் நடிக்கும் 'மறு பிறவி' எப்போது வெளிவரும்?

ப: ஆகஸ்ட் 15 க்குள் முடித்துவிட வேண்டுமென்று தான் தேவர் திட்டமிட்டிருக்கிறார்.

கே: செல்வம் படத்தில் கே. ஆர். விஜயா நடிகர் திலகத்துடன் ஜோடியாக நடித்த காரணம் என்ன?

ப: அப்படத்தில் சிவாஜிக்கு ஜோடியாக நடிக்க அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டதே.

ஃ

சு. தவராசா,
நாவலப்பிட்டி.

கே: சிவாஜி நடித்த 'சரஸ்வதி சபதம்' வெற்றிப் படமா? எத்தனை நாட்கள் ஓடியது?

ப: வெற்றிப் படமே. 20 வாரங்களுக்குமேல் ஓடியிருக்கிறது.

ஃ

கந்த. ஞானமுத்தன்
ஊகதுடி, தெற்கு

கே: 1966ம் ஆண்டில் தமிழ்ப் படத்தின் சிறந்த நடிகர், நடிகையர் யார்?

ப: அது ரசிகர்களாகிய நீங்கள் முடிவு செய்ய வேண்டியதல்லவா?

ஃ

வி. இராசரெட்ணம்
அக்கரைப்பற்று

கே: எம். ஜி. ஆர். தற்பொழுது ஜெயலலிதாவுடன் எப் படத்தில் நடிக்கிறார்?

ப: 'காவல்காரன்' படத்தில் நடித்துவருகிறார்.


ஃ

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை

கே: 'பேசும் தெய்வம்' வெற்றிப்படமா?

ப: ஆம்.

திரைவாணன்,
சுதந்திரன் கலைப்பூஞ்சோலை
த. பெ. இல. 1183.
கொழும்பு.



'பட்டணத்தில் பூதம்' படத்தில் விஜயா, ஜெய்சங்கர்

# ராதிகா பற்றி கே.எஸ்.ஜி. கருத்து

**என்** படத்தில் நடிக்க புது முகம் ஒருவரை கதாநாயகியாக போட வேண்டும் என்று எண்ணிய பொழுது, என் மேஜைக்கு வந்திருந்த ''போட்டோ'' ஆல்பத்தைப் புரட்டிப் பார்த்தேன் (பஞ்சாங்கத்தைப் புரட்டுவது போல்) ராதிகா படங்களில் ஏதோ ஒன்று இருப்பதாக எனக்கு தெரியவந்தது.

ராதிகா எப்படிப்பட்டவர் என்பதை சிலர்மூலம் அறிந்து கொண்டேன் மிகவும் வசதியான குடும்பத்தைச் சார்ந்தவர் [illegible] வரச்சொல்லி ''டெஸ்ட்''



எடுத்தேன். பிறகு சொல்லி அனுப்புவதாகச் சொன்னேன். ''உங்கள் படத்தில் என்னை நீங்க போட்டே ஆகணும் என்று பிடிவாதம் பிடித்தகோடு. நீங்க என்னை போட்டால்தான் நான் முன்னுக்கு வரமுடியும்'' என்றார்.

யோசித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் மறுபடியும் அவரிடமிருந்து ''போன்'' வந்தது. ''என்ன சார், எப்பொழுது போடப்போகிறீர்கள்?'' என்று கேட்டார். ''இன்னும் ஒரேஒரு பாயின்டு பாக்கி. அதனால் யோசிக்கிறேன். அது முடிந்ததும் போடுகிறேன்'' என்றேன்.

ராதிகா பணத்துக்காக நடிக்க வேண்டியவர் அல்ல; நானோ முன் கோபக்காரன். படம் முடியும் சமயத்தில் கோபத்தில் ஏதாவது நான் சொல்ல வசதியான குடும்பமாக இருப்பதால், படமும் வேண்டாம் என்று கூறி படப்பிடிப்புக்கு வராமல் போய் விட்டால் —

துணிந்து போட்டேன். எனக்கு திருப்தியாகவே இருந்தது. நான் சொல்லிக் கொடுத்தபடி எல்லாம் அலுக்காமல் செய்தார். அதனால் எனக்கும் நிறைவு, அவருக்கும் நிறைவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் 'அன்பே வா' வண்ணப்படத்தில் எம். ஜி. ஆர். சரோஜாதேவி.

# இலங்கையிலிருக்கும் தங்கவேலுவின் காதலர்

நகைச்சுவை நடிகர் கே. ஏ. தங்கவேலு தங்கவேலம்மாளாக இருந்திருந்தால், அதாவது ஒரு பெண்ணாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்?

பௌடர் பூசிக்கொண்டு நடிக்க வந்திருப்பாரா? அல்லது மஞ்சள் பூசிக்கொண்டு வீட்டில் அடங்கி இருந்திருப்பாரா?

இரண்டும் செய்ய மாட்டேன். காதலித்துத் திருமணம் செய்து கொண்டு காதல் வாழ்க்கை நடத்துவேன்!'' என்று தங்கவேலு கூறினார்.



அந்தக் காதலன் யாரென்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

அந்தக் காதலன் நம் இலங்கையில் இருக்கிறார். ஆம்! தமிழரசுத் தந்தை செல்வநாயகம் இருக்கிறாரே! அவர் தான் தங்கவேலம்மாளின் காதலன்!

தன்னுடைய இலங்கைப் பயணத்தைப்பற்றி தமிழகப் பத்திரிகை நிருபர் ஒருவரிடம் கூறிக்கொண்டிருக்கும்பொழுது, தன் காதல் உள்ளத்தை வெளியிட்டார் தங்கவேலு!

அதைப்பற்றி அவர் கூறியதாவது.

"இலங்கையிலே நான் நாடகம் நடத்திக்கிட்டிருந்தேன். அப்போது யாரோ ஒருத்தர் வந்து, 'நாடகம் பார்க்கத் தமிழ்த் தலைவர் செல்வநாயகம் வந்திருக்கார்'ன்னு சொன்னாரு. என் உடம்பே சிலிர்த்திருச்சு. ஏன்னா... அவரைப் பார்க்கணும்னு எனக்கு ஏழெட்டு வருஷமா ஆசை.

திரைக்குப் பின்னாலே ஒரு ஓரமா நின்னுக்கிட்டு அவரைப்பார்த்தேன். ஆகா!... இந்தத் தள்ளாத வயதிலேயும் தமிழருக்காகத் தளராத சேவை செஞ்சுக்கிட்டிருக்கிற அவரைப் பார்க்கப் பார்க்க என் உள்ளம் பூரிச்சுப்போச்சு.

என் கம்பெனி ஆளுங்களை எல்லாம் போய் அவரு கால்லே விழுங்கன்னு அனுப்பிச்சேன். ஆனா...... ஒருத்தரையாவது கால்லே விழுறதுக்கு அவரு அனுமதிக்கல்லே. புடிச்சுப் புடிச்சு விசிறிட்டாரு.

கடைசியா நான் போய் அவரு கால்லே விழுந்திட்டேன். அவரு விடலே. என்னைப் பிடிச்சுக் கிட்டாரு. நான் ஆனந்தக் கண்ணீர் வடிச்சேன்.



'' நாடகத்தின் இடைவேளை நேரத்திலே நான் பேசினேன். அப்போது, ''மகா ஜனங்களே... தமிழ்த் தலைவர் கால்லே நாங்க போய் விழுந்தா... எங்களைப் புடிச்சு' புடிச்சு விசிறிட்டாரு. அந்த மாதிரி அவரு எப்படிச் செய்யலாம். அவருக்குக் காலுதான் சொந்தம். விழுந்து கும்பிடறது எங்களுக்குச் சொந்தம்னு சொன்னேன்.

'ஸ்டேடியத்திலே ஒரே அப்ளாஸ். அதுக்கப்புறம் 'ஆண்டவனே, நான் ஏன் பொண்ணைப் பொறக்கல்லேன்னு வருத்தப்படறேன். பொண்ணைப் பொறந்திருந்தேன்னா... நம்பத் தமிழ்த் தலைவர் செல்வநாயகத்தையே காதலிச்சு, கல்யாணம் செஞ்சிருப்பேன்'னு சொன்னேன். அவ்வளவு தான். அங்கே ஒரே சிரிப்பு.

'தமிழ்த் தலைவரும் குலுங்கிக் குலுங்கிச் சிரிச்சாரு! அவரு ஒருத்தரு சிரிச்சது எனக்கு இலங்கை நாடே சிரிச்ச மாதிரி இருந்துச்சு. தன் வீட்டுக்குப் போயும் கூட இதைச் சொல்லிச் சொல்லி, சிரிச்சதாய்க் கேள்விப்பட்டேன்.''

# விஜயாவின் ரகசியம்



விஜயாவின் வீட்டின் முன் ஒரு பெண் விசிறி அடிக்கடி காட்சி அளிப்பாள். விஜயாவும் அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு புன்னகையைச் சிந்துவாள். ஒரு நாள் அப்பெண்ணுக்குப் பதிலாக ஒரு பெரியவர் கையில் ஒரு பெரிய மூட்டையுடன் காட்சியளித்தார். அவர் சாமர்த்தியமான ஒரு புடவை வியாபாரி. அவர் நொடியில் புடவைகளை ரக ரகமாக பிரித்து வைத்து விட்டார்! ''நான் என்ன கடையா வைக்கப் போகிறேன்? அவ்வளவையும் ஏன் பிரிக்கிறீங்க?'' என்று கேட்ட விஜயா அவற்றிலிருந்து ஒன்று ஒன்றாகப் பொறுக்கியெடுத்து தனியே வைத்தார். கடைசியில் கட்டி வந்த துணிதான் பாக்கியிருந்தது அக் கடைக்காரருக்கு. சிரித்தவாறே அத்துணியை உதறியெடுத்துக் கொண்ட கடைக்காரரை நோக்கி ''எப்படி எனக்குப் பிடிச்ச புடவைங்களாவே பார்த்துக் கொண்டு வந்தீங்க'' என்று கேட்டார் விஜயா. அதற்கு அவர் ''என் தங்கச்சி உங்களுடைய ரசிகை உங்க படம்னா கண்டிப்பாக பார்க்கும். தினமும் உங்க வீட்டுக்கு காலையிலே வந்துவிட்டுத் தான் காலேஜ் போகும். போகும் முன், தினமும் நீங்கள் என்ன புடவை உடுத்தினீர்கள் என்ன ஜாக்கெட் அணிந்தீர்கள் என்று என்னிடம் கூறும். ஒரு சில நாட்களைத் தவிர மற்ற நாட்களில் பிடித்தமாக நீங்கள் அணிவது வெள்ளை பின்னணி கொண்ட சேலைதான் என்பதை அறிந்து கொண்டேன்'' என்றார். சிரித்தவாறே விஜயா செக்கில் கையொப்பம் இட்டு விட்டுப் படப் பிடிப்புக்குக் கிளம்பினார்.

# போர் முரசு விரைவில் கேட்கும்

வெள்ளவத்தை உதய சூரியன் நாடக மன்றத்தினரின் 'போர் முரசு' நாடகம் விரைவில் மேடையேற்றப்படவிருக்கிறது. இத்தகவலை அதன் தயாரிப்பாளரும் நட்டுவாங்கம் செய்பவருமான திரு. என். முத்தையா தெரிவித்திருக்கிறார்.

சரித்திர நாடகமான 'போர் முரசு' வெள்ளவத்தை உதய சூரியன் நாடகமன்றத்தாரின் நான்காவது தயாரிப்பாகும்.

இந்நாடகத்தில் திரு. எஸ். வசந்தகுமார் கதாநாயகனாகவும் முகம்மது பாரூக் வில்லனாகவும் வருகிறார்கள்.

பல இளம் நடிகைகளும் பங்கேற்கும் இந்நாடகத்தில் செல்வி. மலர் இந்திராணியின் நாட்டியமும் இடம் பெறும் என்று தெரிகிறது.

## ஆவரங்காலில் புரேக்கர் கந்தையா

ஆவரங்கால் நெசவு நிலைய நிதிக்காக இம்மாதம் 29-ந் திகதி கொழும்பு கலைச்சங்கத்தினரின் 'புரேக்கர் கந்தையா' என்னும் நாடகம் நடைபெறவிருக்கிறது. ஆவரங்கால் சிவன்கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் நடைபெறும் இந்நாடகத்துக்கு மொழக்குறைஞர் திரு. மு. ஆலால சுந்தரம் தலைமை வகிப்பார்.

## ரகசியப் பொலிஸ் 115 வளர்கிறது

எம். ஜி. ஆருக்கு ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் தடைபட்டிருந்த பத்மினி பிக்சர்ஸாரின் ரகசியப் பொலீஸ் 115 [illegible] இப்படத்தில் புரட்சி நடிகரின் ஜோடியாக [illegible]டை நிர்மலா நடிக்கிறார்.



யாழ் இந்துக் கல்லூரியில் அண்மையில் நடந்த சேக்கிழார் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் போது நடைபெற்ற 'சேரமான் தோழர்' என்னும் நாடகத்தில் பங்கு கொண்டோர். இந்நாடகத்தின் கதை, வசனம், டைரக்ஷனை [illegible] யாழ்ப்பாணமும், இசையை திரு. கா. [illegible] வாசரும் அமைத்திருந்தனர்.



கண்களிலே கடமையுணர்ச்சி ததும்ப டாக்டர் வேடத்தில் காணப்படும் சௌகார் ஜானகியை நீர்க்குமிழி' படத்தில் நீங்கள் சந்திக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 29-6-67—5-7-67

### மேடம்

நிலைமாறல், செய் தொழில் நட்டம், பெரியோர் உதவி, உறவினர் வருகை, தெய்வ வழிபாடு, பொருளைக் குறித்து மனச் சஞ்சலம், குடும்பத் தொல்லை, இடையரு யோசனை.

### இடபம்

தேக சுகக்குறைவு, குடும்பத்தில் பெண்பாலாரால்நன்மை, வருமானம் நன்று, பிரயாணங்கள் ஏற்படும். கல்விப் பேறு வியாபார முன்னேற்றம். புது மனை கட்ட முயற்சி, லாபம் உண்டு.

### மிதுனம்

பெரியோர்கள் உறவு, நற்சிந்தனை பிள்ளைகள் சுப கருமம், காலம் தப்பிய கடன் வசூலித்தல், வாய்வு ரோகம், தீர்த்த யாத்திரை, மன மகிழ்ச்சி.

### கடகம்

வாதரோகம், தண்ணீரினால் ஆபத்து, தனி வழி போவது கூடாது, குடும்ப மனஸ்தாபம், பொருளைக் குறித்து மனச் சஞ்சலம். விஷபயமுண்டு.

### சிங்கம்

செலவு அதிகம். இடையரு மன வேதனை, பெற்றோர் சகோதரங்களுடன் வெறுப்பு, உதவி செய்தும் குறை கேட்டல், எவருடனும் நம்பிக்கையிழத்தல், சினேகிதரும் புறக்கணிப்பர்.

### கன்னி

குடும்பத்தில் சமசிய வாழ்க்கை, பொருள் வரவு, பெரியவர்கள் புத்திமதி கூறல், பிரயாணத்தில் துன்பம், புதியவர் தோன்றல், வாகன லாபம், கிழமை முடிவில் அதிர்ச்சிப் புதினம்.

### துலாம்

கடன் பயம், குடும்பசுக வாழ்வு, பெரியவரை உபசரித்தல் பெண்பாலாரால் அவமரியாதை, சுற்றத்தாருடன் மன வேற்றுமை, அன்னிய தேச வாசம்.

### விருச்சிகம்

இடமாற்றம், நூதன பொருள் சேர்த்தல் மனச் சந்தோஷம், தொழிலினால் வருமான உயர்வு, சங்கீத விருப்பம், தாம்பூலப் பிரியம், குடும்ப சுகக்குறைவு.

### தனு

பொருள் விரயம், குடும்பத்தில் விரோதம், நம்பி மோசம் போதல், கொடுத்தும் குறை கேட்டல், அசைவற்ற அசைவுள்ள பொருள்கள் விலைபேசி நட்டமடைதல், நினைத்த காரியம் செய்வதற்குப் போதிய உதவியின்றி மனம் சோர்வடைதல், எதிலும் ஆறுதல் நன்று.

### மகரம்

இளைய சகோதரர் விழ்ந்து காயமுறல் குடும்பத்தில் மித மிஞ்சிய மகிழ்ச்சி, உறவினரின் சேர்க்கை, பிற நாட்டிலிருந்து சுக கரும சேதி அறிதல், பொருளும் சேரும்.

### கும்பம்

பிணி, துயரம் தெரிந்தும் தெரியாமலும் செய்த முற்பிழைகளையிட்டு மனம் வருந்துதல், மித மிஞ்சிய செலவினால் கடன் படுதல், பிள்ளைகளினால் மகிழ்ச்சி, பிரிந்தவர்கள் ஒன்றுபட முயற்சி ஏற்படும்.

### மீனம்

குடும்பம் பிரிந்து வாழ்தல், மனச்சஞ்சலம், பெண்களினால் நிந்தனை, பிரயாணத்தில் பொருள் களவு. மந்த புத்தி விருப்பமற்ற கருமத்தில் ஈடுபெற்றுப் பெரியோரால் எச்சரிக்கைப்படுத்தல், விஷ பயமுண்டு.

---

## தெய்வ நீதி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஆச்சரியப்படாதே சுகிதா. இத்தனை காலமாக கடவுள் என்ற ஒரு சக்தியே இல்லை என்றுதான் இருந்தேன். ஆனால் கண்ணன் போனபிறகு எல்லாமே அவன் செயல் - என்று தான் புரிகிறது. வரையறுக்கப்பட்ட சக்திதான் மனிதனுடையது வரையறுக்கப்படாத சக்தி ஒன்று இருக்கத்தான் செய்கிறது என்று உணருகிறேன். கண்ணனுடையஉயிரை எவராலுமே தடுக்க முடியவில்லையே, எல்லாம் அவன் செயல்படியே நடந்து வருகிறது. எம்மால் ஒன்றுமே ஆகாது' என்று கூறிவிட்டு. 'உனக்கு முதல் நானே கோவிலுக்கு போயிட்டு வந்திட்டேன் சுகிதா' என்றபடி கோவில் திருநீற்றை சுகிதாம்மாளிடம் நீட்டினார். கல்லுப் பொம்மைபோல வாயற்று விட்டாள் சுகிதாம்மாள்.

மௌனமாக திருநீற்றை வாங்கிப் பூசியபடியே, விநாயகா, பத்து வருஷ காலமாக உனது காலடியிலே விழுந்து கேட்டுக் கொண்டு வந்த வரத்தை இன்று தந்துவிட்டாய். என் கோரிக்கையை நிறைவேற்றிவிட்டாய். ஆனால் அதற்குப் பரிசாக நீ ஏற்றுக் கொண்ட பொருள் என் கண்ணன் கண்ணன்தானா? உன்னை யாரப்பா அறிவர்? உன்செயலை எவரப்பா புரிவர்?' என்று சிப்தித்தபடி கோவிலுக்குப் புறப்பட்டாள் சுகிதாம்மாள்

அங்கே பிள்ளையார் சிரித்துக் கொண்டிருந்தார்; சிரித்துக் கொண்டே இருந்தார். யுக யுகாந்திரமாக அவர் சிரித்துக் கொண்டே இருக்கிறார்.

(யாவும் கற்பனை)

## பாரதியாரின் பேத்தி இலங்கை விஜயம்

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பேத்தி திருமதி சு. விஜயபாரதி, பாரதியாரின் பேரனும், ஆங்கிலவிரிவுரையாளருமான திரு. கே. சுந்தரராஜன் தென்னகத்தின் பிரபல எழுத்தாளர், திரு. கு அழகிரிசாமி ஆகியோர் விரைவில் இலங்கை வருவார்கள் என்று அறியப்படுகிறது.

இவர்கள் கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலாக பல இடங்களுக்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் தெரிகிறது.

---

## கொலை நடந்த...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துரை பங்களாவிலிருந்தால், நான் வீட்டுக்குப்போவதில்லை. நான் வீட்டிலிருந்தால், துரை பங்களாவில் இல்லை என்பதை யாரும் தெரிந்து கொள்ளலாம். அன்றுமாலைவரை 3 வது எதிரி பங்களாவில் மேசன் வேலை செய்தார். 3 வது எதிரி அன்றிரவு எங்கள் வீட்டுக்கு வந்து, 'உங்கள் வீட்டில் என்ன சத்தம்'? என்று கேட்டார். கிராமபோன் சத்தத்தைதான் அவர் குறிப்பிட்டாரா என்பது எனக்குத் தெரியாது.

கே:- துரை வெளியேபோயிருக்கிறார். ஆகையால் கிராமபோனைப் போட்டிருக்கிறேன்' என்று நீங்கள் அவருக்குப் பதிலளித்தீரா?

பதில்:- இல்லை.

### நீலக் கைக்குட்டை பற்றி சாட்சி

(கோர்ட்டாரின் கேள்வி ஒன்றுக்கு சாட்சி பதிலளிக்கையில், துரையிடம் நீலநிறக் கைக்குட்டை இருக்கவில்லையென்றும், (நீலநிறக் கைக்குட்டையை சாட்சியிடம் காட்டியபொழுது) இந்தக் கைக்குட்டை துரையுடையதல்ல என்பது தனக்கு நிச்சயமாகத் தெரியுமென்றும் சாட்சி கூறினார்.

பின்னர் ஸ்டெலன்பர்க் தோட்டத்தில் தச்சுத் தொழிலாளியாக வேலைசெய்த எம். எச். அர்நோலிஸ் அப்பு சாட்சியமளித்தார்.

அவர் கூறியதாவது:-

'முதலாவது எதிரி இதே போன்ற ஒரு சிவப்புக் கைக்குட்டையைத் தலையில் கட்டிக் கொண்டிருப்பதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். அக் கைக்குட்டையின் ஒரு மூலையில் இதேபோன்ற ஒரு சாவி தொங்கிக் கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

### மற்றொரு நபரும் போனார்

போப்துரை கொல்லப்பட்ட தினத்தில் மாலை 5-5.30 மணி சுமாருக்கு வேலை முடிந்துநான் வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கும்போது வீராசாமியும் மற்றொரு நபரும் பங்களாவை நோக்கிப் போவதைக் கண்டேன்.

எங்கே போகிறீர் என்று வீராசாமியிடம் நான் கேட்டேன் துரையிடம் கொஞ்சம் பணம் வாங்கப்போவதாக அவர் பதிலளித்தார். அன்று வழக்கம் போல அவர் அந்தக் கைக்குட்டையைத் தலையில் கட்டியிருந்தாரா என்பதை என்னால் கூறமுடியாது.

பின்னர் 4 வது எதிரியின் வழக்கறிஞர் திரு. டேவிட் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தபோது, இந்த வழக்கில் கிழ்க்கோர்ட்டில் தான் இரு முறை வாக்குமூலமளித்ததாகச் சாட்சி சொன்னார்.

கேள்வி:- இந்த இரண்டு வாக்குமூலங்களிலும் நீங்கள் 1 வது எதிரியிடம் பேசியதாகவும், துரையிடம் பணம் வாங்கப் போவதாக எதிரிபதிலளித்ததாகவும் கூறினீர்களா?

பதில்:- அப்பொழுது என்னிடம் அதுபற்றி கேள்வி கேட்கவில்லை.

சாட்சி மேலும் தெரிவித்ததாவது:-

### பஜாரில் இம்மாதிரி சாவியில்லை

'நான் உப்புராசி பஜாருக்குச் சென்றிருக்கிறேன். அந்த பஜாரில் இம்மாதிரியான சாவியை நான் பார்த்ததில்லை. சாவிகளைப் பற்றி கடைகளில் விசாரிக்கவேண்டிய தேவை எதுவும் எனக்கு இருக்கவில்லை.

மற்றத் தொழிலாளர்களிடம் இருக்கும் கைக்குட்டைகளை நான் பார்த்ததில்லை.

நான் இப்பொழுது பொரளையில் ஒரு விடுதியில் தங்கியிருக்கிறேன். இந்தவழக்கில் சாட்சிகளான 10, 15 பேர் இந்த விடுதியில் தங்கியிருக்கிறார்கள் கோர்ட் கலைந்ததும் போலிசார் எங்களை அந்த விடுதிக்கு அழைத்துச் செல்வதில்லை.

முதலாவது எதிரி தேயிலைத் தொழிற்சாலையில் வேலை செய்தார். நான் அண்மையிலுள்ள தச்சப்பட்டறையில் வேலை செய்தேன். நான் தொழிற்சாலையிலும் வெளியிலும் முதலாவது எதிரியை அடிக்கடி சந்தித்துப் பேசுவேன்.'

ஜூரர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விஜயம் செய்ய விருமபுவதாக ஜூரர்களின் போர்மன் கோர்ட்டாரிடம் தெரிவித்தார்.

கோர்ட்டார்:- போர்மன் அவர்களே, உங்களுடைய வேண்டுகோளை நான்பரிசீலனை செய்து அதுபற்றி எனது கட்டளையைப் பிறகு தெரிவிப்பேன்.




---

# ஆசிரியர்களின் தமிழ்த் தொண்டுக்கு எம். பி. பாராட்டு

'அன்று சேரனும் சோழனும் பாண்டியனும், முச் சங்கம் அமைத்து முத்தமிழை வளர்த்தார்கள். இன்று மன்னர்கள் இல்லை. குடியாட்சிக் காலம் இது. இன்றைய நிலையில் தமிழ் மகன் ஒவ்வொருவனும் சேரனும் சோழனும் பாண்டியனுமாக மாறி தமிழை வளர்க் வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் தமிழ் வளர்ச்யில் தமிழாசிரியர்கள் செய்துவரும் தொண்டு அளப்பரிது' இவ்வாறு மட்டுநகர் ஆசிரிய கலாசாலையின் ஆதரவில் நடைபெற்ற தமிழ் விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசிய மட்டுநகர் முதல் பிரதிநிதி திரு. செ. இராசதுரை குறிப்பிட்டார.

மட்டுநகர் ஆசிரிய கலாசாலை முத்தமிழ் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த தமிழ் விழா மூன்று நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் காலை குத்து விளக்கேற்றி மட்டுநகர் முதலவர் திரு. செ. இராசதுரை விழவை ஆரம்பித்துவைத்துப் பேசினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழை வளர்ப்பதிலும், தமிழுக்கு விழா எடுப்பதிலும், ஆசிரிய கலாசாலை ஆர்வம் காட்டி வருகிறது. இது பாராட்டக் கூடியதாகும். தமிழை வளர்க்கும் பெரும் பொறுப்பு இன்று ஆசிரியர்களிடையே பெருமளவில் உண்டு'

முதல் நாள் கலை நிகழ்ச்சிகளுக்கு கலாசாலை அதிபர் திரு. கந்தையா தலைமை வகித்தார். காலை நிகழ்ச்சியில், பண்டிதர் சந்திரசேகரம் 'கவிதையும் கற்பனையும்' என்ற பொருள் பற்றி பேசினார்

அன்றைய மாலை நிகழ்ச்சிகள் கலாசாலை திறந்த வெளி அரங்கில் உதவி அதிபர் திரு. எஸ். திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெற்றது. செல்வி இ. யோகேஸ்வரி வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. பொ. சின்னத்துரை 'வள்ளுவர் காட்டிய வழி' பற்றி பேசினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் கவிஞர் திரு. காசி ஆனந்தன், திரு. சி. மௌன குரு ஆகியோர் பேசினர். 'சங்கம் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் ஒரு கவியரங்கமும் இடம் பெற்றது.

---

## இந்தியத்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் நலன்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு புனர் வாழ்வு கிடைகக உடனடியாக அக்கறையுடன் வழி செய்வதற்கும் ஒரு தமிழர் இந்தியத் தூதுவராக இங்கு இருப்பது விரும்பத் தக்கது என்று அவர்கள் கருதுகிறார்கள்—

அண்ணா எடுக்கும் துரித முயற்சியால் விரைவில் தமிழர் ஒருவர் இலங்கைத் தூதுவராக பொறுப்பேற்கலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

---

## புதிய சமாதானநீதவான்



புத்தூர் மேற்கு முன்னாள் கிராமாதிகாரி திரு. சி. சங்கரப்பிள்ளை அவர்கள் சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளார். பொதுப்பணியில் மிக்க ஆர்வம் கொண்டு உழைத்து வரும் இவர், யாழ்ப்பாணம் - மலையாளம் ஐக்கிய புகையிலைச் சங்கத்தின் தனாதிகாரியாகவும், புத்தூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உப தலைவராகவும், வலிகாமம் கிழக்குப் பயிர்ச்செய்கைக் குழுக்களின் சமாதானத் தலைவராகவும், புத்தூர் கிழக்கு, ஆவரங்கால் பயிர்ச் செய்கைக் குழுக்களின் தலைவராகவும், புத்தூர் கிராமசபை வரியிறுப்பாளர் சங்கத் தலைவராகவும், புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தா கல்லூரி பெற்றோர் ஆசிரிய சங்க செயலாளராகவும் கடமையாற்றிவருகிறார்.

இவர் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## விஞ்ஞான...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாள். ஒன்றை மட்டும் அவள் குறைக்கவில்லை. அதுதான் மற்றவர்களுடன் சம்பாஷிப்பது.

லீலாவின் ஆடம்பரச் செலவுக்குப் பணம் போதாது இருந்தபடியால் அவள் ஆலோசனைப்படி வீட்டின் ஒரு அறையை கொக்குவில் சின்னையரின் மகன் நாதனுக்கு வாடகைக்குக் கொடுத்திருந்தான் விசுவராசன். சின்னையரும் நாதனும் அங்குச் செல்லும போது 'கவர்ச்சியாக உடை அணிவது எப்படி;' என்ற நூலைப் பார்த்தவாறே விருந்தையில் இருந்தாள் லீலா.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

கற்க கசடறக் கற்பவை
கற்றபின்
நிற்க அதற்குத் தக

# மாணவர் அரங்கு

ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

மாணவர் சிறுகதை:

# அரசகுமாரனின் வெற்றிகள்!

மா. குலேந்திரன்

ஒரு ஊரிலே ஒரு இராசா இருந்தார். அவருக்கு இரண்டு மைந்தர்கள் இருந்தார்கள். குடிகளை அன்புடன் பராமரித்து அவர்களின் அன்புக்கு பாத்திரமானர். இப்படியே அவர் இன்பமுடன் அரசாட்சி நடத்திக்கொண்டிருக்கையில் வேற்றூர் அரசன் அந்நாட்டின் மீது படையெடுத்து இவரது நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான்.

இவர் தமது மனைவி மக்களுடன் நாட்டை விட்டு வெளியேறினர். மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக இவரை வழியனுப்பினர்கள். இப்படி இவர் நாட்டை விட்டு வெளியேறி நடந்து கொண்டிருக்கையில் ஒரு உபாத்தியாயரைச் சந்தித்தனர். உபாத்தியாயரின் விருப்பப்படியே தன்னுடைய இரு குமாரர்களையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டு கலைகள் யாவும் கற்ற பின்னர் ஒருவனைத் தம்மிடம் தரும்படி கேட்டுக் கொண்டார் இராசா. அவரும் மனைவியும் சத்திரத்தில் இருந்தும் பிச்சையெடுத்தும் வயிற்றை வளர்த்தனர்.

காலச் சக்கரம் சுழன்றது. உபாத்தியாயர் வீட்டு மாடுகளை மேய்த்தான் முதற் குமாரன். இரண்டாவது மைந்தனே ஆயகலைகள் யாவற்றையும் பயின்று கூடுவிட்டுக் கூடு பாயும் மந்திரத்தையும் கற்றுக்கொண்டான். குறிப்பிட்ட நாள் நெருங்கியது ஒரு வாரத்துக்கு முன்னர் ஓரிரவில் இரண்டாவதுமைந்தன் பருந்து வேடமெடுத்துக் கொண்டு சத்திரத்துக்குச் சென்றான். தனது தகப்பனரிடம், 'ஐயா! நான் சகல கலைகளையும் கற்றுக்கொண்டேன். அண்ணன் மாடு மேய்க்கின்றார். ஆனால் நீங்கள் அந்தக் குறிப்பிட்ட நாளில் வரும்போது அண்ணன் படிப்பித்துக் கொண்டும் நான் வெயிலிலே நெற்றிக் கல்லை வைத்துக் கொண்டும் நிற்பதைக் காண்பீர்கள் ஆனால் நீங்களோ என்னைத் தான் வேண்டுமெனக் கேளுங்கள் பின் நடப்பதைப் பாருங்கள்' என்று கூறிப்போனான்,

அந்த நாள் வந்தது, இராசாமனைவியுடன் வந்தார். இளையவன் கூறியபடியே தமையன் தலைப்பாகை கட்டிப் படிப்பித்துக் கொண்டு நிற்பதையும், அவன் வெளியில் நிற்பதையும் கண்டார். அப்போது அங்கே வந்த உபாத்தியாயர் 'ஐயா, உங்கள் மூத்தவன் திறைமைசாலி இளையவனே மொக்கு அதோ நெற்றியில் கல்லை வைத்துக் கொண்டு வெயிலில் நிற்கிறான்' என்று காட்டினர்.

இராசா, உபாத்தியாயரே நீர் சிரமப்பட்டுப் படிப்பித்த மூத்த மகனை உம்முடன் வைத்துக்கொள்ளும். மொக்கனன இளையவன் எங்களுடன் சேர்ந்து பிச்சையெடுக்கட்டும் எனக் கூறி அவனை அழைத்துச் சென்றார்.

சத்திரத்தை அடைந்ததும் தகப்பனிடம் 'ஐயா நாளை இந்தவூர் இராசா, சேவல் ஒன்று தேடி வருவார். நான் சேவலாக மாறுகிறேன் நீங்கள்' என்னைச் சந்தையில் கொண்டு போய் வைத்திருங்கள் என்றான்.

மறு நாள் காலை அவன் ஓர் அழகிய சேவலாக மாறினன். தகப்பனும் சேவலைத் தூக்கிக் கொண்டு சந்தைக்குச் சென்றார். அங்கே சேவல் தேடி வந்த அரசன் தனக்கு விரும்பிய சகல அம்சங்களுடனும் அழகாகக் காணப்பட்ட அச் சேவலுக்கு பத்தாயிரம் பொன் கொடுத்து வாங்கிச் சென்றார். அதனைக் கொண்டு போய் ஒரு அழகிய கூட்டில் அடைத்து வைத்தார். அன்றிரவு இவன் கூட்டை விட்டுப் புறப்பட்டு வந்து விட்டான். மறு நாட் காலை கூட்டினுள் சேவலைக் காணவில்லை. ஏவலாட்கள் திகைத்தனர் அங்கே பெரிய ஒரு கிடங்கு காணப்பட்டது. அரசன் ஏதோ சேவலைப் பிடித்துக் கொண்டு போய்விட்டது என நினைத்தார்.

அவ்வூரிலிருந்த பெரிய பிரபுவின் மகன் தனக்கொரு பஞ்ச கல்யாணிக் குதிரை வேண்டுமென அடம் பிடித்தான். இதனை அறிந்த இளங்குமரன் தகப்பனிடம் தான் ஒரு பஞ்சகல்யாணக் குதிரையாக மாறுவதாயும் அதனைக் கொண்டு போய் அப் பிரபு வீட்டில் விற்கும் படியும் கூறினன். அவ்விதமே தகப்பனும் குதிரையைக் கொண்டு பிரபு வீட்டிற்குச் சென்றார். அங்கே அந்த உபாத்தியாயர் இருந்தார். இந்த இரகசியங்களை அறிந்த அவர். தான் சவாரி செய்து பார்ப்பதாகக் கூறிப் புரவியில் ஏறிச் சவாரி செய்தார். அது காடு, மேடு, பள்ளம் யாவற்றையும் கடந்து வேகமாக ஓடியது, ஈற்றில் ஒரு குளத்தில் நீர் குடிக்கச் சென்ற போது அங்கே இறந்து கிடந்த ஒரு மீனுள் புகுந்து கொண்டான். குதிரை அப்படியே நிலத்தில் சரிந்தது. உபாத்தியாயர் பலரின் உதவியுடன் குளத்தை இறைத்தார் ஆனல் அதற்கிடையில் அங்கே இறந்து கிடந்த ஓர் கிளியின் உடலில் புகுந்து பறந்தான். இதனைக் கண்ட உபாத்தியாயர் பருந்து வேடமிட்டுத் துரத்தினர். கடைசியில் அந்தக் கிளி அவ்வூர் அரசிளங்குமரியின் மடியில் போய் விழுந்தது. அவள் அதனை ஒரு பொற் கூட்டில் வளர்த்து வந்தாள். இரவில் யாரோ ஒரு ஆடவன் எவரையும் அறியாது தன் அறையுள் பிரவேசிப்பதை அறிந்தாள். இதனை அறிய ஓரிரவு விழித்திருந்தாள். அப்போது ஒரு அரசிளங்குமரன் அவளது கட்டிலின் கீழ் இருந்து வருவதைக்கண்டாள். அவன் யாவையும் விபரமாகக் கூறினன். மறுநாள் தன் (கிளி)யை கூட்டிலிருந்து திறந்து விடும்படியும் அப்போது பருந்து தன்னைத் துரத்துமெனவும் அவ் வேளை தான் மாலையாக அவள் கழுத்தில் விழுவதாகவும் அதனைக் கசக்கி எறியும் படியும் பின் நடப்பவைகளைப் பார்க்கும் படியும் கூறினன்.

மறு நாள் கூடு திறந்து விடப்பட்டது. பருந்து அவனைத் துரத்திக் கொண்டு வந்தது. உடனே அவன் மாலையாக அரசிளங்குமரியின் கழுத்தில் விழுந்தான். அதனை அவன் கூறியபடியே கசக்கி எறிந்தாள். அவை புழுக்களாக மாறின. அப்போது பருந்து கோழியாக மாறி அவற்றைப் பொறுக்கத் தொடங்கியது. உடனே புழுக்கள் பூனையாக மாறி கோழியின் கழுத்தைப் பிடித்துக் கௌவியது. செய்வதறியாது தவித்த கோழி நான் தோற்றுவிட்டேன்! என உரக்கக் கத்தியது. இச் சத்தம் அரண்மனை எங்கும் பிரதிபலித்தது. அரசன் உட்பட அனைவரும் ஓடி வந்தனர். கோழியும், பூனையும் தங்கள் சுய ரூபங்களை எடுத்தன. சகலத்தையும் விபரமாக அறிந்த அரசன் மகளை அந்த இளைஞனுக்கு மணமுடித்து வைத்தார்.

## ஷாவின் நகைச்சுவை

உலகத்தில் பணம் தான் மிக மிக முக்கியமானது. அதுதான் உடல் நலம் அதுதான் வலிமை. பணம் இல்லாத வாழ்வு வீண் என்று சொன்னவர் அறிஞர் ஷா.

தெரியாத்தனமாக எதிலும் மாட்டிக் கொண்டாலும் தனது நகைச்சுவைப் பேச்சுக்களினாலும் செய்கைகளினாலும் தப்பித்துக் கொள்ளும் திறமை பெர்னட் ஷாவிடம் உண்டு. லண்டனில் நடந்த ஒரு கூட்டத்தில் பெர்னட்ஷா பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். 'என்ன விபரீதம் பாருங்கள் சாலையில் நடப்பதற்கு இடமில்லாமல் பெரிய மோட்டார்கார்கள் செல்கின்றன. அதே சமயம் இருக்க இடமின்றி சாக்கடைபோன்ற சேரிகளில் இடங்களில் குடியிருப்பவர்களைப் பார்க்கின்றோம். இந்தச் சேரிகள் இருக்கும் வரையும் நாம் ஆடம்பரங்களுக்கு இடம் கொடுப்பது நியாயமா? இப்பொழுது கூட உள்ளே வருபவர்களுக்கு இடைஞ்சலாக வாயிலில் ஒரு கார் நிற்கிறது'' என்றதும் கார் நிற்கும் இடத்தை எல்லாரும் முறைப்பாகப் பார்த்தார்கள். இதைக் கவனித்த ஷா உடனே ''நீங்கள் அதை நொறுக்கி எறிவதற்குள் ஒரு விசயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். அந்தக் கார் என்னுடையதாக்கும்'' என்று கூறி நிலைமை ஷா சமாளித்துக் கொண்டார்.

—சி. சண்முகலிங்கம்

# தெரிந்து கொள்ளுங்கள்

## விமானத்தில்பறந்த முதல் தமிழர்

இந்தியாவிலே முதன் முதலாக பறந்த தமிழர் சி. வி. கிருஷ்ணசாமி செட்டி. தமிழர் என்பதற்காக நாமெல்லாம் பெருமைப் படலாம், 1910-ம் ஆண்டு கிரகாம் டெல் என்ற வெள்ளைக்காரரின் விமானத்தில் அவருடன் சேர்ந்து இவரும் பிரயாணம் செய்தார். இவர் சென்னை நகரசபையில் என்ஜினியராக இருந்தவர்' சென்னை கடற்கரைகளிலும் பூங்காக்களிலும் ஒலிபெருக்கி வைத்தவரும் இவர்தான் இவர் (25-6-65ல்) 82வது வயதில் காலமானர்.

## வால் நட்சத்திரம்

வால் நட்சத்திரம் என்பது வானமண்டலத்தில்தோன்றும்' ஒரு கோளமாகும். சூரிய மண்டலத்தை சுற்றி ஆயிரக்கணக்கில் இவை இருக்கின்றன. சில நேரம் சூரிய மண்டலத்தைச் சுற்றிச் செல்லும் பாதையிலிருந்து விலகிச்செல்லும். அப்போதுதான் அவை நமக்குத் தெளிவாகத் தெரியும். சூரிய கிரணங்களின் அழுத்த சக்தி இந்த கோளங்களை அழுத்த, வால்போல் நீண்டு தெரியும், ஆகவே இதை வால் நட்சத்திரம் என்கிறோம். இந்த வால் 10 கோடி மைல் நீளம்கூட இருக்கலாம்.

அனுப்பியவர்:

கந்த. ஞானமுத்தன்
கைதடி, தெற்கு,

# உலகறிந்த விஞ்ஞானி சேர். ஹென்றி போர்ட்

இன்றைய வையுகத்தில் எத்தனையோ மோட்டார் வாகனங்கள் இடைவிடாது எந்த நேரமும் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருக்கின்றன. இவைகளெல்லாம் நீங்கள் அறிந்ததே. ஆனல், மோட்டார் வாகனத்தை முதன் முதலில் கண்டு பிடித்த மா பெரும் விஞ்ஞானியைப் பற்றி அறிந்திருப்பீர்களா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாகும், முதன் முதலில் மோட்டார் வாகனத்தைக் கண்டு பிடித்தவர் சேர். ஹென்றி போர்ட் என்னும் அமெரிக்க விஞ்ஞானியே.

இவர் 1863 ம் ஆண்டில் அமெரிக்காவில் கிறீன் பீல்ட் என்னும்இடத்தில் பிறந்தார். இவர் தந்தையார் ஓர் சாதாரண விவசாயி, இவருக்குப் பள்ளிப்படிப்பில் ஆர்வம் இல்லாததால் தன் தந்தையாருடன் தோட்டத்தில் வேலை செய்து வந்தார். எனினும் இவர் தமது ஓய்வு நேரங்களில் கடிகாரங்கள், இயந்திரங்கள் முதலியவைகளைத் திருத்தும் முயற்சியிலீடுபட்டார். இவர் தமது பத்தொன்பதாவது வயதில் 'எடிசன்' கூட்டுத் தாபனத்தில் முதல் எஞ்சினியராகக் கடமையேற்றார்.

இங்கு இவர் வேலை செய்யும் போது, ஏழு ஆண்டுகளாக முயன்று ஓர் மோட்டார் வண்டியைச் செய்து முடித்தார். பின்னர், பல மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்வதற்காக ஓர் கூட்டுத் தாபனத்தை நிறுவினர். இந்தஸ்தாபனம் 'போர்ட்' மோட்டார் கூட்டுத்தாபனமென அவர் பெயரால் வழங்கப்பட்டது. இன்றும் இக்கூட்டுத்தாபனம், தன் புகழ் மங்காது எத்தனையோ மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்கின்றது. இன்று இங்கு ஏறக்குறைய ஒரு இலட்சம் தொழிலாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

ஆ. இரகுபதி

# காலை கண்ணை விழிக்கின்றேன்

"மஹாகவி"

காலை கண்ணை விழிக்கின்றேன்.
கதவு திறந்து வருகின்றேன்.
பாலைச் சிந்தி விட்டதுபோல்,
படியில் வெய்யில் வீழ்கிறது.

முற்றத்தினிலே பார்க்கின்றேன்,
முதல்நாள் இருந்த மொட்டொன்று
புத்தம் புதிய பூவாகப்
பூத்துச் சிரித்து நிற்கிறது.

நானே கையால் நட்டசெடி.
நானே தண்ணீர் வார்த்தசெடி,
ஆனபடியால் என்னைப் பார்த்
தங்கே நின்று சிரிக்கிறது.

இதற்கு மட்டும் பேசுவதற்
கியலாதிருந்த தின்றைக்கே
முதற்பூ பூத்தென் செவ்வந்தி
முன்னால் நின்று சிரிக்கிறது.

மிக்க வாசம் தருகிறதே,
மிகவும் மெத்தென் றிருக்கிறதே.
அக்காள் தலையிற் சூடிடவே
அதனை ஆய விடுவேனே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காவது கடைசி வாரம்!



கிங்ஸ்லி (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) கிரெசென்ட் (புத்தளம்)

ராஜ் (நீர்கொழும்பு) நியூ சினிமா (குருநாகல்)

★ சிவாஜி கணேசன் ★ கே. ஆர். விஜயா

எஸ். வி. சகஸ்ரநாமம், எம். வி. ராஜம்மா, ரங்கராவ், நாகையா, சுந்தரிபாய் நடிக்கும்

# செல்வம்

## வெகு விரைவில் எதிர்பாருங்கள்

# குழந்தையும் தெய்வமும்

## 2-வது வாரம்

சப்பயர் (வெள்ளவத்தை) கெப்பிட்டல் (கொழும்பு)

மொடேன் (பண்டாரவளை) லஷ்சுமி (இரத்தினபுரி)

பிறின்ஸ் (காலி) அசோகா (புத்தளம்)

ஜெய்சங்கர் ஜெயலலிதா நடிக்கும்



# நீ

## 3-வது ஜனத்திரள் வாரம்

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) பிளாசா (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டுநகர்)

நெல்சன் (திருமலை) லிபேட்டி (பதுளை)

ஜெமினி கணேசன், சாவித்திரி, பாலாஜி, கே. ஆர். விஜயா. நாகேஷ் நடிக்கும்



# அண்ணாவின் ஆசை

## 5-வது வெற்றி வாரம்! கெயிட்டி திரையில்


ரவிச்சந்திரன், பாரதி, எம். வி. இராசம்மா, தங்கவேலு நாகேஷ்

# எங்க பாப்பா

## இதோ மிகவும் விரைவாக வந்து கொண்டிருக்கிறது....!

### சென்ட்ரல் மற்றும் சிலோன் எண்டடெயின்மென்ட்ஸ் திரைகளுக்கு!

ஆங்கிலப் படங்களுக்கு ஒப்பான பயங்கரமிக்க 'எலிகாப்டர்' விமான கண்டைக் காட்சிகள்! காளையரை மயங்க வைக்கும் கவர்ச்சி நடனங்கள் வாலிப உள்ளத்தை கவர்ந்திழுக்கும் காதற் கட்டங்கள்! கண்ணைக் கவரும் வர்ணத்தில் கவர்ச்சித் தோற்றங்கள்! களிப்பூட்டும் நகைச் சுவைகள் இன்னும் பல சிறந்த அம்சங்களைக் கொண்ட ஒப்பற்ற திரை யோவியம்.



* ஜெய்சங்கர்
* கே. ஆர். விஜயா
★ பாலாஜி
★ மனோகர்
★ நாகேஷ்
★ வி. கே. ராமசாமி
★ ஜாவர் சீதாராமன்
★ ஜோதிலட்சுமி
★ விஜயநிர்மலா

மற்றும் பலர் நடித்தது

வீனஸ் பிக்சர்ஸார் அளிக்கும் சாரதா புரொடக்ஷன்ஸ்

# பட்டணத்தில் பூதம்

ஈஸ்ட்மென் கலர்

டைரெக்ஷன்: எம். வி. ராமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ. இலக்கத்தில் 1967-ம் வருடம் ஜூன் மாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.